Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

# தினமுரசு

தினப்பதிப்பு

THINAMURASU

முரசு - 03 திருவள்ளுவர் ஆண்டு 2043 தை 12 வெள்ளிக்கிழமை (25.01.2013) பக்கங்கள் 20 ஓசை - 117

Tilko Jaffna City Hotel
TILKO
❖ Banguet Hall
❖ Conference Hall
❖ Restaurant
❖ Luxurious rooms
❖ Swimming Pool
❖ Gymnasium/Spa
70/6, K.K.S Road, Jaffna.
T.P - 0212225969
E.Mail - tilkojaffna@gmail.com
Hotline: 0212229497
Web - www.Cityhoteljaffna.com
(C/2278)
















# இந்தியாவின் உதவிகள் தொடர்ந்தும் கிடைக்கும்



## புதுடில்லி சந்திப்பில் உறுதி

(புதுடில்லி)

இலங்கை அரசுக்கு இந்தியா எல்லாவகையிலும் உதவி வழங்கத் தயாராக உள்ளது என்றும் ஆசிய பொருளாதாரம் மற்றும் பாதுகாப்பு விடயங்களில் முழு அளவிலான ஒத்துழைப்பு வழங்கப்படும் எனவும் இந்திய பிரதமர் மன்மோகன் சிங் தெரிவித்துள்ளார். இலங்கையின் சகல விவகாரங்களிலும் இந்தியா ஒத்துழைப்பு வழங்கும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். இந்தியாவிற்கு விஜயம் செயதுள்ள வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ், பிரதமரை நேற்று முன்தினம் சந்தித்த போது இத்த உறுதிமொழியை இந்தியப் பிரதமர் அளித்துள்ளார்.

இரு தரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்திக் கொள்ள கூடுதலான முனைப்பு எடுக்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கை இந்தியாவிற்கு இடையிலான கூட்டு ஆணைக்குழு அமர்வுகள் உறவுகளை வலுப்படுத்திக் கொள்ள வலிகோலும் என அவர் குறிப்பிட்டுள்ளார். இருதரப்பு உறவுகளை வலுப்படுத்திக் கொள்ள இரண்டு நாடுகளும் எடுத்துவரும் முயற்சிகள் பாராட்டுக்குரியவை என பிரதமர் மன்மோகன் சிங் தெரிவித்துள்ளார்.

## இலங்கை இராணுவத்திற்கு இந்தியாவில் பயிற்சி தொடரும்

இலங்கைப் படையினருக்கு தொடர்ச்சியாக இராணுவப் பயிற்சி வழங்கப்படும் என இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் ஏ.கே. அன்டனி தெரிவித்துள்ளார். தமிழக முதல்வர் உள்ளிட்ட தமிழக அரசியல்வாதிகள் இலங்கைப் படையினருக்கு இந்தியாவில் இராணுவப் பயிற்சி வழங்கக்கூடாது என வலியுறுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. நட்பு நாடான இலங்கைக்கு பயிற்சி வழங்கும் திட்டங்களில் மாற்றமில்லை என (19) ஆம் பக்கம் பார்க்க

## ஐ.நா. உணவு விவசாய ஸ்தாபனம் தலைமைப் பொறுப்பு இலங்கை வசம்

ஐக்கிய நாடுகள் அமைப்பின் உணவு மற்றும் விவசாய அமைப்பின் தலைமைப் பொறுப்பு இலங்கைக்கு வழங்கப்பட்டுள்ளது. ரோமை தலைமையகமாகக் கொண்டு இயங்கிவரும் ஐக்கிய நாடுகள் அமைப்பின் உணவு மற்றும் விவசாய அமைப்பின் 2013 ஆம ஆண்டுக்கான தலைமைப் பொறுப்பு இலங்கைக்கு வழங்கப்பட்டுள்ளது. ரோமிற்கான இலங்கைத் தூதுவர் ஹசித பெரேரா இந்த அமைப்பின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். போட்டியின்றி இந்தப் பதவிக்கான தலைமைப் பொறுப்பு ஹசித பெரேராவிற்கு வழங்கப்பட்டுள்ளது. (19) ஆம் பக்கம் பார்க்க

## பொதுநலவாய மாநாட்டில் கனடா கலந்துகொள்ளும் அறிகுறி

### இராஜதந்திரிகள் குழு கொழும்பு வருகிறது

(கொழும்பு)

கொழும்பில் இடம்பெற இருக்கும் பொதுநலவாய நாடுகளுடனான மாநாட்டில் கனடா கலந்து கொள்ளுவதற்கான வாய்ப்புக்கள் அதிகரித்துள்ளன. இதன முதற்கட்டமாக கொழும்பு நிலைவரத்தை அறிந்து கொள்வதற்காக கனேடிய இராஜதந்திரிகள் குழு ஒன்று அடுத்த வாரமளவில கொழும்பு வரவுள்ளது.

அதேவேளை கனடாவில் உள்ள இலங்கை உயர்ஸ்தானிகரை அழைத்து கனடா அதிருப்தி வெளியிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. நாட்டின் நிலைமைகள் குறித்து உன்னிப்பாக அவதானிக்கப்பட்டு வருவதாகக் அந்நாட்டுக்கான இலங்கை உயர்ஸ்தானிகர் சித்ராங்கனி வகீஸ்வராவிடம் தெரிவிக்கப்பட்டுள்ளது. கனேடிய வெளிவிவகார அமைச்சர் ஜோன் பெயார்ட், இலங்கை உயர்ஸ்தானிகரிடம் இதனைக் குறிப்பிட்டுள்ளார். எதிர் வரும் பொதுநலவாய நாடுகள (19) ஆம் பக்கம் பார்க்க

### வடக்கில் படைமுகாம்கள் தொடர்ந்தும் இருக்கும்

வடக்கில் அவசர தேவைகளின் நிமித்தம் படையினர் தொடர்ந்தும் நிலைகொண்டிருப்பர் என்று பாதுகாப்புச் செயலர் கோத்தாபய ராஜபக்ஷ தெரிவிததுளளார். வடக்கில் சிவில் நிர்வாகமே இடம்பெற்று வருகின்றது. (19) ஆம் பக்கம் பார்க்க

## முன்னாள் புலி உறுப்பினர்களுக்கு உதவி வழங்குவதில் பாரபட்சமா?

### பாதிக்கப்பட்டவர்கள் விசனம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி முல்லைத்தீவு மாவட்டங்களில் உள்ள புனர்வாழ்வு பெற்ற முன்னாள் போராளிகளுக்கு அரச, அரச சார்பற்ற நிறுவனங்களால் உதவிகள் வழங்கப்படுகின்ற போதிலும் பலருக்கு இவ்வுதவிகள் எதுவும் கிடைப்பதில்லை என பாதிகப்பட்டவர்களால் தெரிவிக்கப்படுகிறது. புனர்வாழ்வு பெற்ற முன்னாள் போராளிகளுக்கு அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் முகமாக சுயதொழிலை மேம்படுத்துவதற்காக (19) ஆம் பக்கம் பார்க்க

## பயங்கரவாதம் தலையெடுத்தால் எதிர்கொள்ள புதிய சட்டம் தேவை

### இராணுவ விசாரணையின் பின் சிபார்சு

(கொழும்பு)

மீண்டும் நாட்டில் பயங்கரவாதமும் உள்நாட்டு யுத்தமும் ஏற்பட்டால் அவற்றை எவ்வாறு எதிர்கொள்வது என்றும், அவற்றைத் தடுத்து நிறுத்துவதற்கு தனித்துவமான புதிய சட்டம் உருவாக்கப்பட்ட வேண்டும் என்று உள்ளக இராணுவ விசாரணை அறிக்கையில் சிபார்சு செய்யப்பட்டிருக்கிறது.

நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகளுக்கு அமைய இராணுவத் தளபதியினால் நியமிக்கப்பட்ட இராணுவ விசாரணைச் சபையின் அறிக்கை, பாதுகாப்பு செயலர் கோத்தாபய ராஜபக்ஷவிடம் இராணுவத் தளபதி ஜகத் ஜயசூரிய நேற்றுக் கையளித்தார். இறுதி யுத்தத்தின் போது மனித உரிமை மீறல்கள் இடம்பெற்றுள்ளனவா? சர்வதேச யுத்த விதிமுறைகள் மீறப்பட்டுள்ளனவா? என்பது தொடர்பில் ஆராய்வதற்காகவே இந்த இராணுவ விசாரணை சபை, இராணுவ தளபதியினால் நியமிக்கப்பட்டது இந்த விசாரணை சபை. யின் அறிக்கை இராணுவத்தளபதியினால் ஆராயப்பட்டதன் (19) ஆம் பக்கம் பார்க்க

## பிரித்தானிய அமைச்சர் கொழும்பு வருகிறார்

பிரித்தானிய வெளிவிவகார அமைச்சர் அலிஸ்டர் பர்ட், அந்நாட்டுக்கான இலங்கை உயர்ஸ்தானிகர் கிறிஸ் நோனிஸை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார். அலிஸ்டர் பர்ட் எதிர் வரும் வாரமளவில் இலங்கைக்கு விஜயம் செய்ய உள்ளார் (19) ஆம் பக்கம் பார்க்க



# பன்னங்கண்டியில் காணிகளற்றவர்களுக்கு யூனியன்குளத்தில் சொந்தக் காணிகள்



(கிளிநொச்சி)

சொந்தக் காணிகளின்றி வயற்காணிகளில் வசிக்கும் பன்னங்கண்டி பிரதேசத்தைச்சேர்ந்த 36 குடும்பங்களுக்கு நிரந்தர காணிகளை வழங்க ஈ.பி.டி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார்.

பல தசாப்தங்களாக சொந்தக் காணி இன்றி அரசுக்குரிய மற்றும் தனியாருக்கு சொந்தமான தாழ்நிலப் பகுதிகளில் வாழ்ந்து வந்த கிளிநொச்சி பன்னங்கண்டி பிரதேசத்தைச் சேர்ந்த மக்கள் மழை வெள்ள அனர்த்தத்தால் இடம்பெயர்ந்து பன்னங்கண்டி பாடசாலையில் தஞ்சமடைந்தனர்.

இந்நிலையில் இவர்களுக்கு சொந்தமாக காணிகளை வழங்குவதற்கு ஈ.பி.டி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினரும் குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார் நடவடிக்கைகளை மேற்கொண்டுள் ளார்.

இதற்கமைவாக இம்மக்களுக்கு கரைச்சி யூனியன் குளப் பிரதேசத்தில் தலா அரை ஏக்கர் காணிகளையும் வீட்டுத்திட்டங்களையும் வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அதனடிப்படையில் கடந்த 20 ஆம் திகதி யூனியன்குளத்திற்கு சென்ற பன்னங்கண்டி பிரதேசத்தைச் சேர்ந்த சுமார் 36 வரையான குடும்பங்களின் தலைவர்கள் அப்பகுதியில் தமக்கு வழங்கப்படவுள்ள காணிகளைப் பார்வையிட்டனர்.

அத்தோடு குறித்த காணிகளை துப்புரவு செய்வதற்கும் தற்காலிக இருப்பிடங்களை அமைத்துத் தருவதற்கும் உதவுமாறு ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் கிளிநொச்சி மாவட்ட அமைப்பாளர் தவநாதனிடம் அம்மக்கள் கேட்டுக் கொண்டனர்.

இதற்கமைய நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமாரின் ஏற்பாட்டில் காணிகளை துப்புரவு செய்வதற்கும் தற்காலிக இருப்பிடங்களை அமைத்துக் கொடுப்பதற்கும் உடனடியாக காணிகளை அளவீடு செய்து கொடுப்பதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

இம்மக்களுடன் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் கிளிநொச்சி மாவட்ட அமைப்பாளர் தவநாதன், கரைச்சி பிரதேசசபை உறுப்பினர் இராமச்சந்திரன், கரைச்சி பிரதேசசெயலகத்தின் உதவித் திட்டப்பணிப்பாளர் அமல்ராஜ், கரைச்சி பிரதேச செயலக காணி அலுவலர் சிவகுமார் கோணாவில் கிராம அலுவலர் ஜெயந்தன் ஆகியோரும் ஸ்தலத்திற்கு சென்றிருந்தனர்.




**குருநகர் சென்.ஜேம்ஸ் மகா வித்தியாலய பழைய மாணவன் றெக்ஸ்பிலிப் புதிய பான்ட் வாத்தியத்தை அதிபர் த.ஞானப்பிரகாசத்திடம் கையளிப்பதைக் காணலாம். உப அதிபர், சிலுவைதாசன் (ஜே.பி) ஆகியோரும் அருகில் காணப்படுகின்றனர். (68)**

## பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர சபையின் 2013 ஆம் ஆண்டுக்கான முதலாவது மாதாந்த பொதுக்கூட்டம் எதிர்வரும் 31 ஆம் திகதி வியாழக்கிழமை பி.ப. 2.00 மணிக்கு முதல்வரின் மாநாட்டு மண்டபத்தில் முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா தலைமையில் நடைபெறும்.

☆ ☆ ☆ ☆

(யாழ்ப்பாணம்)

மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் தலைமைச் செயலகத்தால் யாழ். நகரிலுள்ள சுபாஸ் விடுதியில் எதிர்வரும் 27 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு ஒழுங்கு செய்யப்பட்ட சாரதி பயிற்சிப் பாடசாலைகளின் பயிற்றுவிப்பாளர்களுக்கான கருத்தரங்கிற்கு தலைமைச் செயலக உயரதிகாரிகளும் கலந்து கொள்ளவுள்ளதால் வடமாகாணத்திலுள்ள சகல சாரதி பயிற்சி பாடசாலைகளிலும் பணியாற்றும் அனைத்து பயிற்றுவிப்பாளர்களையும் தவறாது சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

# குருநகர் சீநோர் தொழிற்சாலைக்கு வலை உற்பத்தி இயந்திரங்கள்



(யாழ்ப்பாணம்)

இந்திய அரசாங்கத்தினால் குருநகர் சீநோர் வலைத் தொழிற்சாலைக்கு 140 மில்லியன் ரூபா நிதியில் வலை உற்பத்தி இயந்திரங்கள் ·கையளிக்கப்பட்டு இயந்திரங்களை பொருத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றதாக இலங்கைக்கான இந்தியத் துணைத் தூதுவர் மகாலிங்கம் தெரிவித்தார்.

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் நோர்த் சீ நிறுவனத்தின் பொது முகாமையாளர் எப்.கேதீஸ்வரன் தலைமையில் இவ் இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

நைலோன், பப்ரிக் வலை கழுவுவதற்கான மற்றும் வலை மடிப்பு, பொதியிடுதல் போன்றவற்றினை மேற்கொள்வதற்காக இந்திய அரசாங்கத்தினால் இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இவ் இயந்திரங்கள் மூலம் சிறுவலை, பெருவலை உற்பத்திகளை மேற்கொள்வதுடன் கைகளினாலும் வலைகள் பின்னப்பட்டு மீனவர்களுக்கு வழங்கப்படுகின்றதாகவும் அவர் கூறினார். (25)

# சிறுவர் உரிமை மீறல்களை தடுப்பதற்கு தீவிர நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

சிறுவர் உரிமை மீறல் தொடர்பில் அறிக்கை இடுதல் தொடர்பில் சமூகத்தின் நம்பிக்கையைக் கட்டியெழுப்பும் செயற்திட்டம் ஒன்று நேற்று முன்தினம் கிளிநொச்சி மாவட்ட கண்டாவளை பிரதேச செயலர் பிரிவில் இலங்கை மனித உரிமை ஆணைக் குழுவின் யாழ். காரியாலயத்தினால் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

சுமார் ஆறு மாதங்களைக் கொண்ட இந்தச் செயற்திட்டம் கண்டாவளை பிரதேச செயலர் பிரிவில் முதற்கட்டமாக ஆரம்பித்து வைக்கப்பட்டிருப்பதாக இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். காரியாலய இணைப்பாளர் ரி.கனகராஜ் தெரிவித்தார்.

மேலும் இந்தச் செயற்திட்டம் வரும் புதன்கிழமை பச்சிலைப் பள்ளி பிரதேச செயலர் பிரிவிலும் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

பிரதேச செயலர் மட்டத்தில் பணியாற்றும் சிறுவர் உரிமை தொடர்பில் அரச, அரசசார்பற்ற நிறுவன மட்டத்தில் பிரதேசத்தில் ஏற்படும் சிறுவர் உரிமை மீறல்களை அடையாளம் கண்டு அந்தச் சமூகத்திற்கு அது தொடர்பில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் நிகழ்ச்சித் திட்டத்தைத் தயாரித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவது இதன் நோக்கமாகும் எனவும் இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். காரியாலய இணைப்பாளர் ரி.கனகராஜ் மேலும் தெரிவித்துள்ளார்.

இந்தத் திட்டத்திற்கு இலங்கை மனித உரிமை ஆணைக் குழு அலுவலர் ஒருவரையும் நியமித்திருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (பா)

# கைவிடப்பட்ட வாகனங்களில் 1724 உரியவர்களிடம் கையளிப்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த யுத்த அனர்த்தத்தின் போது மக்களால் கைவிடப்பட்ட வாகனங்களில் இதுவரை 1724 வாகனங்கள் உரியவர்களிடம் மீளளிக்கப்பட்டுள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட 'செயலகம் தெரிவித்துள்ளது.

யுத்தம் நிகழ்ந்த காலப்பகுதியில் இம்மாவட்டத்தில் முல்லைத்தீவு, கிளிநொச்சி, வவுனியா, யாழ்ப்பாணம், மன்னார், கொழும்பு, புத்தளம், குருநாகல், திருகோணமலை ஆகிய 9 மாவட்டங்களைச் சேர்ந்த மக்களின் வாகனங்கள் கைவிடப்பட்டிருந்தன.

இந்நிலையில் கடந்த வருட மார்ச் மாதம் கைவிடப்பட்ட வாகனங்களை உரியவர்களிடம் மீளளிக்கும் செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டு நவம்பர் மாதம் 8 ஆம் திகதியுடன் நிறைவடைந்தது.

இதில் வாகனங்களின் உரிமையாளர்கள் கைவிடப்பட்ட வாகனங்களை பார்வையிட்டு, அதற்குரிய ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் மாவட்ட செயலகத்தால் வாகனங்கள் உரியவர்களிடம் மீளளிக்கப்பட்டது.

அந்த வகையில் குறித்த காலப் பகுதியில் 1724 வாகனங்கள் கையளிக்கப்பட்டிருப்பதாக செயலகத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளது. (04)

# தமிழ்ச்சங்க பரிசளிப்பு விழா

கொழும்பு தமிழ்ச் சங்கம் கடந்த வருடம் நடத்தி முடித்திருந்த இலங்கையர் கோன் நினைவு சிறுகதைப் போட்டி, நாவலர் ஞாபகார்த்த கட்டுரைப் போட்டி மற்றும் குறுந்திரைப்படப் போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்கு நாளை மாலை 5.00 மணிக்கு பரிசளிப்பு வைபவத்தை நடத்தவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி போட்டிகள் அகில இலங்கை மட்டத்தில் நடத்தப்பட்டுள்ளதால் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை போன்ற இடங்களிலிருந்தும் பரிசுக்குரியோர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

தூர இடங்களில் இருந்து செல்லும் பரிசாளர்களின் போக்குவரத்துச் செலவுகளை சங்கம் பொறுப்பெடுத்து வழங்குமென அவர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள கடிதங்களில் அறிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (68)





**யாழ். உயரப்புலம் மெ.மி.த.க வித்தியாலயத்தில் நடைபெற்ற கால்கோள் விழாவில் அதிபர், உப அதிபர், ஆசிரியர்கள் விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும், மாணவர்களுடன் ஆசிரியர்கள் காணப்படுவதையும் காணலாம். (137)**

# மாணவர்கள் சிறுவயதிலிருந்தே சேமிப்பதற்குப் பழக வேண்டும்

## அரச ஈட்டு முதலீட்டு வங்கியின் யாழ். கிளை முகாமையாளர்

(யாழ்.நிருபர்)

வடக்கு மாகாண மக்களின் வதிவிடத் தேவைகளைப் பூர்த்தி செய்து அவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதே எமது வங்கியின் நோக்கமாகும். அரச பாதுகாப்பு உத்தரவாதமுள்ள எமது வங்கி சிறுவர் சேமிப்புக் கணக்குகளுக்கு அதிகளவிலான வட்டி வீதத்தினை வழங்குவதால் மாணவர்கள் எமது வங்கியில் சேமிப்புக் கணக்கினை ஆரம்பிக்க முன்வர வேண்டும் என அரச ஈட்டு முதலீட்டு வங்கியின் யாழ். கிளை முகாமையாளர் க.நடராஜமூர்த்தி தெரிவித்தார்.

அரசாங்கத்தின் பாடசாலை மாணவர்களுக்கான இலவச பால் விநியோகத் திட்டத்தினை கோண்டாவில் இந்து மகா வித்தியாலயத்தில் சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைத்து உரைநிகழ்த்தியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கல்லூரி அதிபர் கே.கே.தவகீஸ்வரன் தலைமையில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற இந்நிகழ்வில் வங்கி முகாமையாளர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு வங்கிகளும், வங்கியில்லாத நிதி நிறுவனங்களும் உதவி வருகின்றன. நாட்டில் உள்ள அரச வங்கிகளில் 60 வருட பழமைவாய்ந்த வங்கி எமது வங்கியாகும். கடந்த 30 வருட போர் அனர்த்தங்களினால் வடபகுதி மக்களுக்கு உதவ முடியாமல் போய்விட்டது.

இப்போது யாழ்ப்பாணத்தில் கிளையை ஆரம்பித்துள்ளோம். எமது வாடிக்கையாளர்களுக்கு வீடுகட்ட, காணி வாங்க, வீடு திருத்த மிகக் குறைந்த வட்டியில் கடன் வழங்கி வருகிறோம். சிறுவர் சேமிப்புக் கணக்குகளுக்கு 7.5 வீத அதிக வட்டியும் அரச பாதுகாப்பும் கிடைக்கிறது.

மாணவர்கள் சிறுவயதில் இருந்து சேமிக்கப் பழக வேண்டும. எறும்புகள் மாரிகால உணவை முன்கூட்டியே சேமித்து வைப்பதுபோல நாமும் பிற்காலத் தேவைக்காக சிறுவயதிலிருந்தே சேமிக்கப் பழகவேண்டும் எனவும் குறிப்பிட்டார். (10)



நெல்லியடிப் பொலிஸ் நிலையத்தின் வருடாந்த அணிவகுப்பு மரியாதை நிகழ்வு கடந்த செவ்வாய்க்கிழமை வடமாகாண பிரதிப் பொலிஸ்மா அதிபர் எரிக் பெரேரா முன்னிலையில் இடம்பெற்றது. இதன்போது பொலிஸ் உத்தியோகத்தர்கள் அணிவகுப்பு மரியாதையில் ஈடுபடுவதைக் காணலாம். (18)

# புங்குடுதீவு மாணவர்களுக்கு பரிசில் வழங்கும் நிகழ்வு



புங்குடுதீவு கிராமத்தில் விளையாட்டு மற்றும் வாசிப்பு போட்டிகளில் பங்குபற்றிய மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

"வளமுள்ள புங்குடுதீவை நோக்கி'' என்ற தொனிப் பொருளில் சமூக பொருளாதார அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் ஏற்பாட்டில் கடந்த மூன்று தினங்களாக விளையாட்டு மற்றும் வாசிப்பு போட்டிகள் நடத்தப்பட்டன.

அமரர் மேரி றெஜினாவின் ஞாபகார்த்தமாக அவரது மகன் றொபினின் ரூபா 1 இலட்சம் நிதிப் பங்களிப்பின் மூலம் கால்பந்தாட்டம், கரப்பந்தாட்டம் மற்றும் ஏனைய போட்டிகளில் பங்குபற்றிய மாணவர்களுக்கு விளையாட்டு உபகரணங்கள் மற்றும் பரிசில்களை ஈ.பி.டி.பி. வேலணை பிரதேச அமைப்பாளரும் வேலணை பிரதேச சபை தவிசாளருமான சி.சிவராசா மற்றும் பிரதேச செயலாளர் மஞ்சுளாதேவி உட்பட பலர் வழங்கிவைத்தனர்.

இதன்போது, "அமைச்சர் டகளஸ் தேவானந்தாவின் முயற்சியால் 100 மில்லியன் ரூபாய் கிடைத்துள்ளது. அதனைக் கொண்டு சில அபிவிருத்தி வேலைத்திட்டங்களை வேலணை பிரதேச சபை எல்லைக்குட்பட்ட அனைத்து இடங்களிலும் மேற்கொள்ளத் தீர்மானித்துள்ளோம் என வேலணை பிரதேச சபையின் தவிசாளர் தெரிவித்தார்.

இந்நிகழ்வில், வேலணை பிரதேச பங்குத் தந்தை உட்பட கிராம சேவையாளர் மற்றும் பாதுகாப்பு படைப்பிரிவினர் பொது மக்களும் கலந்துகொண்டனர். (25)

# தைப்பூசத் திருவிழா

(குருநகர்)

நாகேஸ்வரம் அளவெட்டி மேற்கு, ஸ்ரீநாகவரத நாராயணர் தேவஸ்தானத்தில் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை தைப்பூசத் திருவிழா பக்தி பூர்வமாக நடைபெறவுள்ளது.

காலை 8 மணிக்கு விசேட அபிஷேக ஆராதனைகளுடன் பூசைகள் ஆரம்பமாகும். மூற்பகல் 10 மணிக்கு வசந்தமண்டபப் பூசை நடைபெற்று சுவாமி அலங்காரத் தண்டிகையில் வீதியுலா எழுந்து அடியார்களுக்கு அருள் பாலிப்பார். (68)

# பண்ணை வேலையில் ஈடுபடுவோருக்கு அறிவுறுத்தல்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் சிவில் பாதுகாப்பு பிரிவினரால் பண்ணை வேலைகளுக்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்டு வேலைகள் இடம்பெற்று வருவதுடன் இதில் பல மக்கள் தமது வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நிலையில் பண்ணை வேலை செய்வோர் தமது பிள்ளைகளின் நலனிலும் அக்கறை செலுத்த வேண்டுமெனப் பலராலும் சுட்டிக்காட்டப்படுகிறது.

பண்ணை வேலையில் பல தரப்பட்ட வேலைகள் வழங்கப்படுகின்ற போதிலும் இதில் பெற்றோர்என்ற ரீதியில் தாயோ அல்லது தந்தையோ அல்லது இருவருமோ இங்கு வேலை செய்கின்றனர். இதனால் அவர்களின் பிள்ளைகளின் கல்வி நடவடிக்கைகள் பிறசெயற்பாடுகளில் பெற்றோராகிய இவர்கள் அக்கறை செலுத்துவதில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதில் அவர்கள் பிள்ளைகள் பாடசாலைக்கு சென்றார்களா, படித்தார்களா எனக் கேட்பதுமில்லை. இதனால் அவர்களுடைய கல்விச் செயற்பாடுகள் பாதிக்கப்படும் அபாய நிலை ஏற்படுவதாகவும், இதில் பிள்ளைகள் பிற தகாத செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கும் துஷ்பிரயோகத்திற்கும் உள்ளாகும் சந்தர்ப்பங்கள் நிகழ்வதற்கு வாய்ப்புகள் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தமது பிள்ளைகளின் எதிர்காலத்தைக் கருத்திற் கொண்டு அவர்களைச் சிறந்த ஒரு பிள்ளையாக உருவாக்க இவ்வாறு வேலைக்குச் செல்லும் பெற்றோர் கவனம் செலுத்த வேண்டும் எனப் பலராலும் கோரிக்கை விடுக்கப்படுகிறது. (77)

# மருந்துகளுக்குரிய பாவனை முறை வழங்கப்படுவதில்லையென விசனம்

வைத்தியர்கள் நோயாளர்களுக்கு எழுதிக்கொடுக்கும் மருந்துச் சிட்டைகளுக்கு மருந்தகங்களில் நோயாளர்கள் மருந்தெடுக்கச் செல்லும்போது பல மருந்தகங்களினால் மருந்துகள் பாவிக்கும் முறைகள் உரிய முறைப்படி எழுதிக் கொடுக்கப்படுவதில்லை எனப் பலராலும் புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வைத்தியர்களினால் எழுதி வழங்கப்படும் மருந்துச் சிட்டைகளில் அம்மருந்துகளைப் பாவிக்கும் முறைகள், நேரம், அளவு போன்றன எழுதப்பட்டிப்பது வழமை சிட்டையைக் கொண்டு மருந்தகங்களுக்கு செல்லும் பாவனையாளர்களுக்கு வைத்தியரின் மருந்துச் சிட்டையின் படி மருந்துகள் பாவிக்கும் முறைகளைத் தெரிவிக்கும் வகையில் சிங்காலித் உறைகளில் பாவிக்கும் முறைகள் எழுதப்பட்டு மருந்தகங்களினால் வழங்கப்பட்டு வந்தன.

இம் முறையை தற்போது சில மருந்தகங்கள் மட்டுமே நடைமுறைப்படுத்தி வருவதாகவும் பெரும்பாலான மருந்தகங்கள் இதனைக் கடைப்பிடிப்பதில்லை எனவும் பல பொது மக்களினால் 'குறைகள் தெரிவிக்கப்பட்டுள்ளன. பல மருந்தகங்கள் மருந்துகள் பாவிக்கும் முறைகளை எழுதி வழங்காததுடன் மருந்து வாங்கியதற்கான ரசீதையும் கொடுக்காது கல்குலேட்டரில் கணக்கைப் பார்த்து மொத்தப் பணத்தையும் பாவனையாளர்களிடமிருந்து பெற்றுக்கொண்டு விடுவதாகவும் கூறப்பட்டுள்ளது.

மருந்தகங்களை நம்பிவரும் நோயாளர்களையும், பாவனையாளர்களையும் திருப்திப்படுத்தி அவர்களுக்கான மருந்துகளை வைத்தியரின் சிட்டைக்கான மருந்துகளை வைத்தியரின் சிட்டையின் படி பாவிக்கும் முறைகளை ஒழுங்காக எழுதிக் கொடுக்கப்பட்ட மருந்தகங்களின் உயரிய கடமையாகும் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (137)

# அஹதிய்யா சம்மேளன பரிசளிப்பு வைபவம்

யாழ்ப்பாணம் பிளவ்ஸ் ஹாஜியார் பெனாண்டேஷனுடன் யாழ்.மாவட்ட அஹதிய்யா சம்மேளனம் இணைந்து நடாத்திய முஹர்ரம் (1434) இஸ்லாமிய புதுவருட போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசளிப்பும் அதனோடிணைந்து ஊடகவியலாளர்களை கௌரவிக்கும் வைபவமும் இன்று வெள்ளிக்கிழமை பிப 4.00 மணிககு யாழ் ஒஸ்மானியக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அதிபர் எம்.எஸ்.ஏ.எம்.முபாறக் தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவில் பிரதம விருந்தினராக யாழ். மாநகர முதல்வர் திருமதி. யோகேஸ்வரி பற்குணராசா, கலந்துகொள்ளவுள்ளார்.

இந்த விழாவில் யாழ்ப்பாண மாவட்ட உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஜவ்றி, தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் யாழ. மாவட்ட உதவிப் பணிப்பாளர் த.ஈஸ்வரராசா, யாழ். மாநகர சபையின் உதவி மேயரும் சட்டத்தரணியுமான றணீஷ், யு.ஆர்.பிறண்ட் பவுன்டேசன் நிறுவனத் தலைவர் கே.செவ்வேள் ஆகியோர்களும் கலந்துகொள்ளவுள்ளனர். இதே வேளை இஸ்லாமிய புதுவருடப் போட்டியில் பின்வருவோர் வெற்றி பெற்றுள்ளனர்.

கவிதைப்போட்டி

எம்.வை.எம்.மீஆது (மாவனல்லை), த.பரமலிங்கம் (யாழ்ப்பாணம்), எஸ்.எல்.எம்.அஸ்வர் (வாழைச்சேனை).

கட்டுரைப்போட்டி

எம்.எச்.பாத்திமா சாஹிரா (பாணந்துறை) திருமதி ரதீபா நிஜாம் (நிட்டம்புவ), செல்வி எஸ்.சுவீபா (சண்டிலிப்பாய்). (05, 105)

# தொழிற்சாலைகள் பாதுகாப்பு விளக்கக் கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

தேசத்தின் மகுடம் செயற்திட்டத்தின் கீழ் யாழ்ப்பாணம் மற்றும் அனுராதபுர மாவட்ட தொழிற்சாலைகள் பரிசோதனை பொறியியலாளர் அலுவலகத்தினால் தொழிற்சாலைகள் பாதுகாப்பு தொடர்பான கலந்துரையாடல் ஒன்று எதிர்வரும் 29 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை திருகோணமலை மாவட்ட தொழில் அலுவலக விரிவுரை மண்டபத்தில் நடத்தப்படவுள்ளது.

இக்கலந்துரையாடலில் துறைசார் பொறியியல் வல்லுநர்களினால் தொழிற்சாலையில் பணியாற்றும் பணியாளர்களுக்கு ஏற்படும் பாதிப்புகள் மற்றும் இயந்திரங்களுக்கு ஏற்படும் சேதங்கள் அவற்றினைத் தவிர்க்கும் முறைகள் பற்றி விளக்கமளிக்கப்படவுள்ளது.

கடந்த மாதம் 17 ஆம் திகதி இது போன்றதொரு விழிப்புணர்வுக் கருத்தரங்கு மட்டக்களப்பு மாவட்டத்தில் நடத்தப்பட்டது. எதிர்வரும் பெப்ரவரி, மார்ச் மாதங்களில் யாழ். மாவட்ட தொழிற்சாலைகளின் உரிமையாளர்களுக்கான செயலமர்வு நடத்தப்படவுள்ளது என மாவட்ட தொழிற்சாலை பொறியியலாளர் அலுவலகத்தின் கைத்தொழில் பாதுகாப்புப் பிரிவு சிரேஷ்ட தொழில்நுட்ப உத்தியோகத்தர் க.ஞானேந்திரன் தெரிவித்துள்ளார். (54)

நம்பிக்கை குறையும் போது ஒவ்வொரு மனிதனும் நெறியற்ற கொள்கையை மேற்கொள்கிறான். - ஜான்மில்டன்.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.thinamurasu.net

## கஷ்டப்படும் மக்கள் மீதான கரிசனம்?

தமிழ்த் தரப்பினர் சர்வகட்சி நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் இணைந்து தங்கள் விவகாரத்தைப் பேசவேண்டும், 13வது திருத்தத்தை அடிப்படையாகக் கொண்ட அதிகாரப் பகிர்வே சாத்தியமானது, அதனடிப்படையில் தீர்வைக் காண துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என இந்தியா மீண்டும் தெரிவித்துள்ளது.

இலங்கை – இந்திய கூட்டு ஆணைக்குழுக் கூட்டத்திற்காக புதுடெல்லி சென்றிருக்கும் இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்திய பின்னர், இந்திய வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித் இந்தக் கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்.

இலங்கையில் அதிகாரப் பகிர்வை மேற்கொள்வது குறித்து சர்வகட்சி நாடாளுமன்றத் தெரிவுக்குழுவை அமைப்பதற்கான ஏற்பாடுகளை அரசாங்கம் வடிவமைத்திருக்கிறது, அதில் இணைந்து பிரச்சினைக்குத் தீர்வு காண தமிழ்த் தரப்பினர் வரவேண்டுமென ஜி.எல்.பீரிஸ் குறிப்பிட்டதை அடுத்து, கருத்துத் தெரிவித்த சல்மான் குர்ஷித், 13வது திருத்தத்தைக் கட்டியெழுப்புவதன் மூலம் அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வில் முன்னேற்றத்தை ஏற்படுத்த முடியுமென நாங்கள் கருதுகிறோம், இதுவே தேசிய நல்லிணக்கத்திற்கும் வழிவகுக்கும் என்பதை வலியுறுத்தியுள்ளார்.

இலங்கைத் தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வாக இந்தியா வலியுறுத்தும் இந்தத் திட்டத்தை விட மேலான வேறு எந்தத் திட்டத்தையும் எந்தவொரு சர்வதேச நாடும் சொல்லப் போவதில்லை. இந்த யதார்த்தத்தை நாம் புரிந்துகொள்ள வேண்டும். இதை மறைத்து வேறு கற்பனைகளில் திளைக்க விடுவதன் மூலம் சுயலாப அரசியலையும், வேறு வியாபாரங்களையும் செய்துகொண்டிருப்பவர்களை இனங்காண வேண்டும்.

இந்தியாவும் ஏனைய சர்வதேசமும் திரும்பத் திரும்பச் சொல்லிவருகிற, "13வது திருத்தத்தின் அடிப்படையில் சர்வகட்சித் தெரிவுக்குழுவில் சென்று பேசி சமரசமான ஒரு அதிகாரப் பகிர்வுக்கு வாருங்கள்" என்கிற வலியுறுத்தலை காதிலேயே கேளாத மாதிரி, "தீர்வை எடுத்துத் தர சர்வதேசம் வரும்" என்று தமிழ்மக்களின் காதில் தொடர்ந்து பூ சுற்றிக் கொண்டிருக்கிறவர்கள், இப்போதாவது மக்களுக்கு நேர்மையாகப் பதில் சொல்ல வேண்டாமா?

எந்தச் சர்வதேசம் எந்தத் தீர்வை எடுத்துத்தர இங்கு வரவிருக்கிறது என்பதைச் சொல்ல வேண்டாமா? மந்திரத்தில் மாங்காய் விழும் என்று சொல்கிறவர்களைப் பார்த்து, எந்த மாங்காய் எங்கே இருந்து எப்படி எப்போது விழப்போகிறது என்றாவது நாம் கேட்க வேண்டாமா? எதையும் கேளாமல் வெட்டவெளியை அண்ணாந்து பார்த்துக் கொண்டிருப்போமானால், எங்களை அந்தச் சர்வதேசம் கூட எப்படி நினைத்துக் கொள்ளும்?

நடைமுறையில் சாத்தியப்படக் கூடியதை சிந்தித்து, சாத்தியப்படக் கூடியவற்றைப் பேசி, சாத்தியமானதை எடுத்துக் கொண்டு முன்னகரும் விவேகத்தை நாம் காண்பிக்கவே மாட்டோமா? நம் விருப்பங்கள் ஆகாயமளவுக்கு இருக்கலாம். அதையெல்லாம் அள்ளியெடுத்து விடலாம் என்று காட்டிக் காட்டி வீரமும் பெருமையும் பேசி, மக்களை சேற்றிலும் முட்களிலும் நடக்க விடுவது ஏமாற்றும் வஞ்சனையுமல்லவா!

மற்றவர்கள், மற்ற சமூகத்து மக்கள் நினைப்பது பற்றியெல்லாம் நமக்குக் கவலையில்லை. நாம் நினைப்பதைத் தரவேண்டும்; அல்லாமல் வேறெதையும் பேசமாட்டோம் என்று அடம் பிடிப்பது, ஒருவகையில், நிலவைக் கையில் பிடித்துத் தரக்கேட்கும் குழந்தைத்தனமல்லவா!

அவர்கள் இறங்கி வராமல், நாங்கள் எதற்கு இறங்கிப் போக வேண்டும் என்று ரோசத்தைக் காட்டிக்கொண்டிருப்பது, கஷ்டப்படுகிற மக்களைக் கவனத்திலெடுக்காத, வசதிபடைத்தவர்களின் வறட்டு வீம்பாகத்தானிருக்க முடியும். - ஆசிரியர்

# கரைச்சி வடக்கு ப.நோ.கூ.சங்கம் 328 மில்லியன் ரூபாவை இழந்தது

(வன்னி)

வன்னியில் இடம்பெற்ற இறுதி யுத்தத்தின் போது தங்கள் சங்கத்திற்கு 328.6 மில்லியன் ரூபா இழப்பு ஏற்பட்டுள்ளதாக கரைச்சி வடக்கு பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வன்னியில் யுத்தகாலத்தில் இயங்கிய கூட்டுறவுச் சங்கங்களில் கிளிநொச்சி கரைச்சி வடக்கு பலநோக்கு கூட்டுறவுச் சங்கமும் ஒன்று.

இச்சங்கத்திற்கு பெருமளவு அசையும் மற்றும் அசையா சொத்துக்கள் இருந்தன. ஆனால் இறுதியுத்த காலத்தில் அவற்றில் பெரும்பாலானவையை சங்கம் இழந்துள்ளது.

குறிப்பாக சங்கம் வெளியிட்டுள்ள குறிப்பின் படி பொருள் இழப்பாக 132 மில்லியனும், கிளை கட்டட இழப்பாக 157 மில்லியனும், இயந்திரங்கள் இழப்பாக 16 மில்லியனும், தளபாட இழப்பாக 7.8 மில்லியனும், களஞ்சிய உபகரண இழப்பாக 3 மில்லியனும், வாகன இழப்பாக 12.8 மில்லியனுமாக மொத்தம் 328.6 மில்லியன்கள் சங்கத்தின் இழப்பு என தெரிவிக்கப்படுகிறது.

மீள் குடியேறிய பின்னர் இச் சங்கமும் பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியில் தங்களை மீள கட்டியெழுப்பி வருகின்ற நிலையில் வழமை போன்று இயங்குவதற்கு சங்கத்திற்கு போதுமான நிதியின்மை பெரும் பிரச்சினையாக இருப்பதாக கவலை வெளியிடப்பட்டுள்ளது.

சங்கத்தினர் மீள் குடியேறிய பின்னர் தங்கள் சங்கம் 115 தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்குவதாகவும் ஆனால் வழமை போன்று செயற்பாடுகளை முன்னெடுக்க முடியாமல் இருப்பதாகவும் குறிப்பிடுகின்றனர்.

# சோனப்பு மயான வீதி புனரமைக்கப்படுவது எப்போது?

(கரவெட்டி)

கரவெட்டி சாமியன் அரசடிச் சந்தியிலிருந்து சோனப்பு மயானம் செல்லும் வீதி மிக மோசமாக சேதமடைந்துள்ளதால் இவ்வீதியூடாக பயணிப்பதில் சிரமங்களை எதிர்நோக்குவதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். இவ்வீதி நீண்டகாலமாக திருத்தப்படாமல் குண்டும் குழியுமாக காணப்படுவதாகவும் இதனால் வாகனப் போக்குவரத்துக்கள் மேற்கொள்வதில் நெருக்கடி நிலை காணப்படுகிறது.

குறிப்பாக இவ்வீதியால் வைத்தியசாலையும் அறநெறிப்பாடசாலையும் அமைந்துள்ளதால் இவ்வீதியூடாக நாளாந்தம் அதிகளவான மக்கள் தமது பயணத்தை மேற்கொள்கின்றனர்.

இந்நிலையில் இவ்வீதி சேதமடைந்திருப்பது குறித்து பல தடவை உரிய தரப்பினருக்கு தெரியப்படுத்தியும் இதுவரை அதற்கான எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை எனத் தெரிவிக்கும் மக்கள் இனியாவது இவ்வீதியை புனரமைக்க நடவடிக்கை எடுப்பார்களா என கேள்வி எழுப்புகின்றனர். (18)

# மக்களுக்கு வழங்க கொள்வனவு செய்த உணவுப் பொருட்களே பதுக்கிவைப்பு

(மன்னார்)

மன்னார் பல நோக்கு கூட்டுறவுச்சங்கத்தின் களஞ்சியசாலைக்குள் பதுக்கி வைக்கப்பட்ட பல இலட்சம் ரூபாய் பெறுமதியான உலர் உணவுப் பொருட்கள் அனைத்துமே இறுதி நேரத்தில் வெள்ளப் பாதிப்புக்கள் ஏற்படும் பட்சத்தில் மன்னார் தீவுக்குள் இடம்பெயர்ந்து வரும் மக்களுக்கு வழங்குவதற்காக மன்னார் மாவட்டச் செயலகத்தினால் கொள்வனவு செய்யப்பட்டு மன்னார் மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பணிப்பாளரிடம் ஒப்படைக்கப்பட்ட நிலையில் அங்கு களஞ்சியப்படுத்தப்பட்ட பொருட்களே பழுதடைந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

கடந்த டிசம்பர் மாதம் மன்னாரில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கினைத் தொடர்ந்து பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்க கொள்வனவு செய்யப்பட்ட பல இலட்சம் ரூபாய் பெருமதியான உலர் உணவுப் பொருட்களை கடந்த டிசம்பர் மாதம் 28 ஆம 29 ஆம் திகதிகளில் மாவட்ட அனார்த்த முகாமைத்துவப் பணிப்பாளர் மற்றும் பணியாளர்கள் மன்னார் பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் களஞ்சிய சாலையில் களஞ்சியப்படுத்தியுள்ளனர்.

மன்னார் மாவட்டச் செயலகத்தின் வேண்டுகோளுக்கு அமைவாகவே மன்னார் பலநோக்கு கூட்டுறவுச்சங்கம் தமது களஞ்சியசாலையில் பொருட்களை கலஞ்சியப்படுத்துவதற்கான அனுமதியை வழங்கி இருந்தது.

இதன் போது அரிசி, மா, சீனி, பருப்பு, உருளைக்கிழங்கு, பெரிய வெங்காயம், மீன் ரின் போன்றவை களஞ்சியப்படுத்தப்பட்டது. இந்த நிலையில் ஜனவரி மாதம் முதல் வாரமளவில் தம்மிடம் உலர் உணவுப்பொருட்கள் எவையும் கையிருப்பில் இல்லை என இதற்கு பொறுப்பான அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் குறித்த களஞ்சியசாலையில் பொருட்கள் களஞ்சியப்படுத்தி சுமார் 20 நாட்கள் வரை மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பணிப்பாளர் அங்கு வந்து பொருட்களின் நிலைமையை பார்வையிடவில்லை.

இந்த நிலையில் பெரிய வெங்காயம் மற்றும் உருளைக்கிழங்கு ஆகியவை படிப்படியாக பழுதடைந்து சுமார் 160 மூடைகளுக்கு மேற்பட்ட வெங்காயம் மற்றும் உருளைக்கிழங்குகள் முழுமையாக பழுதடைந்து பாரிய துர்நாற்றம் வீச ஆரம்பித்தது. இந்த நிலையிலேயே இவற்றை அப்புறப்படுத்த நடவடிக்கைகளை மேற்கொண்ட போது குறித்த பொருட்கள் பதுக்கி வைத்த விடயம் அம்பலமாகியது. குறித்த பொருட்களை வெளியில் கொண்டு சென்று விற்பனை செய்வதற்காக அல்லது தனிப்பட்ட முறையில் பகிர்ந்தளிப்பதற்காகவே நீண்ட நாட்களாக பதுக்கி வைக்கப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது. எனவே பாதிக்கப்பட்ட மக்களுக்கு குறித்த பொருட்களை உரிய நேரத்திற்கு வழங்காது அவற்றைப் பதுக்கி வைத்து பழுதடைந்த நிலையில் வெளியில் கொட்டும் இந்த நடவடிக்கைக்கு துணைபோன அதிகாரிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என மன்னார் மக்களும் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களும் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இவ்விடயம் தொடர்பில் சில பிரமுகர்களி னால் அனர்த்த முகாமைத்துவ அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது.

# யாழ்.கடற்றொழில் திணைக்களத்திற்கு படகுகள், இயந்திரங்கள் வழங்கல்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட கடற்றொழில் மற்றும் நீரியல் வளத்துறை திணைக்களத்திற்கு 15 படகுகளும் 15 இயந்திரங்களும் வழங்கப்பட்டுள்ளன. 2012ஆம் ஆண்டிற்கென கடற்றொழில் மற்றும் நீரியல் வளத்துறை அமைச்சால் ஒதுக்கப்பட்ட 26 மில்லியன் ரூபா நிதியில் யாழ். மாவட்டத்தில் கடற்கரைப் பிரதேசங்களில் பொதுமண்டபங்கள் மற்றும் சந்தைகள் உட்பட பல்வேறு தேவைகளுக்கான 8 கட்டடங்கள் அமைக்கப்பட்டன. எஞ்சிய நிதியிலிருந்தே படகுகளும் இயந்திரங்களும் வழங்கப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட கடற்றொழில் மற்றும் நீரியல் வளத்துறை அதிகாரியொருவர் தெரிவித்தார். இவ்வாறு வழங்கப்பட்டுள்ள 15 படகுகளும் 15 இயந்திரங்களும் மீள்குடியமர்ந்த கடற்றொழிலாளர்களுக்கு வழங்கப்படவுள்ளதாகவும் அவர் கூறினார். (25)

# வாபஸ் பெறப்பட்டது முறைப்பாடு

பயங்கரவாத தடுப்பு புலனாய்வுப்பிரிவினரினால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்து விடுதலை செய்யப்பட்ட யாழ். பல்கலைக்கழக மாணவன் சண்முகம் சொலமன் என்பவரின் தயார் இலங்கை மனிதஉரிமை ஆணைக்குழுவின் யாழ்.காரியாலயத்தில் தனது மகனின் விடுதலை குறித்து தெரியப்படுத்தியிருப்பதாக ரி.கனகராஜ் தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே குறித்த பல்கலைக்கழக மரணவன் குறித்து புலனாய்வுப் பிரிவினரினால் கைது செய்யப்பட்டது தொடர்பில் அவரது தாயார் இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். காரியாலயத்தில் முறைப்பாடு ஒன்றை கடந்த வருடம் டிசமபர் மாதம் 14 ஆம் திகதி பதிவு செய்திருந்ததாகவும் தெரிவித்த ரி.கனகராஜ் அதனை அடுத்து மகன் கடந்த செவ்வாய்க்கிழமை விடுதலை செய்யப்பட்ட விடயம் குறித்து தெரியப்படுத்தியுள்ளதாகவும் இதன் அடிப்படையில் இந்த முறைப்பாடு முடிவுறுத்தப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

என்.சத்தியமூர்த்தி கட்டுரையிலிருந்து



**இன்று பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்காவின் வெளியேற்றம் தொடர்பாக ஐ.தே.க வினை யாரும் சம்பந்தப் படுத்துவதில்லை. அதற்குப் பதிலாக சட்டபூர்வத் தன்மை மற்றும் உச்ச நீதிமன்ற தீர்ப்பின்படி, அரசியலமைப்பு நடைமுறைகளை பின்பற்றவில்லை என்று அரசாங்கத்தின்மீதே குற்றம் சாட்டப்படுகிறது. மற்றும் அவையாவும் முற்றாக நீதியற்ற செயல்களாக இல்லாவிட்டாலும் கூட. இருந்தும் பண்டார நாயக்காவுக்கு எதிராக ஐ.தே.க எழுப்பிய அசல் குற்றச்சாட்டுகள் சம்பந்தமாக அதன் நிலைப்பாடு என்ன என்பதை அந்தக்கட்சி நாட்டு மக்களுக்கு விளக்கமளிக்க வேண்டும்.**

# ஷிராணி

## நடந்ததும், நடக்கப்போவதும்

ஷிராணி பண்டார நாயக்காவின் குற்றப் பிரேரணை சம்பந்தமான சுயா தீனமான விடயங்களில் கவனம் செலுத்தும்போது அவர் உச்ச நீதிமன்றத்துக்கு நியமிக்கப்பட்ட அவரது முதலாவது நியமனமே சர்ச்சைகளால் சூழப்பட்டதாக இருந்ததை அவதானிக்க வேண்டும். தனது மிகவும் இள வயதான 38ஆவது வயதிலேயே உச்ச நீதிமன்றத்துக்கு பதவி உயர்த்தப்பட்டு நீதியரசர் ஆன முதல் பெண்மணி, மற்றும் பிர தம நீதியரசர் ஆகும் வாய்ப்பை பெற்ற முதலாவது பெண்மணி, என்கிற பெருமைகளோடு, ஆண்கள் மற்றும் பெண்கள் ஆகிய இருபாலாரிலும் குற்றப் பிரேரணை மூலம் பதவி நீக்கப் பட்ட முதல் பிரதம நீதியரசர் என்கிற பெருமையும் அவ ருக்கு உண்டு. அநேகமாக நாட் டின் வரலாற்றிலேயே சட்டத் தரணியாக பயிற்சி செய்யாமல், சட்ட பட்டதாரி ஒருவர் உச்ச நீதிமன்ற ஆயத்துக்கு நீதியர-சராக தெரிவு செய்யப்பட்டது ஷிராணி பண்டாரநாயக்கா மூல மாக மட்டுமே நடைபெற்றது. 1994இல் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அவரது பெயரை, உச்ச நீதிமன்றத்துக்கு நீதியரச ராக அறிவித்த வேளையில் அவர் கொழும்பு பல்கலைக் கழகத்தின் சட்ட பீடத்தில் ஆரம்பத்தில் ஒரு அங்கத்தவ ராகவும் பின்னர் பீடாதிபதியாக வும் கடமையாற்றி வந்தார்.

அந்த நேரம் அந்த நோக்கம் அதிகாரங்களை நிறுவன ரீதி யற்ற முறையில் நடத்துவத்தாக கருதப்பட்ட நீதித்துறையில், சுத்திகரிப்பை மேற்கொள்வதற் காக செய்யப்பட்டது என்பதால் அது வரவேற்கப்பட்டது. எனவே ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் அவரை 2011 இல் பிரதம நீதியரசர் ஆக நியமித்தார். இரண்டு சந்தர்ப்பங்களிலும் அந்த நியமனங்கள் ஒழுங்கற்ற நடைமுறையில் மேற்கொள்ளப் பட்டதாக சட்டத்தரணிகளிடமும் மற்றும் பலரிடமும் இருந்து எதிர்ப்புகள் எழுந்தன. சிவில் சமூக அமைப்புகள் மற்றும் மனித உரிமைகள் அமைப்புகள் என்பனவும் கூட அவரது நியமனத்தை எதிர்த்தன, மற்றும் பின்னாளில் அவர் நீக்கப்பட்ட பிறகும் அவரது குற்றப் பிரேரணை-யைப் பற்றி அவை கண்டனக் குரல் களை எழுப்புகின்றன.

மிகச் சமீப காலத்தில் பிரதம நீதிய ரசர் ஷிராணி பண்டாரநாயக்கா தலைமை தாங்கும் ஒரு உச்ச நீதிமன்ற ஆயத்தின் முன்பாக வந்த வழக்கொன்றில், அவரது கணவர் பிரதீப் காரியவசம், ஒரு குற்றம் சாட்டப்பட்டவராக நின்றார் என்று ஒரு ஒழுக்கவழுக் குற்றச்சாட்டு சொல்லப்பட்டது. மற்ற நேரங்களிலும் மற்ற நாடுகளிலும் அவருடைய நிலை யில் வேறு எந்த நீதிபதி இருந்திருந் தாலும் அந்த வழக்கை தான் விசாரிக்காமல் அதிலிருந்து விலகி யிருப்பார். பண்டாரநாயக்கா அப்படி செய்வதை தெரிவு செய்த வேளை யில், ஏற்கனவே அவர்மீது குற்றப் பிரேரணை தாக்கலாகி விட்டது. இதன்படி அரசாங்க கட்சிகள், விசாரணைகளிலிருந்து விலகுவதற்கு பதிலாக அவர் தனது கணவரை பாதுகாக்க முயற்சிக்கிறார் என்று விவாதிக்க இடமேற்பட்டது.

சர்ச்சைகளுக்கு மத்தியில் நிற்கும் காரியவசம் முதலில் ஸ்ரீலங்கா காப் புறுதி கூட்டுத்தாபனத்தின் தலைவ ராகவும், மற்றும் வெகு சமீபத்தில் தேசிய சேமிப்பு வங்கியின் தலை-வராகவும், அந்தப் பதவிகளுக்கான நிபுணத்துவமோ அல்லது நிர்வாக அனுபவங்களோ சிறிதளவு அல்லது முற்றாக இல்லாத நிலையில் நியமிக்கப் பட்டிருந்தார். மனைவி ஷிராணி பண்டாரநாயக்கா ஏற்கனவே உச்ச நீதிமன்றத்தில் நீதிபதியாக உள்ளார், மற்றும் அவரது கணவர் அந்தப் பதவிகளை ஏற்பதற்கான தார்மீக மற்றும் சட்டரீதியான கடப் பாடுகளைப்பற்றி தனது கணவருக்கு ஏதாவது அறிவுள்ள ஆலோசனை-களை வழங்கியிருந்தாரா என்பது தெரியவில்லை

அரசாங்க கட்சிகள் அவருக்கு எதிராக குற்றப் பிரேரணை நடவடிக்கைகளை ஆரம்பித்ததும் அரசியலமைப்புக்கு நெருக்கடி தரக்கூடிய ஒரு சிறப்பான வழக்கில் அது சென்று முடியப் போகிறது என்று பிரதம நீதியரசர் பண்டாரநாயக்காவின் மனச்சாட்சி ஒரு நெருக்கடியை ஏற்படுத்தியிருக்க வேண்டும். இது இப்படி இருக்க, பிரதம நீதியரசரின் ஒழுங்கற்ற செயல்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும் என வேண்டுகோள் விடுத்தவர்களில் முன்னணி வகிக்கும் எதிர்க்கட்சியான ஐ.தே.க, விரை விலேயே தலைகீழாக மாறிய போதிலும், அரசாங்கம் அதிலிருந்து பின்வாங்க முன்வரவில்லை.

இன்று பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்காவின் வெளியேற்றம் தொடர்பாக ஐ.தே.க வினை யாரும் சம்பந்தப் படுத்துவதில்லை. அதற்குப் பதிலாக சட்டபூர்வத் தன்மை மற்றும் உச்ச நீதிமன்ற தீர்ப்பின்படி, அரசியலமைப்பு நடைமுறைகளை பின்பற்றவில்லை என்று அரசாங்கத் தின்மீதே குற்றம் சாட்டப்படுகிறது. மற்றும் அவை யாவும் முற்றாக நீதியற்ற செயல்களாக இல்லாவிட் டாலும் கூட. இருந்தும் பண்டார நாயக்காவுக்கு எதிராக ஐதேக எழுப் பிய அசல் குற்றச்சாட்டுகள் சம்பந்த மாக அதன் நிலைப்பாடு என்ன என்பதை அந்தக்கட்சி நாட்டு மக் களுக்கு விளக்கமளிக்க வேண்டும். பாராளுமன்ற தெரிவுக் குழுவின் நட வடிக்கைகளுக்கு எதிராக சமர்ப்பிக் கப்பட்டிருந்த அரை டசினுக்கும் மேற்பட்ட தனியார் மனுக்கள் உச்ச நீதிமன்றத்தின் காவலர் மாறியதுமே திரும்ப பெறப்பட்டு விட்டன. ஏனை யவைகள் இன்னும் இருக்கலாம். கொழும்பை தளமாக கொண்ட மாற்றுக் கொள்கை மையம்(சிபிஏ) புதிய பிரதம நீதியரசர் மொகான் பீரி சின் நியமனத்தை சவாலுக்குள்ளாக்கி வழக்கு தொடர்ந்துள்ளது, இருந்தும் இவருக்கு முன்பு பதவி வகித்த ஷிராணி பண்டாரநாயக்காவுக்கு மாத் திரமே தன்னை நீக்கியதற்கு எதிராக சவால் விடும் உரிமை உள்ளது.

பாராளுமன்ற தெரிவுக் குழுவின் நடவடிக்கைகளுக்கு எதிரான ஷிராணி பண்டாரநாயக்காவின் முந்தைய மனுக்களும் பயன் தரப்போவதில்லை. இப்போது இது விடயமாக ஒரு அடிப்படை உரிமை மீறல் மனுவை சமர்ப்பிப்பதற்கு அல்லது தான் தொடர்ந்து பெற்றிருந்த உரிமைகளை நிலை நாட்டும் உரிமை அமுலாக்க மனுவை சமர்ப்பிப்பதற்கு அவருக்கு இன்னும் ஒருமாத கால அவகாசமே உள்ளது, இல்லாவிட்டால் தனது நீக்கம் சம்பந்தமாக வழக்கு தொடர அவர் மற்றொரு நாள், மற்றொரு சூழ்நிலைக்காக காத்திருக்க வேண்டும். அவரது வயது அவருக்கு சார்பாக உள்ளது, ஆனால் நாட்டின் சட்டம் எப்படி விளையாடப் போகிறது என்பதை காத்திருந்து பார்க்க வேண்டும்.

குற்றப் பிரேரணைக்கு தண்டனை நிறைவேற்றப் பட்ட பின்னர், தான்தான் இன்னமும் தொடர்ந்து பிரதம நீதியர்சர் ஆக உள்ளதாக ஷிராணி பண்டாரநாயக்கா அறி வித்ததில் இருந்து, அவர் அதை எதிர்ப்பின்றி ஏற்றுக் கொண்டதைப் போல தெரிகிறது. அதே வழி யில் தனக்கு மக்களின் ஆதரவு உள்ளதாகவும் தனது மகன் உட்பட, மூன்று அங்கத்தவர் கொண்ட தனது குடும்பத்தின் தனிப்பட்ட பாதுகாப்பை அவர்கள் கவனித்துக் கொள்வார்கள் என்றும் அவர் கூறியுள்ளார். முதலில் சொன்னது ஒரு சட்ட நிலையையும் பின்னர் சொன்னது ஒரு வகையான அரசியல் நிலைப்பாட்டையும் எதிரொலிக்கின்றன.

குற்றப் பிரேரணை மூலமாக அரசி யல் பிரசங்கம் மேற்கொள் ளப்படுவதையும் நிராகரித்துவிட முடியாது, ஏனெனில் நாட்டின் அரசியலில் பல சட்ட மூளை கள் அதை நன்கு அனுபவித்து வருகின்றன. முன்னாள் ஆயுதப் படைகளின் தலை வரும் ஒரு காலத்தில் ஜனா திபதியாகும் வேட்கை கொண்டிருந்தவருமான சரத் பொன்சேகா, தன்னோடு அரசி யலில் கரம் கோர்த்து ஒரு புதிய அரசியற் கட்சியை உருவாக்கி அதை தற்போது அதிகாரத்தில் மேலுயர்த்த வரும்படி ஷிராணி பண்டாரநாயக்காவுக்கு தொடர்ந்து அழைப்பு விடுத்து வருகி-றார். அரசாங்க தரப்பிலிருந்து உள்நாட்டு அமைச்சர் ஜோன் செனவிரட்ன அத்தகைய மலி-வான ஆலோசனைகளுக்கு இரையாகி விட வேண்டாம் என்று பகிரங்கமாகவே ஷிராணி பண்டாரநாயக்காவுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

தானே தலையை சுவரில் முட்டிக் கொள்வதைப்போல, பண்டாரநாயக்கா அரசியல் அரங்கில் நுழைய வேண்டுமா, அது இப்போதோ அல்லது சற்றுப் பின்னரோ. அரசாங்க கட்சியின் அரசியல்வாதிகள், அவர் எதிர்க்கட்சித் தலைவர்கள் சிலருடனும் மற்றும் வெளிச்சக்தி களுடனும் இணைந்து நாட்டில் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்த முயலுகிறார் என்று கூறிவரும் குற்றச்சாட்டுகளுக்கு உயிர் கொடுத்ததை போல ஆகிவிடும். ஆயுதப்படையில் மிகவும் உயர் பதவி வகித்தவரான பொன்சேகா எதுவித முன் யோசனையோ, அல்லது விட்டுக் கொடுப்போ இன்றி, 2010 ஜனவரியில் ஜனா திபதி தேர்தலில் போட்டியிடுவதற் காக தனது பதவியிலிருந்து விலகியபோது, அப்படியான ஒரு குற்றச்சாட்டுத்தான் பொன்சேகா மீதும் சுமத்தப்பட்டது.

ஆளும் கூட்டணி தனது நிலைக்கு சாதகமான சிலவற்றையே கொள்வனவு செய்திருப்பதாக அதன்பின்னான தேர்தல் முடிவு-கள் தெரிவித்தன. ஈழப்போர் நான்கினை முடித்து வைத்த இராணுவ கதாநாயகனால் அவரது புகழின் உச்சத்தை பயன்படுத்தி, அவரது சொந்த இடமான அம்பலாங்கொடை உட்பட, எந்த இடத்திலும் எதிர்க்கட்சி கூட்டணியினரின் வாக்குப் பெட்டிகளில் மேலதிக வாக்குகள் எதனையும் கொண்டுவந்து சேர்க்க முடியவில்லை.

# ஏகாதிபத்திய பயணத்தை மேற்கொள்ள 48 மணிநேர தடுப்புச்சட்டம் சமர்ப்பிப்பு

## ஐ.தே.க. தெரிவிப்பு



(கொழும்பு)

ஏகாதிபத்திய பயணத்தை மேற்கொள்வதற்காகவே 48 மணிநேர தடுப்புச்சட்டத்தை அரசாங்கம் கொண்டு வந்துள்ளதாக ஐ.தே.க. குற்றம் சுமத்தியுள்ளது.

எதிர்க்கட்சித்தலைவர் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றும் போது லக்ஷ்மன் கிரியெல்ல மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

பிடியாணையின்றி. பொலிஸாரால் கைது செய்யப்பட்ட ஒருவரை நீதிமன்றில் ஆஜர் படுத்தாமல் 48 மணித்தியாலங்கள் தடுத்துவைக்கலாம் என்ற குற்றவியல் நடவடிக்கை முறை (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலத்தை அரசாங்கம் ஏன்? கொண்டுவந்தது என்பது சகலருக்குமே புரியும்.

யுத்தத்திற்கு பின்னர் கடுமையான சட்டங்களை குறைத்து சுதந்திரம் மற்றும் உரிமைகளை பெற்றுக்கொடுப்பதற்கு பதிலாக குற்றவியல் நடவடிக்கைமுறை (விசேட ஏற்பாடுகள்) சட்ட மூலத்தை நாடாளுமன் மறத்தில் நிறைவேற்றி என்ன செய்யப் போகின்றது. என்பதனை சகலரும் அறிந்து வைத்துள்ளனர்.

ஏகாதிபத்திய பயணத்தை மேற்கொள்வதற்கே இந்த சட்ட மூலம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. யுத்தம் நிறைவடைந்ததன் பின்னர் பொலிஸ், தேர்தல் திணைக்களம், சட்டவாக்கம் மற்றும் நீதிமன்றம் உள்ளிட்டவை நிறைவேற்று அதிகாரத்தின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது.

அதற்குப் பின்னர் ஜனாதிபதியின் பதவிக்காலத்தை இரண்டாவது தவணைக்கு நீடித்துக் கொள்ளும் வகையில் புதிய சட்டம ஒன்று கொண்டுவரப்பட்டது. அதற்கு பின்னர் தனியார் சொத்துக்களை கைப்பற்றுவதற்கான சட்டம் நிறைவேற்றப்பட்டது.

நாடாளுமன்றத்தில் மூன்றிலிரண்டு பெரும்பான்மையை பயன்படுத்திக்கொண்டு மக்களுக்கு இடையூறுகளை விளைவிக்கும் சட்டங்களை அரசாங்கம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றிக் கொள்வதற்கே குற்றவியல் நடவடிக்கை முறை சட்டமூலத்தை நிறைவேற்றிக்கொண்டுள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# 48 மணிநேர தடுத்து வைப்பு மனித உரிமை பேணப்படும்



(கொழும்பு)

குற்றவியல் சட்டக் கோவை திருத்தச் சட்டத்தின் ஊடாக சந்தேக நபர் 48 மணி நேரம் தடுத்து வைக்கப்படுவதால் மனித உரிமை மீறப்படமாட்டாது. அதற்கு பதிலாக மனித உரிமை பேணப்படும் என அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்தார்.

தடுத்துவைக்கப்படும் நபரின் மனித உரிமை பாதுகாக்கப்படும் என்பதாலேயே இந்த சட்டமூலத்துக்கு ஆதரவாக நாடாளுமன்றத் தில் கையை உயர்த்தினேன். நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீம் இந்தச் சட்டமூலம் தொடர்பாக தெளிவான விளக்கத்தை வழங்கியிருந்தார் என்றும் அமைச்சர் மகிந்த சமரசிங்க கூறினார்.

ஒரு சந்தேக நபரை தடுத்து வைத்து விசாரணை செய்யும் போது அவர்கள் துன்புறுத்தப்படுகிறார்கள் என்ற குற்றச்சாட்டு எழுந்தது. 12 மணி நேரத்துள் குறித்த நபரிடமிருந்து வாக்குமூலம் பெறுவதற்காக பொலிஸார் உத்திகளை கையாளலாம். இதன் காரணமாக துன்புறுத்தல்களுக்கு உள்ளாகலாம்.

எனினும் 48 மணி நேரம் என்பதால் சந்தேக நபரிடமிருந்து எளிதாக வாக்குமூலம் விசாரணைகள் செய்ய முடியும். துன்புறுத்தல் என்பதற்கே இடமில்லாமல் போய்விடும் என்றும் அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்தார்.

# பாதுகாப்பு கருத்தரங்கு மாநாடு 62 நாடுகளுக்கு அழைப்பு



(கொழும்பு)

யுத்தத்தின் பின் இலங்கை எதிர்கொண்டுள்ள சவால்கள் மற்றும் வலய நிலைப்பாடுகள் என்ற தொனிப்பொருளில் 2013 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள பாதுகாப்பு கருத்தரங்கு எதிர் வரும் செப்ரெம்பர் மாதம் 3 ஆம் திகதி முதல் 5 ஆம் திகதி வரை நடத்த ஏற்பாடாகியுள்ளது.

மூன்றாவது தடவையாக நடைபெறவுள்ள இந்த மாநாட்டில் கலந்துகொள்வதற்காக சுமார் 62 நாடுகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது என இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஜகத் ஜயசூரிய தெரிவித்தார்.

இராணுவ தலைமையகத்தில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற செய்தியாளர் மாநாடடின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இந்த செய்தியாளர் மாநாட்டின் போது மேற்படி மாநாட்டுக்கான இணையத்தளமும் வெளியிடப்பட்டது.

தொடர்ந்து இது குறித்து கருத்துத் தெரிவித்த இராணுவத் தளபதி - யுத்தத்தின் பின்னரான மீள்கட்டுமானம், சமூக ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்கம், வலய மட்டத்திலான இலங்கையின் நிலைப்பாடு, வலய பாதுகாப்பை இன்னும் சர்வதேச மட்டத்தில் பலப்படுத்திக்கொள்வதற்காக இலங்கையின் பிரவேசம் போன்ற தலைப்புகளின் கீழ் இம்முறை பாதுகாப்பு மாநாடு நடைபெறவுள்ளது.

இந்த மாநாட்டில் கலந்து கொள்ளுமாறு 62 நாடுகளைச்சேர்ந்த பிரதிநிதிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக சார்க் நாடுகள், ஐரோப்பிய நாடுகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளன. இந்நாடுகள் தங்களது வருகையை உறுதிப்படுத்தியதன் பின்னரே மாநாட்டில் எத்தனை நாடுகள் கலந்துகொள்ளும் என்று உறுதியாகக் கூறமுடியும்.

இம்முறை மாநாடு, வலய, சர்வதேச மற்றும் தேசிய ரீதியில் சர்வதேச பிரசித்திபெற்ற குழுக்களினாலேயே நடத்தப்படவுள்ளது என்றார்.

# தமிழ், சிங்கள மொழிகளில் தேசிய கீதம் பாட யோசனை

(கொழும்பு)

தேசிய கீதத்தை சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் கலந்து பாடுவதற்கான யோசனையொன்று தேசிய மொழிகள், மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சர் வாசுதேவ நாணயக்காரவினால் முன்வைக்கப்பட்டுள்ளது.

இரு மொழிகளிலும் கலந்து பாடுவதற்கான இந்த யோசனை ஜனாதிபதி செயலகத்திடம் கையளிக்கப்பட்டுள்ளது. இந்த புதிய தேசியகீதத்தை திருகோணமலையில் நடைபெறவுள்ள 65 ஆவது சுதந்திரதினத்தின் தேசிய வைபவத்தில் பாடுவதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

கற்றறிந்த பாடங்களுக்கான நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைக்கு அமைவாகவே இந்த யோசனை முன்வைக்கப்பட்டதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இந்த யோசனைக்கு ஜனாதிபதியிடமிருந்து அனுமதி கிடைத்ததன் பின்னர் அடுத்தக்கட்ட நடவடிக்கையை அமைச்சு மேற்கொள்ளும் என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

# இலங்கையில் ஜனநாயகம் முழுவதுமாக சீர்குலைவு



## அங்கலிக்கன் பேராயர் கவலை

(கொழும்பு)

நாட்டின் ஜனநாயகம் முற்று முழுதாக சீர்குலைந்துள்ளதாக கொழும்பு மறை மாவட்டத்திற்கான அங்கலிக்கன் பேராயர் திலோராஜ் கனகசபை ஆண்டகை குற்றம் சுமத்தியுள்ளார்.

அண்மைய நாட்களில் இடம்பெற்ற சம்பவங்கள் நாட்டின் ஜனநாயகத்திற்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளதாக அவர் கடிதமொன்றின் மூலம் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கையில் அரசியல் சாசனத்தின் அடிப்படையில் ஜனநாயகம் அமுல்படுத்தப்படுவதாக ஏற்றுக்கொள்ள முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

நிறைவேற்று அதிகாரமும், நாடாளுமன்றமும் அரசியல் சாசனத்தை உதாசீனம் செய்துள்ளதாக தெரிவித்துள்ளார்.

அங்கலிக்கன் திருச்சபையும் ஏனைய மத நிறுவனங்களும் விடுத்த கோரிக்கையை அரசாங்கம் உதாசீனம் செய்துள்ளதாக குற்றம் சுமத்தியுள்ளார்.

கிறிஸ்தவ தேவாலயம் என்ற ரீதியில் நாட்டில் இடம் பெற்று வரும் நிகழ்வுகளை தொடர்ந்தும் வேடிக்கை பார்த்து மௌனம் காக்க முடியாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அவ்வாறான மௌனம் தேவனுக்கும், அவருடைய மக்களுக்கும் செய்யும் துரோகமாகவே கருதப்படவேண்டுமென தெரிவித்துள்ளார்.

இதேவேளை, எதிர்வரும் பெப்ரவரி மாதம் 4 ஆம் திகதி நடைபெறவுள்ள சுதந்திர தின ஆராதனைகளுக்கு வெள்ளை நிற ஆடைகளை அணிந்து வருமாறு பேராயர் கனகசபை ஆண்டகை கோரிக்கை விடுத்துள்ளார்.

# திருட்டு குற்றச்சாட்டில் இலங்கை பணிப்பெண் கைது

(கொழும்பு)

திருட்டு சம்பவமொன்றில் ஈடுபட்டதாக குற்றம்சாட்டப்பட்ட இலங்கைப் பணிப்பெண்ணொருவரை குவைத் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

குறித்த இலங்கைப் பணிப்பெண் பகுதி நேரமாக சுத்திகரிப்புப் பணிகளை வீடுகளில் மேற்கொண்டு வந்துள்ளதாகவும், அவரினால் சேகரிக்கப்பட்ட தகவலின் அடிப்படையில் இருவருடன் இணைந்து பல வீடுகளில் திருட்டுகளை மேற்கொண்டு வந்ததாகவும் குவைத் பொலிஸார் தெரிவித்தனர்.

இக்குற்றச் செயலில் ஈடுபட்ட குழு 10 இற்கும் மேற்பட்ட வீடுகளில் திருடியுள்ளதாக அபுகலை.'.பா பொலிஸ் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இக்குழுவிற்கு தலைமை தாங்கியதாக கூறப்படும் இலங்கை பணிப்பெண் தனது குற்றத்தை ஒப்புக்கொண்டதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

# 65 ஆவது சுதந்திரதினம் திருமலையில் பலப்படுத்தப்படுகின்றது பாதுகாப்பு

(கொழும்பு)

பெப்ரவரி மாதம் 4 ஆம் திகதி இலங்கையின் 65 ஆவது சுதந்திர தினம் திருகோணமலை நகரில் கொண்டாடப்படவுள்ளது.

அதற்கு முன்னோடியாக திருகோணமலை நகரின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டு வருகின்றது. சந்திகள் மற்றும் முக்கிய கேந்திர இடங்களில் படையினர் குவிக்கப்பட்டுள்ளனர்.

படையினரின் ரோந்து நடவடிக்கைகளும் அதிகரிக்கப்பட்டுள்ளன. படையினர் அங்கும் இங்கும் எங்குமாக வீதிகளில் சாதாரணமாக நடந்து திரிவதைக் காணமுடிகின்றது.

படையினர் மற்றும் பொலிஸார் வீடு வீடாகச் சென்று வீட்டில் குடியிருப்பவர்கள் யார், வெளியார் யாரும் தங்கியிருக்கின்றார்களா? என்பதை துருவி துருவி பரிசோதித்துத் பதிவு செய்து வருகின்றனர்.

இதனிடையில் நகரின் பிரதான வீதியின் விரிவாக்க வேலைகள் துரிதப்பட்டு வருகின்றன. வீதியின் மத்தியிலிருந்து இரு பக்கங்களிலும் பத்தடி வீதி விசாலமாக்கப்பட்டு வருகின்றது.

சுதந்திர தினக் கொண்டாட்டங்களை முன்னிட்டு திருகோணமலை கல்வி வலயத்திலிருக்கும் பாடசாலைகளில் 19 பாடசாலைகள் ஜனவரி 28 தொடக்கம் பெப்ரவரி 4 வரை மூடப்படும் என்று கல்வித் திணைக்களம் அறிவித்துள்ளது.

பாடசாலைகள் நடைபெறாத நாட்களுக்கு மாற்றீடாக அடுத்து வரும் சனிக்கிழமைகளில் பாடசாலைகளை நடத்தும்படி பாடசாலைகளின் நிர்வாகங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

# மதுரை வர்த்தக சம்மேளனக் குழு அமைச்சர் டக்ளஸுடன் சந்திப்பு

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற நான்காவது யாழ். சர்வதேச வர்த்தக கண்காட்சியில் பங்குகொண்ட தமிழகம், மதுரை வர்த்தக சம்மேளன பிரதிநிதிகளின் தூதுக்குழுவினர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை சந்தித்து கலந்துரையாடல்களை மேற்கொண்டுள்ளனர்.

இச்சந்திப்பின்போது கருத்துத தெரிவித்த பிரதிநிதிகள் ஏற்கனவே கொழும்பில் இடம்பெற்ற வர்த்தக கண்காட்சியில் பங்குகொண்ட தாம், யாழ்ப்பாணத்தில் பங்குகொள்வது குறித்த தமது மகிழ்ச்சியையும் ஆர்வத்தையும் வெளிப்படுத்தினார்கள். இதனூடாக வடமாகாணத்திற்கான தொழில்நுட்ப பரிமாற்றம், உள்ளூர் தொழில் முயற்சியாளர்களை உருவாக்குதல், கூட்டு முயற்சியாண்மை என்பவற்றை முன்கொண்டு செல்லமுடியும் என்பதையும் தெரியப்படுத்தினார்கள்.

குறிப்பாக கடந்த கால யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வடபகுதி மக்களை, தொழில் துறைசார் நடவடிக்கைகளில் ஊக்குவிப்பதற்கான சாத்திக்கூறுகள் குறித்தும் கலந்துரையாடினார்கள். அத்துடன் யாழ்ப்பாண வருகை தொடர்பாக ஆரம்பத்தில் பல்வேறு கேள்விகள் எழுந்தாலும் தமிழ் பேசும் மக்களின் மேம்பாட்டில் அதிக ஆர்வம் கொண்டதன் காரணமாகவே பங்குகொண்டதாக தெரிவித்தனர்.

மதுரை வர்த்தக சம்மேளன பிரதிநிதிகளின் வருகை மற்றும் பங்குபற்றல் அத்துடன் அவர்களது முயற்சியாண்மை தமிழ் பேசும் மக்களின் மேம்பாட்டு ஆர்வம் தொடர்ப்பில் மக்களது சார்பில் தமது நன்றிகளைத் தெரிவித்துக்கொண்ட அமைச்சர் இம்முயற்சியில் தம்மாலான அனைத்து உதவிகளையும் வசதிகளையும் வழங்குவதாகவும் பிரதிநிதிகளுக்கு உறுதியளித்ததுடன் உள்நாட்டு அரசியல், சமூக, பொருளாதார நிலைமைகள் குறித்தும் அவர்களுக்கு விளக்கிக்கூறினார்.

எதிர்வரும் காலத்தில் இரு தரப்பினரிடையேயும் வணிக, கைத்தொழில், பொருளாதார பரிமாற்றங்களை மேற்கொள்வதன் ஊடாக வடபகுதி மக்கள் தமது பாரம்பரிய சிறிய மற்றும் நடுத்தரக் கைத்தொழில் உற்பத்திகளைமேம்படுத்தி சிறந்த சந்தை வாய்ப்பினையும் மேம்படுத்தமுடியும் எனவும் தெரிவித்தார்.

இச்சந்திப்பில் யாழ்ப்பாணத்திலுள்ள இந்திய துணை உயர் ஸ்தானிகராலயத்தின் உதவித் தூதுவர் மகாலிங்கம் கலந்து கொண்டனர்.



## திருமஞ்சப்பவனி

(யாழ்ப்பாணம்)

மாவிட்டபுரம் ஸ்ரீ கந்தசுவாமி ஆலய தைபபூச இலட்சார்த்தனைப் பூர்த்தியும், திருமஞ்சப் பவனியும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவுள்ளது.

இதில் காலை 9 மணிக்கு இலட்சார்ச்சனையும், மாலை 4 மணிக்கு திருமஞ்சப் பவனியும் இடம்பெறவுள்ளது.

# நெடுங்கேணி பிரதேசத்தில் நெற்செய்கை பாதிப்பு

(வவுனியா)

வவுனியா வடக்கு நெடுங்கேணி பிரதேசத்தில் அண்மையில் பெய்த கடும் மழையினால் நெற்செய்கை பாதிப்படைந்துள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவித்தனர்.

தற்போது அறுவடை ஆரம்பித்துள்ள நிலையில் மழை பெய்வதால் வெட்டப்பட்ட நெற்பயிர்கள் வெள்ள நீரில் சேதமடைந்துள்ளதாகவும் இதனால் தாம் நஷ்டத்தை எதிர்நோக்கியுள்ளதாகவும் விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

இந்தஆண்டு 11523 கெக்டெயரில் நெல் பயிரிடப்பட்டிருந்தது. எனினும் மழை காரணமாக 1755 ஏக்கர் 100 வீதத்தாலும் 2258 ஏக்கர் 75 வீதத்தாலும் 2122 ஏக்கர் 50 வீதத்தாலும் 5358 ஏக்கர் 25 வீதத்தாலும் பாதிப்படைந்துள்ளதாக வவுனியா மாவட்ட விவசாய பிரதிப்பணிப்பாளர் தெரிவித்தார். (160)



வடமாகாண கல்வி வலயத்திற்கு புதிதாக நியமிக்கப்பட்ட கல்வி நிர்வாக சேவைக்கான நியமனக்கடிதம் வழங்கும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றபோது நியமனம் பெற்ற பெண் ஒருவருக்கு வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி நியமனக்கடிதம் வழங்குவதையும், அருகில் கல்வி அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன், பிரதிச்செயலாளர் ப.விக்னேஸ்வரன் பிரதம செயலாளர் ஆர்.விஜயலட்சுமி, ஆளுநரின் பிரதிச்செயலாளர் இ.இளங்கோவன், ஆகியோர் நிற்பதையும் காணலாம்.
(படம் : கே.நந்தகுமார்)

# குடாநாட்டில் மதுப்பாவனை அதிகரித்துள்ளதாக கவலை

(திருநெல்வேலி)

யாழ்.குடாநாட்டில் அதி கூடியளவு மதுப்பாவனை இளைஞர்களிடையே ஏற்பட்டுள்ளது. இது மிகவும் ஆபத்தானது. இம்மண்ணில் ஏற்பட்ட போர் அனர்த்தங்களினால் இளம் சந்ததியினர் பலரை நாம் இழந்துவிட்டோம். என செஞ்சொற்செலவர் கலாநிதி ஆறு.திருமுருகன் தெரிவித்தார்.

வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்தின் புதிய தலைமையகத் திறப்புவிழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரைநிகழ்த்துகையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

வாலிபர் சங்கத்தலைவர் சட்டத்தரணி கே.சுகாஸ் தலைமையில் இந்நிகழ்வு இடம்பெற்றது.

தொடர்ந்து உரையாற்றிய செஞ்சொற்செல்வர், வாழ வேண்டிய வயதில் அடுத்த தலைமுறையை சமூகச்சூழல் தற்போது அழித்து கொண்டிருக்கிறது. இந்து வாலிபர் சங்கத்தின் இளைஞர் மகாநாடு குடாநாட்டில் ஒரு சமூக விழிப்புணர்வை ஏற்படுத்தக் கூடியதாக அமையும் என்பது நிச்சயம்.

அரசியல், ஆடம்பரங்கள், பொன்னாடைகள், புகழ் மாலைகளைத் தவிர்த்து ஆன்மீக ரீதியாக ஒரு புதிய சமுதாயத்தை நல்வழிப்படுத்தக் கூடிய மகாநாடு அமைய வேண்டும். எல்லாக் கிராமங்களிலும் உள்ள இந்து இளைஞர் சங்கங்களை அரவணைத்து அவர்களுடைய ஒத்துழைப்போடு பாரம்பரிய சமய நெறிமுறைகளை காப்பாற்றிட நாம் உதவிட வேண்டும்.

நோயாளர்கள், முதியோர்கள, கைம்பெண்கள், ஆதரவற்றவர்கள் போன்ற உதவி தேவைப்படும் ஜீவன்களுக்கு இளைய சமுதாயம் உதவும் பணிகளில் ஈடுபடல் வேண்டும். சமய விடயங்களை இளைய சமுதாயம் கற்க வேண்டும் எனக் கூறினார். (137)

# மரக்கறி விலைகள் மன்னாரில் அதிகரிப்பு

மன்னாரில் மரக்கறி வகைகளின் விலைகள் என்றும் இல்லாத அளவிற்கு அதிகரித்துள்ளதாக நுகர்வோர் கவலை தெரிவித்தனர்.

தம்புள்ளை மற்றும் வவுனியா மத்திய மரக்கறி விற்பனை நிலையங்களில் மட்டுப்படுத்தப்பட்ட அளவு மரக்கறி வகைகளே கொண்டு வரப்படுகின்றது.

இந்த நிலையில் மன்னார் மாவட்டத்தில் மரக்கறி வகைகளை விற்பனை செய்யும் வியாபாரிகள் வவுனியா மற்றும் தம்புள்ளை மரக்கறி மத்திய விற்பனை நிலையங்களுக்குச் சென்று மரக்கறி வகைகளை கொள்வனவு செய்கின்றனர்.

இந்த நிலையில் அதிகரித்த விலைக்கே அவர்களுக்கு மரக்கறிகள் விற்கப்படுகின்றன. இந்த நிலையில் மன்னாரிலும் மரக்கறி வகைகளின் விலை அதிகரித்துள்ளது.

இதன் அடிப்படையில் ஒரு கிலோகிராம் கரட் - 200 ரூபாவுக்கும் லீட்ஸ் - 160, போஞ்சி - 280, பயிற்றை 280, கத்தரி- 280, கறி மிளகாய் - 350, கோவா - 120, பச்சை மிளகாய் - 400 ரூபாவுக்கும் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன

# பதிவு செய்யுமாறு அறிவுறுத்தல்

பச்சிலைப்பள்ளி பிரதேச சபைக்குட்பட்ட வாடகைக்கு விடப்படும் சகல முச்சக்கர வண்டிகளையும் பதிவு செய்து கொள்ளுமாறு பளை பச்சிலைப்பள்ளி நகர முச்சக்கர வண்டி சங்கத்தினர் அறிவித்துள்ளனர்.

இதில் பளை நகரம், புதுக்காடு, இயக்கச்சி, இத்தாவில், முகமாலை, கிளாலி ஆகிய பிரதேசங்களில் வாடகைக்கு விடப்படும் முச்சக்கரவண்டிகள் மேற்படி சங்கத்தில் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 2 ஆம் திகதிக்கு முன்னர் செயலாளர், முச்சக்கரவண்டிச் சங்கம், பளை நகரம் பளை என்ற முகவரியில் பதிவுகளை மேற்கொள்ளுமாறு சங்கத்தலைவர் அறிவித்துள்ளார்.

# முரசின் இன்றைய பலன்

(25.01.2013 - வெள்ளிக்கிழமை)

நந்தன வருஷம் தை மாதம் 12 ஆம் திகதி.
நட்சத்திரம் திருவாதிரை பிற்பகல் 1.31 வரை. திதி திரியோதசி காலை 7.59 வரை. இராகுகாலம் 11.06 - 12.36 வரை.
சுபநேரம் 6.36 - 08.06 வரை. சித்தம்

சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | தகுதி, திறமை வளரும். தாமதமான பணி, நிறைவேறும். தொழில் செழிப்பு. நற்செயல் புரிந்து சமூகத்தில் அந்தஸ்து. உபரி வருமானம். |
| ரிஷபம் | தெய்வ நம்பிக்கை அதிகரிக்கும். செயல்கள் எளிதாகும். தொழில், பலம்பெறும். பணவரவு திருப்தி. வீட்டு உபயோகப் பொருள் வாங்குவீர்கள். |
| மிதுனம் | தடைகளை வெல்வீர்கள். குடும்பத்தினர் உதவிகரம. தொழில், புதிய பரிமாணம். தாராள பணவரவு. விருந்து உபசரிப்பு. உத்தியோகத்தர் பாராட்டு, |
| கடகம் | நம்பகத்தன்மை இல்லாதவரிடம், விலகவும். தொழில், சில குறுக்கீடு வந்து சரியாகும். அளவான பணவரவு. உணவில் கட்டுப்பாடு நல்லது. |
| சிம்மம் | செயல்களில் விவேகம். தொழில், இடையூறு சரியாகும். வரவுக்கேற்ற செலவு. யோக பலன். அலுவலகத்தில் ஒத்துழைப்பு. |
| கன்னி | பணிச்சுமை அதிகரிக்கும். காலவிரயமாகும் செயல்களை தவிர்ப்பது நல்லது. தொழில், கண்காணிப்பு அவசியம். எதிர்பார்த்த ஒன்று ஏமாற்றமாகும். |
| துலாம் | மாற்று உபாயங்கள் தேவைப்படும். தொழில், மந்தம். குறைந்த பணவரவு. தகுதிக்கு மீறிய, பொறுப்புக்களை ஏற்க கூடாது. உடல்நலத்திற்கு சீரான ஒய்வு. |
| விருச்சிகம் | முன்யோசனையுடன் செயல். துணிவாக இருப்பீர்கள். எதிரிகள் பலமிழப்பர். தொழில், அதிக உழைப்பு. வரவில் திருப்தி. நண்பருக்கு உதவி. |
| தனுசு | வாழ்வில் வளம் பெற திட்டமிடுவீர்கள். தொழில், அபரிமித வளர்ச்சி. அதிக இலாபம். உடன் பிறந்தவர்களுக்கு உதவி. பிள்ளைகளால் பெருமை. |
| மகரம் | எண்ணத்திலும் செயலிலும், உறுதி. கடந்த கால சிரமங்களை மாற்ற புதிய முயற்சி. தொழில், வளர்ச்சி திருப்தி. உபரி வருமானம். |
| கும்பம் | கவனக்குறைவால் மனதில் பதற்றம். நண்பரின் ஆலோசனை உதவும். தொழில், அதிக பணி. கடன் வசூலாகும். பேச்சில் அன்பும், |
| மீனம் | அதிக முயற்சி தேவைப்படும். இனிய அணுகுமுறையால், முன்னேற்றம். தொழில், சராசரி. சிக்கனம். வாகன பயணத்தில் கவனம். |

# அருணோதயவில் இன்று மரதன் ஓட்டம்

(அளவெட்டி)

அளவெட்டி அருணோதயக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டியை முன்னிட்டு இன்றைய தினம் காலை 7.00 மணிக்கு ஆண், பெண்களுக்கான மரதன் ஓட்டம் இடம் பெறவுள்ளதாக கல்லூரி அதிபர் தெரிவித்துள்ளார்.

கல்லூரி முன்றலில் ஆரம்பமாகி, அதே இடத்தில் நிறைவடையும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இல்லங்கள் பிரிக்கப்பட்டு வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டிக்கான தீவிர பயிற்சிகளில் வீர, வீராங்கனைகள் ஈடுபட்டு வருவதாகவும், வீர,வீராங்கனைகளின் ஆர்வத்தைப் பார்க்கின்ற போது மகிழ்ச்சி அளிப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (93)

# அவுஸ்ரேலிய ஓப்பன் ரென்னிஸ் இறுதியில் லீநா, அசரன்கா





அவுஸ்ரேலிய ஓப்பன் ரென்னிஸ் போட்டியில் லீ நா மற்றும் விக்டோரியா அசரங்கா ஆகியோர் இறுதி போட்டிக்குத் தகுதிபெற்றுள்ளனர். கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் ஒன்றான அவுஸ்ரேலிய ஓப்பன் ரென்னிஸ் தொடர் மெல்போர்ன் நகரில் நடைபெற்று வருகிறது. இதில் நேற்று நடைபெற்ற மகளிருக்கான அரையிறுதிப் போட்டியில் சீனாவின் லீ நா, ரக்ஷ்யாவின் மரியா ஷரபோவாவை எதிர்கொண்டார். இதில், தரவரிசையில் 2ஆவது இடம் வகிக்கும் ஷரபோவாவுக்கும், 6ஆவது இடம் வகிக்கும் லீ நாவிற்கும் இடையே கடும் போட்டி இருக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது. இந்நிலையில், சீன வீராங்கனை அதிரடியாக ஆடி ஷரபோவாவிற்கு அதிர்ச்சி வைத்தியம் அளித்தார். முதல் செட்டை லீ நா அபாரமாக விளையாடி செட்டை 6-2 என்ற கணக்கில் கைப்பற்றினார். இந்நிலையில் இரண்டாவது செட்டை ஷரபோவா தனதாக்குவார் என்று எதிர்ப்பார்க்கப்பட்ட வேளையில் இதிலும் லீ நாவின் கையே ஓங்கியது. இரண்டாவது செட்டை லீ நாவிடம் 6-3 என்ற கணக்கில் பறிகொடுத்த ஷரபோவா போட்டியில் இருந்து வெளியேறினார். வெற்றி பெற்ற லீ நா இறுதி சுற்றுக்கு முன்னேறியுள்ளார். தொடர்ந்து இடம்பெற்ற மற்றுமொரு அரையிறுதி போட்டியில் பெல்லாரஸ் நாட்டின் விக்டோரியா அசரங்கா, அமெரிக்காவின் ஸ்டீபன்சை எதிர்கொண்டார். இந்த போட்டியில், செரீனாவை வீழ்த்திய ஸ்டீபன்ஸ் அச்ரங்காவிற்கு கடும் நெருக்கடி கொடுப்பார் என்று எதிர்பார்க்கப்பட்டது. இந்நிலையில், அசரங்கா, அபாரமாக விளையாடி வெற்றியைத் தனதாக்கினார். இந்த போட்டியில் அசரெங்கா 6-1, 6-4 என்ற நேர் செட் கணக்கில் ஸ்டீபன்சை வீழ்த்தி இறுதி போட்டிக்கு முன்னேறியுள்ளார். இறுதி போட்டியில், அசரங்கா, சீனாவின் லீ நாவை எதிர்கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# விரைவில் முதலிடம்.



(மும்பை)

பட்மின்ரன் தரவரிசைப்பட்டியலில் விரைவில் முதல் இடத்தைப் பிடிப்பேன் என சாய்னா நேவல் நம்பிக்கை தெரிவித்தார்.

இந்திய பட்மின்ரன் வீராங்கனை சாய்னா நேவல். லண்டன் ஒலிம்பிக்கில் வெண்கலம் வென்று சாதித்தார். சமீபத்தில் தரவரிசைப்பட்டியலில், இரண்டாம் இடத்தைப் பிடித்துள்ளார்.

இது குறித்து கருத்துத் தெரிவித்த சாய்னா,

கடந்த ஆண்டு எனக்குச் சிறப்பானதாக அமைந்தது. ஒலிம்பிக் பதக்கம் உட்பட ஐந்து தொடர்களில் சம்பியன் பட்டம் வென்றேன். இந்த ஆண்டு இங்கிலாந்து மற்றும் உலக சம்பியன் தொடர் என குறைந்தது 15 முதல் 20 தொடர்களில் பங்கேற்க உள்ளேன்.

பட்மின்ரன் போட்டிகளில் சீன வீரர், வீராங்கனைகள் வல்லவர்கள். அவர்களை எளிதில் வெல்ல முடியாது. இருப்பினும் கடுமையாகப் போராடியதால் தான் தற்போது தரப்படுத்தலில் இரண்டாவது இடத்தைப் பிடிக்க முடிந்தது. தற்போது முதல் இடத்தில் ஒரு சீன வீராங்கனை தான் உள்ளார். அவருக்கும் எனக்கும் சுமார் 12,000 புள்ளிகள் வித்தியாசம் உள்ளது. தொடர்ந்து சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி இந்த ஆண்டு முதல் இடத்திற்கு முன்னேறுவதே எனது முதல் இலக்கு. முயன்றால் முடியாதது எதுவும் இல்லை எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# இந்தியாவில் நடத்த பரிசீலனை

எதிர்வரும் 2017ஆம் ஆண்டு நடைபெறவுள்ள 17 வயதுக்குட்பட்டோருக்கான உலகக் கோப்பை கால்பந்து போட்டியை இந்தியாவில் நடத்துவது குறித்து பரிசீலிப்பதாக சர்வதேச கால்பந்து சம்மேளனம் (பிபா) தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அகில இந்திய கால்பந்து சம்மேளனம் அளித்த கடிதத்தை பிபா ஏற்றது. மேலும் போட்டியை நடத்துவது . தொடர்பாக ஆலோசிக்க இந்திய கால்பந்து சம்மேளனத் தலைவர் பிரபுல் படேல், பிபா அதிகாரிகளை கடந்த புதன்கிழமை சந்தித்தார்.

இந்தச் சந்திப்பு திருப்திகரமாக இருந்ததாகவும், இந்திய அரசின் கடிதத்தை பரிசீலிப்பதாக பிபா கூறியதாகவும் இந்திய கால்பந்து சம்மேளனம் தெரிவித்தது. இந்த உலகக் கோப்பை கால்பந்து போட்டி இந்தியாவில் நடைபெற வாய்ப்பளிக்கப்படும் என்று நம்புவதாக இந்திய கால்பந்துப் சம்மேளன செயலர் குஷால் தாஸ் தெரிவித்துள்ளார். அத்துடன் இவ்வாறான போட்டிகளை இந்தியாவில் நடத்தினால் கிரிக்கெட் போன்று கால்பந்திலும் சிறந்த் வீரர்கள் உருவாக வழிவகுக்கும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# இந்தியாவிற்கு டோனி பெரும் அதிர்ஷ்டம்



இந்திய அணி தற்போது மிகவும் சராசரியான அணியாகவே உள்ளது. அணியின் தரமின்மையை சீர்செய்து, ஒருங்கிணைத்துச் செல்வதில் இந்தியாவுக்கு டோனி கிடைத்தது பெரும் அதிர்ஷ்டம்தான் என்கிறார் இங்கிலாந்து முன்னாள் வீரர் ஜெப்ரி பொய்கொட்.

இந்தியாவை எடுத்துக் கொண்டால் தற்போது தரம் என்பது இல்லை. தரமான பந்து வேகப்பந்து வீச்சு இல்லை, தரமான சுழற்பந்து வீச்சு இல்லை. சில சந்தர்ப்பங்களில் சிறந்த வீரர்கள் ஓய்வு பெறுகின்றனர். ராவிட், லக்ஷ்மன் ஓய்வு பெற்றனர். சச்சின் டெண்டுல்கர் ஓட்டங்கள் எடுப்பதை மறந்து விட்டார். இவையெல்லாம் டோனியின் தவறா? நான் அப்படி நினைக்கவில்லை, நான் திறமையை வெற்றி தோல்விகள் கொண்டு அளவிடுவதில்லை. அணியைப் பாருங்கள், டோனி மட்டும் இல்லையென்றால்...? டோனி இருப்பது இந்தியாவுக்கு அதிர்ஷ்டம். டோனி ஒருநாள் கிரிக்கெட்டில் மிகச்சிறந்த கப்டனாவார். டெஸ்ட் போட்டிகளில் இன்னும் கொஞ்சம் அவர் முன்னேறவேண்டும். ஆனால் இப்போதைக்கு டெஸ்ட் போட்டிகளிலும் டோனியை விட்டால் ஆளில்லை. உலகத்தில் மற்ற அணிகளை ஒப்புநோக்கும்போது தரத்தின் மட்டத்தில் இந்திய அணி சராசரியாக உள்ளது. இதனால் தோல்விக்கு டோனியை குறைகூறுவதில் அர்த்தமில்லை அது நியாயமற்றதும் கூட. தரமற்ற அணியை வைத்துக் கொண்டு டோனி அனைத்து பழியையும் ஏற்கிறார். அவரை குறை கூறுவது தவறு. ஹர்பஜன் இல்லை, சகீர்கான் இல்லை, ராவிட், லக்ஷ்மன் இல்லை. சச்சின் ரன்கள் எடுக்கவில்லை. புதிய வீரர்கள் செட்டில் ஆக நேரம் வேண்டும் எனவே டோனி கப்டனாக இருப்பது இந்தியாவிற்கு அதிர்ஷ்டம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# மிகப் பெரிய பங்கு எது?



உலகம் முழுதும் உள்ள கிரிக்கெட் இரசிகர்களின் இதயம் கனிந்த அன்பும், பாசமும் தனது கிரிக்கெட் வாழ்வில் மிகப்பெரிய பங்கு வகித்துள்ளதாக சச்சின் டெண்டுல்கர் தெரிவித்துள்ளார்.பிரபல பின்னணிப் பாடகி ஆஷா போஸ் முதன் முதலாக நடிக்கும் மாய் என்ற இந்திப் படத்தின் அறிமுக விழாவில் சச்சின் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், என் னுடைய தந்தை எனக்கு பெரிய அகத்தூண்டுதலாக இருந்தார் என்பதில் சந்தேகமில்லை. பின்னர் என் சகோதரர்கள், என் மனைவி மற்றும் மனைவியின் பெற்றோர் ஆகியோர் என் கிரிக்கெட் முன்னேற்றத்தில் பெரும்பங்கு வகித்தனர். ஒவ்வொரு கட்டத்திலும் சில இலக்குகளை எட்ட வேண்டும், சில விடயங்கள் அதற்கு உங்களுக்கு தாக்கமாக இருக்கும். இந்திய இசையில் ஆஷாஜியின் தாக்கம் என்னவென்று அனைவரும் அறிவர். அவரது பாடல்களை கேட்டுத்தான் நான் வளர்ந்தேன் என்றால் மிகையாகாது. எனக்கு பிடித்தமான பாடல் உம்ரோ ஜானில் ஈன் ஆன்கோ கி மஸ்தி கே என்ற பாடலாகும். கிரிக்கெட் ஆடும் வரை கிரிக்கெட்தான். ஒரு நேரத்தில் ஒன்றைத்தான் செய்வேன். சினிமாவில் நடிப்பது குறித்து தற்போது எந்த எண்ணமும் இல்லை எனவும் அவர் தெரிவித்தார்.

# ஒட்டுமொத்த செயற்பாடே தொடரை வெல்ல காரணம்



ஒட்டு மொத்த சிறப்பான செயற்பாட்டின் மூலமே இங்கிலாந்து அணிக்கெதிரான நான்காவது போட்டியில் வெல்ல முடிந்தது என இந்திய அணிக் கப்டன் டோனி தெரிவித்தார். புதிய பந்தை சரியான திசையில் வீசினோம்.

இதனால் தொடக்கத்தில் இங்கிலாந்து அணியினர் வேகமாக ஓட்டங்களைக் குவிக்க முடியாமல் செய்து விட்டோம். இப்போது கொண்டு வரப்பட்டுள்ள புதிய விதிப்படி கடைசி 10 ஓவர்களில் 100 ஓட்டங்கள் எடுப்பது சகஜமாக ,போய் விடும். எமது அணியில் இப்போது அமைந்துள்ளது, புதியபந்து வீச்சு கூட்டணி. அவர்கள் நிறையப் போட்டிகளில் விளையாடும் போது அதில் இருந்து பாடம் கற்றுக்கொள்வார்கள். ரோகித் ஷர்மா, கிரிக்கெட்டுக்குரிய நிறைய திறமைகளை உள்ளடக்கிய வீரர் என்பதை அறிவோம். அவரிடம் இருந்து சிறப்பான ஆட்டம் வெளிப்பட்டிருக்கிறது. புல்ஷொட் (எழும்பி வரும் பந்தை சுழட்டி அடிப்பது) அடிப்பதில் அவரிடம் இயற்கையாகவே திறமை உண்டு. எனவே அவருக்கு யாரும் அதிகமாக ஷோர்ட்பிட்ச் பந்துகளை வீச முடியாது. அவர் அரைச்சதத்தை கடந்ததும் அதை சதமாக மாற்ற வேண்டும் என்று விரும்பினோம். துரதிஷ்டவசமாக அவர் சதம் அடிக்காமை வருத்தம் அளிக்கிறது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# மோசம் செய்த நடுவர்கள் புலம்புகிறார் குக்



மொகாலியில் நடைபெற்ற இந்தியாவிற்கு எதிரான நான்காவது போட்டியில் நடுவர்களின் மோசமான செயற்பாடும் எமது தோல்விக்கு முக்கிய காரணமாக அமைந்துவிட்டது என இங்கிலாந்து அணிக் கப்டன் குக் தெரிவித்தார். 257 ஓட்டங்கள் என்பது வெற்றிக்குரிய இலக்காகவே நினைத்தோம். தொடக்கத்தில் சில விக்கெட்டுக்களை வீழ்த்த வேண்டி இருந்தது. ஆனால் ரோகித் ஷர்மா, ரெய்னாவின் இணைப்பாட்டம் போட்டியை எங்களிடம் இருந்து பறித்து சென்று விட்டது. அவர்கள் துரிதமாக ஓட்டங்கள் எடுத்து விட்டனர். ஸ்டீவன் பின் பந்து வீச்சில் ரெய்னா ஆட்டம் இழந்து விட்டார் என்று தான் நினைத்தோம். ஆனால் நடுவர் ஸ்டீவ் டேவிஸ், அந்த பந்தை செல்லாது என்று அறிவித்தது ஏமாற்றம் அளித்தது. விதிமுறைப்படி நடந்து கொண்டதாக நடுவர் கூறினார். உண்மையில் எனக்கே விதிமுறை கொஞ்சம் குழப்பமாகத்தான் இருந்தது என்றார்

# வலய மட்ட கால்பந்து மட்டுவிலில் நாளை

(மட்டுவில்)

தென்மராட்சி வலய மட்ட கால்பந்தாட்டப் போட்டி நாளை காலை மட்டுவில் ஸ்கந்தவரோதய வித்தியாலய மைதானத்தில் இடம்பெறவுள்ளதாக வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

18 வயதுப்பிரிவு அணிகளின் ஆண், பெண்களுக்கிடையில் இடம்பெறவுள்ள இப்போட்டியில், கோட்ட மட்டத்தில் வெற்றியீட்டிய அணிகள் மோதவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, பங்குகொள்ளவுள்ள அணிகளை குறித்த நேரத்திற்கு வருகை தந்து போட்டியை தாமதமின்றி நடத்துவதற்கு ஒத்துழைப்புத் தருமாறு போட்டி அமைப்பாளர்கள் கேட்டுள்ளனர். (118)





நெல்லியடி மத்திய மகாவித்தியாலய வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டியின் ஓர் அங்கமாக கடந்த 23ஆம் திகதி காலை 7.00 மணிக்கு ஆண், பெண்களுக்கான மரதன் ஓட்டப் போட்டி நடத்தப்பட்டது. இரு பிரிவிலும் வெற்றிபெற்றோர் விபரம் வருமாறு: ஆண்கள் பிரிவில் ரகுநாதன் கிறிஸ்ரியன், நாகேஸ்வரன் பிரசாத், தேவேந்திரராசா இளம்சுதன், பிரபாகரன் பிரகாஷ், சிவராஜ் ஜெயபாரத், அன்ரனி மரியதாஸ் நவீன், சிவராஜா சிந்துஜன், ரதீஸ்குமார் சைனுஜன், தவராசா தனீஸ்வரன், செல்வரத்தினம் சங்கீர்த் ஆகியோரும், பெண்கள் பிரிவில் கந்தசாமி நிரஞ்சலா, புஸ்பராசா லக்ஷனா, மணிவண்ணன் தர்மினி, பாஸ்கரன் விதுஷா, ராசேந்திரம் கோபிகா, தேவச்சந்திரன் தாட்சாயினி, ரவீந்திரன் சௌமியா, புஸ்பலிங்கம் அனோஜா, செல்வநாயகம் துருக்காயினி ஆகியோர் முதல் பத்து இடங்களைப் பிடித்துக் கொண்டனர். இதில் ஆண்கள் பிரிவினர் ஓடுவதையும், முதல் மூன்று இடங்களைப்பிடித்த மாணவர்களையும் விருந்தினர்களுடன் இருப்பதையும்காணலாம்.(12)

# கிண்ணம் வென்றன புத்தூர் கலைமதி, மட்டுவில் ஐங்கரன்



புத்தூர் கலைமதி



மட்டுவில் ஐங்கரன்

(மட்டுவில்)

மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக் கழகத்தினால் நடத்தப்பட்ட கரப்பந்தாட்டத் தொடரில் மட்டுவில் ஐங்கரன், புத்தூர் கலைமதி அணிகள் கிண்ணம் வென்றன.

மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக்கழகத்தினால் பிரதேசமட்ட ரீதியாகவும், மாவட்ட மட்ட ரீதியாகவும் போட்டிகள் நடத்தப்பட்டது.

இதில் மாவட்ட ரீதியாகவும், பிரதேச ரீதியாகவும் அதிகளவிலான அணிகள் பங்கு கொண்டன. இருப்பினும் மாவட்ட மட்ட இறுதிப் போட்டிக்கு நீர்வேலி ஐக்கியம் அணியும் புத்தூர் கலைமதி அணியும் தகுதி பெற்றன. பிரதேச மட்ட இறுதிப் போட்டிக்கு மட்டுவில் ஐங்கரன் அணியும், மட்டுவில் வளர்மதி அணியும் தகுதிபெற்றன.

இறுதிப் போட்டிகள் கடந்த 14ஆம் திகதி மோகனதாஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் பிற்பகல் 6.00 மணிக்கு நடைபெற்றது.

முதலில் நடைபெற்ற பிரதேச மட்ட இறுதிப் போட்டியில் மட்டுவில் வளர்மதி அணியும், ஐங்கரன் அணியும் மோதின. இதில் ஆரம்பம் முதலே மட்டுவில் ஐங்கரன் அணி ஆதிக்கம் செலுத்தியது. இறுதியில் 25-20, 25-18, 25-22 என்ற நேர் செட் கணக்கில் வெற்றிபெற்று கிண்ணத்தைக் கைப்பற்றிக்கொண்டது.

தொடர்ந்து நடைபெற்ற மாவட்ட மட்ட இறுதிப் போட்டியில் நீர்வேலி ஐக்கியம் அணியும், புத்தூர் கலைமதி அணியும் மோதின. ஐந்து செட்களைக் கொண்ட இப் போட்டியில் ஆரம்பம் முதலே புத்தூர் கலைமதி அணி ஆதிக்கம் செலுத்தியது.இறுதியில் புத்தூர் கலைமதி அணி 25-21, 25-18, 25-15 என்ற நேர் செட் கணக்கில் வெற்றிபெற்று கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

(93, 118)

# இன்றைய போட்டிகள்

(பருத்தித்துறை)

வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்றைய தினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

வித்தியாலய அதிபர் சி. நவரத்தினம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண கல்வித் திணைக்கள பிரதிக் கல்விப் பணிப்பாளர் சிற்றம்பலம் புஸ்பலிங்கம் கலந்து கொள்ளவுள்ளதுடன் பரிசில்களை திருமதி புஸ்பகுமாரி புஸ்பலிங்கம் வழங்கவுள்ளார். (109)

***

(மண்டைதீவு)

மண்டைதீவு மகாவித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்றைய தினம் மதியம் 1.30 மணிக்கு பாடசாலை அதிபர் சு. கனகரெத்தினம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக தீவக கல்வி வலயத்தின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் (கல்வி அபிவிருத்தி) ஏ. ஸ்ரனிவாஸ் கலந்துகொள்ளவுள்ளதுடன், சிறப்பு விருந்தினர்களாக முன்னாள் தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் இராதாகிருஸ்ணன், முன்னாள் மண்டைதீவு மகாவித்தியாலய அதிபர் கைலாசபிள்ளை பேரின்பநாயகம், மண்டைதீவு கிராம சேவையாளர் ஆர். ரமேஸ் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (23)

# சென்.ஜோன்ஸில் நாளை மத்தியஸ்தர் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

இலங்கை மத்தியஸ்தர் சங்கத்தினால் நடத்தப்படும் கால்பந்தாட்ட மத்தியஸ்தர்களுக்கான பரீட்சை நாளைய தினம் சென். ஜோன்ஸ் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

இப்பரீட்சை கொழும்பு மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய இரு இடங்களில் இடம்பெறவுள்ளது. இதில் சென். ஜோன்ஸ் கல்லூரியில் இடம்பெறும் பரீட்சை நிலையத்திலேயே வடக்கு மாகாண பரீட்சார்த்திகள் பங்குபற்றவுள்ளனர்.

நாளை காலை 6.00 மணிக்கு உடற்தகுதி பரீட்சை இடம்பெறும் எனவும், உடற்தகுதி பரீட்சையில் சித்தி பெறுவோர் மாத்திரமே எழுத்து மூலமான பரீட்சைக்கு அனுமதிக்கப்படுவார்கள் எனவும், இப்பரீட்சைகளை இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனத்தைச் சேர்ந்த நான்கு உயர் அதிகாரிகள் தலைமையில் இடம்பெறவுள்ளதாகவும் பரீட்சை ஏற்பாட்டுக்குழு தெரிவித்துள்ளது.

இதேவேளை, இப்பரீட்சையை யாழ்ப்பாணக் கால்பந்தாட்ட லீக்கும், யாழ். மத்தியஸ்தர் சங்கமும் இணைந்து நெறிப்படுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இப்பரீட்சையில் தோற்றவுள்ள பரீட்சார்த்திகளை உரிய நேரத்திற்கு வருகை தருமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.(எஸ்.பி.)

# இளவாலை இளஞ்சுடர், சிவானந்தம் அணிகள் சம்பியன்

(தெல்லிப்பளை)

தெல்லிப்பளை பிரதேச மட்ட கரப்பந்தாட்டப் போட்டியில் இளவாலை இளஞ்சுடர் மற்றும் சிவானந்தம் அணிகள் கிண்ணத்தைக் கைப்பற்றின.

தைப்பொங்கல் தினத்தை முன்னிட்டு தெல்லிப்பளை வித்தகபுரம் கண்ணகி விளையாட்டுக் கழகத்தினால் பிரதேச மட்டத்தில் நடத்தப்பட்ட கரப்பந்தாட்டத் தொடரின் இறுதிப் போட்டிகள் கடந்த 14ஆம் திகதி கண்ணகி விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்றது.

ஆண், பெண் என இருபாலாருக்குமிடையில் நடத்தப்பட்ட இப்போட்டித் தொடரில் தெல்லிப்பளை பிரதேசத்தைச் சேர்ந்த பல அணிகள் பங்குபற்றின.

பெண்களுக்கான இறுதிப் போட்டியில் நகுலேஸ்வரம் அணியை எதிர்த்து இளவாலை இளஞ்சுடர் அணி மோதியது. இதில் ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்திய இளஞ்சுடர் அணி 25-20, 21-25, 25-15 என்ற செட் கணக்கில் வெற்றிபெற்று கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

தொடர்ந்து நடைபெற்ற ஆண்களுக்கான இறுதிப் போட்டியில் இளவாலை சிவானந்தம் அணியும், இளவாலை இளஞ்சுடர் அணியும் மோதின. பரபரப்பாக நடைபெற்ற இப் போட்டியில் சிவானந்தம் அணி 3-2 என்ற செட் கணக்கில் வெற்றிபெற்று கிண்ணத்தைக் கைப்பற்றிக்கொண்டது.

வித்தகபுரம் கண்ணகி விளையாட்டுக்கழகத் தலைவர் தலைமையில் நடைபெற்ற இப்போட்டி நிகழ்வில் சிறப்பு விருந்தினராக யாழ். மாவட்ட கரப்பந்தாட்ட சங்க உறுப்பினர் சி. தயாளபாலன் மற்றும் வித்தகபுரம் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர், நகுலேஸ்வரம் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் எனப் பலர் கலந்துகொண்டு விருதுகளை வழங்கிக் கௌரவித்தனர். (93)

# சிறுவர்போராளிகள் எதிர்நோக்கும் சமூக உளவியல் பிரச்சினைகள் 10

– ருவான் எம் ஜயதுங்க –



எல்.ரி.ரி.ஈ சிறுவர்களை இராணுவத்துக்கு பயன்படுத்தியது, சிறுவர்கள் மீதும் அவர்களின் தார்மீக வளர்ச்சியின்மீதும், தீங்கான விளைவுகளையே ஏற்படுத்தியது. பல வருடங்களாக இந்தச் சிறுவர்கள் வாழ்வில் வன்முறையே ஒரு வாழ்க்கை வழியாக மாறிவிட்டது. ஒரு-வருடைய இலட்சியத்தை அடைவதற்கு வன்முறை ஒரு சட்டபூர்வமான ஒரு வழி மற்றும் அது ஓர் ஏற்றுக் கொள்ளப்பட்ட வடிவத்திலான நடவடிக்கை என்று பல வருடங்களாக அவர்கள் நம்பி வந்தார்கள். வன்முறைச் சிந்தனைகளிலிருந்தும் தங்களை விடுவித்துக் கொள்வதும் மற்றும் ஒரு வன்முறையற்ற வாழ்க்கைப் பாணிக்கு தங்களை மாற்றுவதும் அவர்களுக்கு சிரமமாக இருந்தது. வன்முறைக்கு உந்திய அதிர்ச்சிகரமான வெளிப்பாடு மற்றும் போர் அதிர்ச்சிகள் என்பனவற்றுக்குப் பின்னர், பிள்ளைகள் நல்ல தர்க்கரீதியான முடிவுகளை மேற்கொள்வதில் வெளிப்படையாகவே தடங்கல்களை எதிர்கொண்டார்கள். மோதல்களின் கடந்த கால அனுபவங்கள் அவர்களின் தார்மீக பண்புகள் மற்றும் நீதிநெறிகள் என்பனவற்றில் எதிர்மறையான தாக்கங்களை ஏற்படுத்தியது. இந்த அழிவான அம்சங்கள் வன்முறையின் ஒரு தீய சுழற்சியான பங்களிப்பை வழங்கியதுடன், இந்தச் சிறுவர்கள் சமரசம், சமாதானம், நல்லிணக்கம் என்பனவற்றை கருத்தில் கொள்வதற்கு குறைவான விருப்பமுடையவர்களாக மாறினார்கள்.

போர், வெறுப்பு மற்றும் வன்முறை சித்தாந்தங்கள் பற்றிய போதனைகளில் பங்குபற்றிய சிறுவர்களின் தார்மீக உணர்வுகளை சிதைத்து விடுகிறது. பிள்ளைகள் வேண்டுமானால் தங்கள் துப்பாக்கிகளை கைவிடலாம், ஆனால் அவர்களுக்கு பயிற்சியளிக்கப்பட்ட வன்முறை வழிகளில் சிந்திப்பதை அவர்களால் அத்தனை சுலபத்தில் கைவிட்டு விட முடியாது. படைக் கலைப்பின் ஒரு பிரிவின் கடப்பாடு, வன்முறையை விட்டு பிள்ளையை வெளியேற்ற இயலக்கூடியதாக்கி, அனைத்தும் உள்ளடங்கியதும் மற்றும் கட்டுப்பாடானதுமான ஒரு வாழ்க்கைக்கு அவர்களை இட்டுச் செல்வதுமாகிறது. பாடவிதானங்களில் சமாதானக் கல்வியை சேர்ப்பது இந்த நடவடிக்கைக்கு அதிக வசதியளிக்கும் (மேனன், 2007)



இராணுவ நோக்கங்களுக்காக சிறுவர்களை ஆட்சேர்ப்பு செய்வது மற்றும் போராட்ட முன்னிலையில் அவர்களை வெளிப்படுத்துவது என்பன அவர்களின் அறிவாற்றல் வளர்ச்சியில் சிக்கல்களை ஏற்படுத்துவதற்கு வழிவகுக்கின்றன. பிள்ளைகளுக்கு போதனையூட்டி, கொலை, சித்திரவதை மற்றும் அழிவு போன்ற காரியங்களை செய்யும்படி அவர்களை நிர்ப்பந்தம் செய்வது, அவர்களின் அறிவாற்றல் திட்டங்களை ஒரு நோயின் அறி-குறி கொண்டதாக மாற்றிவிடுகிறது. பிரச்சினைகளை தீர்க்கும் அவர்களது ஆற்றல் மறைந்து விடுவதுடன் தர்க்க ரீதியான சிந்தனையும் கருத்தியல்களால் ஒடுக்கப்பட்டுவிடும். சிந்திப்பதற்கு பதில் செயற்படுத்துவதற்கே அவர்களுக்கு கற்பிக்கப்பட்டுள்ளது. அவர்கள் சாதாரணமாக தங்களது மூத்த போராளிகளின் கட்டளைகளுக்கு கீழ்படிந்து ஒரு சரியான கொலை இயந்திரத்தினைப் போல செயற்படுகிறார்கள். அவர்களது பயிற்சிக் காலத்திலும் மற்றும் காடுகளுக்குள் மறைந்திருத்தல், பதுங்கு குழி கடமையில் ஈடுபடுவது மற்றும் பல்வேறு தாக்குதல்களில் ஈடுபடுவது போன்ற செயல்களிலும் அவர்கள் செலவழித்த நேரம், பலன்தரக்கூடிய கற்கை வாய்ப்புகள் அவர்களுக்கு கிட்டுவதை தீவிரமாக மட்டுப்படுத்தியுள்ளது.

லெவ் வாகொற்ஸ்கியின் சமூக கலாசார கொள்கை வலியுறுத்துவது, சிறவர்கள் மற்றும் சமூகத்தின் அறிவாளியான அங்கத்தவர்களுக்கும் இடையே கூட்டுறவான பேச்சுவார்த்தைகள் நடைபெற வேண்டுமென்பதையே (வூள்போக்,வின்னே மற்றும் பெரி,2011). எல்.ரி.ரி.ஈ யின் சிறுவர்கள் ஆட்சேர்ப்புகள் மற்றும் அவர்களை இராணுவத்தில் பயன்படுத்தியது போன்ற செயல்கள் அச் சிறுவர்கள், சமூகத்தில் உள்ள அறிவாளியான அங்கத்தவர்களான ஆசிரியர்கள், மதகுருக்கள் மற்றும் ஏனைய சமூகத் தலைவர்கள் போன்றவர்களுடன் கூட்டுச் சேருவதை மிகவும் மட்டுப்படுத்தியது. கல்வி அல்லது அறிவுசார்ந்த தூண்டுதல்கள் சிறுவர்போராளிகளுக்கு கிட்டவில்லை. சிறுவர்கள் அவர்களது சமூகத்தின் கலாசாரத்தை இத்தகைய இடையீடுகள் மூலமே கற்றுக் கொள்கிறார்கள் என வாகொற்ஸ்கி விளக்கியிருக்கிறார்.

இலங்கை சிறுவர்போராளிகளைப் பொறுத்தமட்டில் இந்த இடையீடுகள் தடை செய்யப்பட்ட ஒன்றாகவும், மற்றும் அவர்களின் பிரபஞ்சம், யுத்தம் மற்றும் வன்முறை என்பனவற்றுக்குள் மட்டுப்படுத்தப்பட்டதாகவும் இருந்தது. இந்த சிறுவர்களுக்கு கலாசாரக் கருவிகள் மறுக்கப்பட்டன. சிறுவர்போராளிகளுக்கு மிகத் தீவிரமாக மட்டுப்படுத்தப்பட்ட நேரமே அவர்கள் படிப்பதற்கும் எழுதுவதற்கும் கிடைத்தது. அவர்களது சொல்லகராதி, பெரும்பாலும் யுத்தம் மற்றும் வன்முறை என்பனவற்றை அடிப்படையாக கொண்ட சொற்களை மட்டுமே கொண்டிருந்தன. இந்த படைக்கலைப்பு செய்யப்பட்ட சிறுவர்கள் மட்டுப்படுத்தப் பட்டளவு சொற்களின் அறிவும் மற்றும் மொழித்திறனுமே கொண்டிருந்தார்கள் என அவர்களின் ஆசிரியர்கள் அடையாளப்படுத்தினார்கள். (பேக்கர், சிமன்ஸ் மற்றும் கமெய்னுய் - 1977)

(தொடரும்)

# தத்துவ நிபுணரின் தவிப்பு



அரச சபைக்கு தத்துவ ஞானி ஒருவர் வந்தார். தத்துவம் என்பதைப் பற்றி ஒரு சொற்பொழிவு நிகழ்த்திவிட்டு இறுதியில், "நாம் கண்ணால் காண்பது, நாவினால் சுவைப்பது, மூக்கினால் நுகர்வது எல்லாமே நாம் அனுபவிப்பதாகத் தோன்றுமே தவிர, செய்யும் ஒவ்வொரு செயலும் பிரம்மையே தவிர உண்மையில் நாம் அப்படிச் செய்வதில்லை" என்று கூறி தத்துவ ஞானி என்பதற்கு ஏற்ப குழப்பமாகக் கூறி முடித்தார். அதனை சபையோர் ஏற்க வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

பொறுமையோடு இதைக் கவனித்துக் கொண்டிருந்த தெனாலி ராமன் எழுந்து, "ஐயா, தத்துவ ஞானியே நாம் சாப்பிடுவதும் கூட வெறும் பிரம்மைதானா? நாம் சாப்பிடுவதற்கும், சாப்பிடுவதாக நினைப்பதற்கும் வேறுபாடு இல்லையா?" என்று கேட்டார். இல்லை என்று ஆணித்தரமாகக் கூறினார் தத்துவ ஞானி.

"இன்று மன்னர்பிரான் வழங்கும் அறுசுவை விருந்தில் நாம் அனைவரும் கலந்து மகிழ்ச்சியோடு சாப்பிடலாம். அப்பொழுது இந்த தத்துவ நிபுணர் மட்டும் சாப்பிடாமல், சாப்பிடுவதாக நினைத்துக் கொண்டு வயிற்றை நிரப்பிக் கொள்ளட்டும்" என்று கூறினார் தெனாலி ராமன்.

**தத்துவ ஞானி தலை குனிந்தார்.**

# இந்து கோயில் வடிவில் ஒரு தேவாலயம்!



முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழும் இந்தோனேஷியாவில், கிறிஸ்தவர்களின் வேளாங்கண்ணி மாதா கோவில் அமைந்திருக்கிறது என்பது, ஒரு ஆச்சரியமான விஷயம் என்றால், அந்த ஆலயம் இந்துக்களின் கோபுர வடிவில் அமைந்திருப்பது அடுத்த ஆச்சரியம்.

தமிழ்நாட்டைச் சேர்ந்த ஜேம்ஸ் சிங்கராயர் என்ற பாதிரியார், மதப்பணிக்கென இந்தோனேஷியா சென்றபோது, அங்கு அவருக்கு மேடான் என்ற நகரில் ஒரு மாதா கோவில் கட்டும் பொறுப்பு வழங்கப்பட்டது.

இந்துக்கள் மத்தியில், அம்மனுக்கு பல பெயர்களும், தோற்றங்களும் இருப்பது போல, கத்தோலிக்க மதத்தில் மேரிமாதாவுக்கும் பல பெயர்களும், தோற்றங்களும் உண்டு. (உதாரணமாக: சகாய மாதா, ஆரோக்கிய மாதா, லூர்து மாதா, பனிமய மாதா, பூண்டி மாதா) இதில், எந்த மாதாவின் கோவிலை மேடானில் அமைக்கலாம் என்ற போது, பாதிரியார் ஜேம்ஸ், தமிழ்நாட்டில் பிரபலமாக இருக்கும் வேளாங்கண்ணி மாதாவுக்கு கோவில் கட்டலாம் என கூறி, சம்மதத்தைப் பெற்றுள்ளார். தமிழ்நாட்டில் இருக்கும் தேவாலயங்கள் எல்லாம், ஐரோப்பிய நாட்டு கோபுரங்களின் சாயலை தாங்கி நிற்கும் போது, வெளிநாட்டில் முதன் முதலாக கட்டப்படும் தமிழகத்தின் பிரபலமான வேளாங்கண்ணி மாதாவிற்கு அமைக்கப்படும் தேவாலயத்தை, தமிழ் நாட்டு கோயில்களின் வடிவில் அமைத்தால் என்ன என்று எண்ணியதன் விளைவு,

இப்போது, பல்வேறு நாடுகளில் உள்ள பக்தர்களின் நிதியுதவியுடன், தேவாலயம் ஏழு மாடங்களுடன் கம்பீரமாக எழுந்து நிற்கிறது. தேவாலயத்தின் முதல் மாடத்தில் மட்டுமே வழிபாடுகள் நடக்கின்றன. கீழ் மண்டபம், தியான மண்டபமாக செயல்படுகிறது. கதவுகளே இல்லாமல், எப்போதும் திறந்திருக்கும் இந்த மண்டபத்திற்கு, கிறிஸ்தவர்கள் மட்டுமல்லாது, இந்துக்களும், புத்த மதத்தினரும் கூட வந்து அமைதியாக தியானம் செய்து விட்டு செல்கின்றனர்.

# அமெரிக்காவில் ஒரு அவுட்சோர்சிங் கொமெடி!

- ஆதவன் -



**40**களின் நடுவிலான வயதுடைய "போப்", அமெரிக்காவின் முன்னணி தகவல் தொழில்நுட்ப கட்டமைப்பு நிர்வாக சேவை நிறுவனம் ஒன்றில் பணிபுரிகிறார். அவரது ஆண்டு சம்பளம் $250,000 (சுமார் ரூபா 3.25 கோடி). சற்றே வேலைப் பளு அதிகம் தான். ஆனால் "போப்" இதை எளிமையாக கையாண்டார்.

"போப்" வேலை செய்த நிறுவனம் ஊழியர்கள் வீட்டிலிருந்தே வேலை செய்வதற்கு வசதியாக வி.பி. என். எனப்படும் மெய்நிகர் தனியார் இணைப்புச் சேவை (VPN)யை இரண்டு ஆண்டுகளாக செயல்படுத்தியிருந்தது. நிறுவனத்தின் பாதுகாப்புப் பிரிவு மே 2012இல் அந்த சேவை தொடர்பான கணினி பதிவுகளை ஆய்வு செய்ததில் சீனாவில் இருக்கும் ஷென்யாங்கிலிருந்து இந்த வசதி பயன்படுத்தப்படுவது தெரிய வந்தது.

"போப்"பின் கணனியில் புகுந்துள்ள ஏதோ ஒரு திருட்டு நிரல் மூலம் யாரோ சீனாவிலிருந்து தங்களது கணனி வலைக்குள் நுழைந்து விட்டார்கள்" என்று அதிர்ச்சியடைந்த நிறுவனம், இதைப் பற்றி ஆராய்ந்து சரி செய்ய வெரிசான் ஆய்வாளர்களை உதவிக்கு அழைத்தது.

வெரிசானின் ஆய்வில், "சீனாவிலிருந்து வி.பி. என் பயன்படுத்தப்படுவது புதிதாக நடக்கவில்லை" என்று தெரிந்தது. கைவசம் இருந்த 6 மாத கணனி பதிவுகளின்படி குறைந்த பட்சம் 6 மாதங்களுக்கு இது நடந்து வந்திருக்கிறது. "போப்"பின் கணனியில் ஏதாவது நச்சு நிரல் புகுந்திருக்கிறதா என்று ஆய்வு செய்தது வெரிசான். அதற்காக கணனியில் அழிக்கப்பட்டு ஆனால் இன்னும் மறுபடியும் பயன்படுத்தப்படாத சேமிப்பிலிருந்து பழைய கோப்புகளை மீட்ட போது ஷென்யாங்கில் இருக்கும் ஒரு சீன நிறுவனத்துக்கு அனுப்பிய நூற்றுக் கணக்கான இன்வொய்ஸ்களை கண்டுபிடித்தது வெரிசான்.

அதாவது, "போப்" அவருக்குக் கொடுக்கப்படும் வேலையை சீனாவில் உள்ள ஒரு நிறுவனத்திற்கு அவுட்சோர்ஸ் செய்துவிட்டார் - அந்த வேலையைச் செய்ய வருடத்திற்கு $50,000 (சுமார் ரூபா 65 இலட்சம்) சீன நிறுவனத்திற்கு கொடுத்திருக்கிறார்.

இதனால் நிறுவனத்துக்கு நடக்க வேண்டிய வேலைகளில் எதுவும் பாதிப்பில்லைதான். கடந்த பல ஆண்டுகளாக அவருக்கு மிகச் சிறந்த மதிப்பீடுகள் கிடைத்திருக்கின்றன. அவரது நிரல்கள் சிறப்பாக எழுதப்பட்டிருந்தன, தெளிவாக இருந்தன, நேரத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. ஒவ்வொரு காலாண்டிலும் அவர் அந்த அலுவலகத்தின் மிகச் சிறந்த நிரலாளர் என்று பாராட்டப்பட்டிருந்தார்.

வங்கியை கொள்ளையடிக்கும் கொள்ளைக்காரனிடம் பிக்பொக்கெற் அடித்த திருடனின் கதைதான் "போப்"பின் கதை. வரும் சம்பளத்தில் கொஞ்சம் அங்கே கொடுத்து வேலையை முடித்துக் கொடுத்தார். சிறந்த, திறமையான பணியாளர் என்று பெயரும் கிடைத்தது.

நியாயமாக பார்த்தால் "போப்"புக்கு பதவி உயர்வு கொடுத்து அந்த நிறுவனத்தின் மேலாளர் ஆக்கி இருக்க வேண்டும். ஆனால், முதலாளித்துவ அறம் இதை குற்றம் என்கிறது. "போப்" வேலை நீக்கம் செய்யப்பட்டார்.

போப் இந்த உத்தியை தானாக கண்டுபிடிக்கவில்லை. உலகமயமாக்கல் காலகட்டத்தில் குறைந்த கூலிக்கு வெளிநாடுகளில் வேலைகளை செய்து வாங்குவதை இந்த முதலாளித்துவ நிறுவனங்கள்தான் அவருக்கு கற்றுக்கொடுத்திருந்தன.

இந்த சம்பவத்தைப் பற்றி விசாரணை செய்த வெரிசானின் அதிகாரி "போப்" போல இன்னும் பலர் இது போன்று செயல்படுவதாகவும், அவர்களைக் கண்டுபிடிக்க முயற்சித்துக் கொண்டிருப்பதாகவும்" சொல்லியிருக்கிறார். சீனாவிலிருந்து நேரடியாக அலுவலகத்தில் இணைக்கச் சொல்லாமல் தனது வீட்டுக் கணனி மூலமாக வழி நடத்தியிருந்தால் "போப்" கூட பிடிபடாமல் தப்பித்திருந்திருக்கலாம்.

அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலும் ஊழியர்களுக்கு சரியான கூலி, 8 மணி நேர வேலை, ஊக்கத் தொகை, வசதியான வேலைச் சூழல் மற்றும் இதர சலுகைகள் கொடுக்க வேண்டும். ஊழியர்கள் ஒன்று சேர்ந்து போராடி விடக் கூடாது என்பதற்காக பல சலுகைகளை கொடுத்து உழைக்கும் வர்க்கத்தை அமைதிப்படுத்தி வைத்திருக்க வேண்டியிருந்தது. ஆனால் நிறுவனங்களின் இலாப வேட்டைக்கு அது மிகப்பெரிய ஆப்பாக இருந்தது.

அதைத் தாண்டுவதற்கு உலகமயமாக்கல் உருவாக்கிக் கொடுத்த வழி, "குறைந்த கூலிக்கு, மோசமான பணிச் சூழலில், அடிமைகளைப் போல், நேரம் காலம் பார்க்காமல் உழைக்க, வளரும் நாடுகளில் இருக்கும் மக்கள் கூட்டத்தைப் பயன்படுத்தி தேவையான வேலைகளை செய்து வாங்கிக் கொள்வது."

அமெரிக்காவில் ஒரு சேவையை உருவாக்கும் செலவில் பல மடங்கு குறைவாக சீனாவிலோ, இந்தியாவிலோ, ஆபிரிக்காவிலோ வேலையை முடித்து வாங்கி விடலாம். கிளம்பினார்கள் முதலாளிகள். அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலும் வேலைகள் குறைந்தன, சீனாவிலும் இந்தியாவிலும் மனிதத்தன்மை குறைந்தது. பெருமுதலீட்டு நிறுவனங்களின் உற்பத்தியும் இலாபமும் உயர்ந்தது.

பன்னாட்டு நிறுவனங்கள் தமது பெருமளவு இலாப வேட்டைக்காக நடத்தும் சுரண்டலைப் போல "போப்" சிறு அளவில் சுரண்டி இருக்கிறார். இதையே அந்த நிறுவனம் செய்திருந்தால் அது பொருளாதாரத் திறமை. "போப்" செய்ததால் துரோகம். அந்த நிறுவனம் இனி வரும் காலத்தில் ருசிகண்ட பூனையாக, தானே இதைத் தான் செய்யப் போகிறது.

# உரையாற்றும் நடிப்பு

- சார்லஸ் -

### சிவாஜி கணேசன்

**த**மிழ் சினிமாவின் உச்சங்களில் ஒன்று சிவாஜி கணேசன். அவருடைய பிரதான பலம், உணர்ச்சிகரமான



ஏற்றத் தாழ்வுகள் கொண்ட தெளிவான வசன உச்சரிப்பு. அதுதான் அவரை வெற்றிகரமான நாடக நடிகராகவும், முதல் திரைப்படத்திலேயே உச்ச நட்சத்திரமாகவும் ஆக்கியது. "பராசக்தி" என்றவுடன் நினைவுக்கு வருவது அந்த நீதிமன்ற வசனம் தான். அந்தக் காட்சியின் பெரும் பகுதி வசனங்களை "உரையாடல்" என்பதைவிட "உரைநிகழ்த்துதல்" அல்லது "உரையாற்றுதல்" என்றே சொல்லவேண்டும். அந்த வசனம் அளவுக்கே பிரபலமான "மனோகரா" மற்றும் பல படங்களில் சிவாஜி கணேசன் மிகச் சிறந்த உரைநிகழ்த்தல்களைச் செய்திருக்கிறார். படத்துக்குப் படம் அவர் நடிப்பு மெருகேறியிருக்கிறது என்றபோதும், அவருடைய முதல் படத்து கன்னிப் பேச்சை 60 ஆண்டுகளுக்குப் பிறகும் தமிழுலகம் நினைவில் வைத்திருக்கிறது, பொதுச் சூழலில் புழங்குகிறது என்பது ஆச்சர்யம்தான்.

### சார்லி சாப்ளின்

"கிரேட் டிக்டேட்டர்" படத்தின் இறுதிக் காட்சியில், ஜனநாயகத்துக்கும் அமைதிக்கும் ஆதரவாகவும் - சர்வாதிகாரத்துக்கும் போருக்கும் எதிராகவும், மறக்க முடியாத ஒரு உரையை நிகழ்த்தியிருக்கிறார் சார்லி சாப்ளின். அதுதான் அவர் நடித்த முதல் "பேசும் படம்" என்பதும், அதிலேயே உலகத்தை நோக்கி, தான் பேச நினைத்ததையெல்லாம் பிரசார உரை போல நிகழ்த்திவிட்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அடோல்ப் ஹிட்லர் ஒரு மாபெரும் வல்லரசின் தலைவராக இருந்தபோதே, அவருக்கு எதிராக, குறிப்பாக அவர் யூதருக்குச் செய்த அநீதிக்கு எதிராக, கலையுலகில் எழுப்பப்பட்ட ஒரே கண்டனக் குரல் இந்தப் படம் தான். ஹிட்லரும்




சாப்ளினும் ஒரே வயதுக்காரர்கள். அதிலும் ஒரே மாதத்தில் பிறந்தவர்கள் - ஹிட்லர்: ஏப்ரல் 20 1889, சாப்ளின்: ஏப்ரல் 16 1889 - ஆக சாப்ளின் 4 நாட்கள் மூத்தவர்.

கலைஞர்களுக்கு சமூகப் பொறுப்பு அவசியமானது, அவர்கள் அநீதிக்கும் தீமைக்கும் எதிராக எப்போதும் குரல் எழுப்பவேண்டும் என்பதற்கு சார்லி சாப்ளின் ஒரு பெரிய முன்னுதாரணம்.

இந்தப் படத்தில் ஹிட்லரைக் கோமாளியாகச் சித்தரிக்கும் ஏராளமான காட்சிகள் உண்டு குறிப்பாக, உலக உருண்டை வடிவிலான பலூனை வைத்து விளையாடி உடைக்கும் காட்சி. அந்த நகைச்சுவைக்குள் இருக்கும் கூர்மையான விமர்சனமே சார்லி சாப்ளின் என்னும் கலைஞனின் வலிமை. படத்தின் ஆரம்பத்தில் வரும் உலகப் போர்க் காட்சிகளும் நையாண்டி கலந்து முன்வைக்கப்பட்ட போருக்கு எதிரான விமர்சனமே.

அவரே திரைக்கதை எழுதி இயக்கிய இந்தப் படத்தில், ஹிட்லர் போல ஒரு சர்வாதிகாரியாகவும், ஒரு யூத சவரத் தொழிலாளியாகவும் இரு வேடங்களில் நடித்திருக்கிறார் சாப்ளின்.

பிரசாரம் போல நேரடியாகக் கருத்துச் சொல்வது ஒரு நல்ல கலைவெளிப்பாடு அல்ல என்றே நான் நினைக்கிறேன். ஆனால் அவசியமானபோது கலைஞர்கள் பிரசார யுத்தியைக் கையில் எடுப்பது தவறல்ல என்று இந்தப் படத்தைப் பார்க்கும்போது தோன்றுகிறது.

### மார்லன் பிராண்டோ

கதாபாத்திரங்கள் ஒரு அவையிலோ, திரளான மக்களின் முன்னோ உரை நிகழ்த்தி அவர்களை எழுச்சிகொள்ளவைப்பது போன்ற காட்சிகள் திரைப்படத்துக்கு வந்தது நாடகங்களில் இருந்துதான். நாடகாசிரியர் ஷேக்ஸ்பியர் தான் அதில் முன்னோடி. அவருடைய நாடகமான "ஜூலியஸ் சீசர்"இல் சீசரின் கொலைக்குப் பிறகு மக்களை நோக்கி மார்க் அன்ரனி நிகழ்த்தும் உரை ஷேக்ஸ்பியர் எழுதியவற்றிலேயே ஆகச் சிறந்த உரை என்று சொல்லலாம். அந்த நாடகம் ஹொலிவுட்டில் படமாக எடுக்கப்பட்ட போது, அதில் மார்க் அன்ரனியாக நடித்தவர் மார்லன் பிராண்டோ.



on the waterfront, a streetcar named desire, godfather போன்ற மறக்க முடியாத பல படங்களில் பிராண்டோ நடித்திருந்தாலும், "ஜூலியஸ் சீஸர்" தான் அவருடைய ஒரே வரலாற்றுப்படம் என்று நினைக்கிறேன். இதைக் குறிப்பிடுவதற்குக் காரணம், பொதுவாக பழைய வரலாற்றுப் படங்களில் தெள்ளத் தெளிவான வசன உச்சரிப்பு கொண்ட மரபான நடிகர்களே நடிக்க முடியும். ஆனால் பிராண்டோ ஒரு "மெதட் ஆக்டர்". ஒவ்வொரு சொல்லும் துல்லியமாக ஒலிக்கும்படி பேசுவது செயற்கையான நடிப்பு என்று நினைப்பவர். அப்படி இருந்தும் ஒரு ஷேக்ஸ்பியர் நாடகத்தின் படமாக்கத்தில் அவருக்கு இடம் அளிக்கப்பட்டதற்கு, அப்போது அவர் பார்வையாளர்களிடம் பெற்றிருந்த பெரும் வரவேற்பே காரணமாக இருக்க முடியும்.

### அல் பாஸினோ

எழுபதுகளுக்குப் பின் வந்த நடிகர்களில் தலைசிறந்த மேடைப்



பேச்சாளர் என்றால் அது அல் பாஸினோ தான். அவர் நடிக்க வராமல் மத போதகராகவோ, அரசியல்வாதியாகவோ ஆகியிருந்தால் இன்னும் நிறைய சம்பாதித்திருந்திருப்பார் என்று நான் நினைப்பதுண்டு. படத்துக்குப் படம் பிரமிக்கத்தக்க வகையில் தனது பேச்சாற்றலை அவர் வெளிப்படுத்தியிருக்கிறார். அதேசமயம் மிகக் குறைவாகப் பேசும் "மைக்கேல் கார்லியான்" என்னும் கதாநாயகனாக மூன்று godfather படங்களிலும் சிறப்பாகச் செய்திருக்கிறார் என்பது அவருடைய பன்முக நடிப்புக்குச் சான்று.

வாரம் ஒரு பாடசாலை




# யாழ். இந்து ஆரம்ப பாடசாலை

## பாடசாலையின் வரலாற்றுச் சுருக்கம்

பழமையும் வரலாற்றுப் பின்னணியும் கொண்ட இப்பாடசாலை ஓர் ஆரம்ப பாடசாலையாக 18.1.1915 இல் உருவாக்கம் பெற்றது. இதற்கு இந்து மகா சபை முக்கிய பங்கினை வகுத்தது எனலாம்.

ஆரம்ப காலத்தில் இப்பாடசாலை இந்துக்கல்லூரித்தமிழ் வித்தியாசாலை என்ற பெயரில் தனித்துவமாக ஆண் பிள்ளைகளுக்கென ஆரம்பிக்கப்பட்ட தொன்றாகும். 5.3.1927 இல் இருந்து கலவன் பாடசாலையாகத் தொழிற்படத் தொடங்கியது.

1928 ஆம் ஆண்டுகாலப்பகுதியில் இந்துக்கல்லூரியின் கிழக்குப்பகுதியில் அமைந்த விளையாட்டு மைதானத்தில் கொட்டகை அமைக்கப்பட்டு இப்பாடசாலை இயங்கி வந்தது. 17.08.1951 இல் கஸ்தூரியார் வீதியில் 244 ஆம் இலக்கத்தில் தற்போது உள்ள பாடசாலைக்கான அத்திபாரம் இடப்பட்டது. புதிய கட்டடத்தில் 22.1.1954 இல் இயங்கத் தொடங்கியது.

21.01.1975 இல் இருந்து கல்லூரி நிர்வாக அமைப்பிலிருந்து முற்றாக விலகி யாழ். இந்து ஆரமப பாடசாலை என்ற பெயரில் தனித்துவமான கட்டமைப்புடன் ஆரம்பக் கல்விக்குரிய கடடமைப்புடன் ஆரம்பக்கல்விக்குரிய பாடசாலைகளில் ஒன்றாகத் திகழ்ந்து வருகிறது.

தரம் ஒன்று தொடக்கம் தரம் ஐந்து வரை ஒவ்வொரு தரங்களிலும் 5 சமாந்தர வகுப்புக்களைக் கொண்டதாக, தரம் ஒன்றிலிருந்து ஐந்து வரை வகுப்புக்களில் மாணவர்கள் கலவி கற்று வருகின்றனர். 1984,1985 காலப் பகுதிகளில் பரீட்சார்த்தமாக தரம் 6,7 ஆம வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டன. ஆனால் இத்திட்டம் முற்றாகக் கைவிடப்பட்டது.

தரம் III ஐச் சேர்ந்த பாடசாலை இதுவாகும். ஒழுக்கத்தையும் சைவப்பாரம்பரியப் பண்புகளையும் பேணும் வகையில் “கற்று ஒழுகு காலம் அழியேல்” என்ற மகுடவாசகத்தை இப்பாடசாலை கொண்டுள்ளது. கலைமகளின் வடிவத்தைச் சூழ்ந்து வீணை, புத்தகம், சுடர், கொடி போன்ற சின்னங்கள் பாடசாலையின் சகல செயற்பாடுகளையும் விதந்துரைக்கும் வகையில் மேற்கூறிய மகுட வாசகம் திகழ்கின்றது. பாடசாலையின் கொடியானது நீலமும் வெண்மையும் தனித்தனியே கிடையாக இணைக்கப்பட்ட கொடியாக விழங்குகன்றது. “ஆர்வமுடன் பாடுவோம்” என்ற வரிகளினூடாகப் பாடசாலை கீதமும் இசையுடன் இணைந்து ஒலிப்பது இன்ப உணர்வுகளை மீட்கும் செம்மை உடையதாகும்.

இங்கு முதன்மை நிலை 1, முதன்மை நிலை 2,3 என்றவாறு இருநிலைகளாக மாணவர்கள் வகுக்கப்பட்டு இணைபாட விதானச்செயற்பாடு விரிவுபடுத்தப்பட்டுள்ளன. விளையாட்டுப்போட்டி, உடற்பயிற்சி, கவின்கலைகள். மொழிவிருத்திச் செயற்பாடுகள், ஆங்கிலமொழிச் செயற்பாடுகள், சாரணீயம், கணனிக் கல்வி, சென் ஜோனஸ் அம்புலன்ஸ் சேவை ஆகிய செயற்பாடுகள் பாடசாலை நாள் காட்டியின் பிரகாரம் செயற்படுத்தப்படுகின்றன. முதன்மை நிலை -1, முதன்மைநிலை -2 ஆகியவற்றிற்கு தனியான “பாண்ட்” இசை அணியினர் அமைக்கப்பட்டுள்ளனர்.

யாழ்இந்து ஆரம்ப பாடசாலைக்கு விளையாட்டு மைதானம் இல்லாமை பெரும் குறையாக இருந்து வநதது. இக் குறையை நிவர்த்தி செய்யும் வகையில் பாடசாலையின் பின்புறத்தில் அமைநதுள்ள காணி பெற்றோர், பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள் ஆகியோரின் பெரு முயற்சியாலும் அப்போதைய அதிபர் திரு.வே.ஞானகாநதன் அவர்களின் அயராமுயற்சியாலும் விளையாட்டு மைதானமாக 2010 ஆம் ஆண்டு உருப்பெற்றது.

இப்போது பாடசாலையின் சகல விளையாட்டுப் போட்டிகளும் இம் மைதானத்திலேயே சிறப்புற நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

கடந்த வருடம் DFCC வங்கியின் அனுசரணையுடன் அகில இலங்கை ரீதியில் நடைமுறைப்படுத்தப்பட்ட 6 S செயற்றிட்டத்தில் போட்டியிட்ட 30 பாடசாலைகளில் 5 ஆம் இடத்தை எமது பாடசாலை பெற்றுக்கொண்டது.

அது மட்டுமன்றி தேசிய தகவல் தொழில்நுட்ப சிறப்பு விருது வழங்கல் -2010 எமது பாடசாலை தேசியமட்டத்தில் 9 ஆம் இடத்தினையும் மாகாண மட்டத்தில் 6 ஆம இடத்தினையும் பெற்றுக்கொண்டது.

பாடசாலையின் வளர்ச்சிக்கு மெருகூட்டிய பெருமை இப்பாடசாலையை நிர்வகித்த அதிபர்களைச் சார்ந்ததாகும். அந்த வகையில் கீழ்வரும் காலகட்டத்தில் பங்குகொண்டு உழைத்த அதிபர்களின் விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

இப்பாடசாலை அதிபர்களின் வழிகாட்டலின் கீழ் உழைத்த ஆசிரியர்களின் பணி மகத்தானது.

இன்று 35-40 இற்கு இடைப்பட்ட ஆசிரியர்கள் பணியாற்றி வருகினறனர். அவர்கள் தம் தன்னலமற்ற சேவையின் மூலம் உழைத்து ஆசிரியமரபு வழி நின்ற மாண்பினராகவே விளங்குகின்றனர்.


2013 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள்


2013 கால்கோள் விழா



அதிபர், ஆசிரியர்கள்

## திரு.சு.தியாகலிங்கம்

(அதிபர் தரம் III)

பயிற்றப்பட்ட பட்டதாரி பட்டப்படிப்பின் கல்வி டிப்ளோமா

முதுகல்விமானி



பாடசாலை அதிபர் அவர்கள் 2010 இல் தனது பதவியை ஏற்று செவ்வனே செய்து வருகின்றார். மாணவர்களின் கல்வி, கலை, கலாசார, விளையாட்டு அனைத்து செயற்பாடுகளிலும் முன்னின்று செயற்படுகின்றார்.

அதேபோல் மாணவர்களின் சமய, சமூக பழக்கவழக்கங்களிலும் மிகுந்த அக்கறைகாட்டி வருகின்றார். மாணவர்கள் கோட்டம், வலயம், மாவட்டம், மாகாணம், தேசியமட்டங்கள் வரை சென்று பரிசில்களை வென்றமை அதிபருக்கு பெருமை சேர்க்கத்தக்க விடயமாகும்.

ஆசிரியர்கள், மாணவர்களின் குறைகளை கண்டறிந்து அதற்கேற்ப அவர்களுக்குச் சிறந்த ஆலோசனைகளை வழங்கி நல்வழிப்படுத்தி வருகின்றார். இவருடைய சேவை மென்மேலும் தொடர இறைவனை பிரார்த்திப்போம்.

# புதியவகை நெல்லினங்கள் அறிமுகம்

# தென்மராட்சியில் அமோக விளைச்சல்

## – உதவி விவசாயப் பணிப்பாளர் –



(கிரு-சிகரம்)

தென்மராட்சி பிரதேச செயலகத்துக்குட்பட்ட நாவற்குழி மற்றும் கோவிலாக் கண்டிப் பகுதியில் இம்முறை பெரும் போக நெற்பயிர்ச் செய்கையில் யாழ்.விவசாயத் திணைக்களம் அறிமுகப்படுத்தியுள்ள புதிய வகை நெல் இனங்கள் அமோக விளைச்சல் தந்துள்ளதாக யாழ். விவசாயத் திணைக்களத்தின் உதவி விவசாயப் பணிப்பாளர் ச.சதீஸ்வரன் தெரிவித்தார்.

யாழ்.மாவட்டத்தில் இதுவரை காலமும் மொட்டைக் கறுப்பன், ஆட்டக்காரி, 406 போன்ற நெல் இனங்களே பயிரிடப்பட்டு வந்தன. இந்த நிலையில் 2013 ஆம் ஆண்டு பெரும் போக நெற்பயிர்ச்செய்கையில் யாழ். விவசாயத் திணைக்களம் புதிய வகை நெல் இனங்களை அறிமுகப்படுத்தியுள்ளது.

BG-358, BG-360, BG-406, 407-H, பாஸ்மதி என்ற இந்த புதிய வகை நெல்லினங்கள் விவசாயத் திணைக்களத்தால் தெரிவுசெய்யப்பட்ட நாவற்குழி கிழக்கு நெணியன் வெளி மற்றும் கோவிலாக்கண்டி பிரதேசத்தில் 2012 ஒக்டோபர் மாத இறுதியில் இவை பரீட்சார்த்தமாகப் பயிரிடப்பட்ட நிலையில் சிறந்த விளைச்சலைத் தந்துள்ளன.

புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட இந்த நெல்லினங்கள் தற்போது அறுவடைக்குத் தயாராக உள்ள நிலையில் கடந்த செவ்வாய்க்கிழமை நாவற்குழி நெணியன் வெளியில் நடைபெற்ற புதிய நெல் இன அறிமுக விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் இது தொடர்பாக தெரிவிக்கையில்,

இதில் 407-H என்ற உயர்ரக கலப்பின புதிய நெல் இனம் 1 ஏக்கருக்கு 7 கிலோ விதைத்தால் 180 புசல் வரை விளைச்சலைப் பெறமுடியும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இந்த நிகழ்வில் வட மாகாண விவசாய கால்நடை அபிவிருத்தி, காணி, நீர்ப்பாசன, கடற்றொழில் அமைச்சின் செயலாளர் யு.எல்.எம். ஹால்தீன், விதைகள் அத்தாட்சிப்படுத்தும் சேவைப் பணிப்பாளர் அ.ரமணீதரன் ஆகியோர் கலந்துகொண்டு அறுவடைக்குத் தயாராக உள்ள இந்தப் புதிய நெல்லினங்களைப் பார்வையிட்டனர்.

# களவாக மணல் அகழ்வு; அரச அதிபருடன் சந்திப்பு



யாழ். அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் அவர்களுடன் நல்லூர் பிரதேசசபை எதிர்க்கட்சித்தலைவர் அ.இரவீந்திரதாசன் அண்மையில் சந்தித்து அரியாலைகிழக்கு பகுதிகளில் களவாக 25 இற்கும் மேற்பட்ட உழவு இயந்திரங்கள் மூலமாக மண் கொண்டு செல்லப்படுவது பற்றி கலந்துரையாடினார் அத்துடன், அரியாலைகிழக்கு பிரதான வீதி புனரமைப்பு விடயம் தொடர்பாகவும் கலந்துரையாடினார்.

இதில் நல்லூர் பிரதேசசபை உறுப்பினர் வ.ஸ்ரீகணேசா, J/90 கிராம அலுவலர் எஸ்.விஜிதரன், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர். அரசாங்க அதிபர் இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் பேசி சட்ட நடவடிக்கை எடுப்பதாகக் கூறினார்.

# வடக்கில் வாழ்வின் எழுச்சி இலக்கு நோக்கிய பயணம்

(தொடர்ச்சி... )

வாழ்வின் எழுச்சித்திட்டத்தின் கீழ் மீனவ குடும்பங்களின் மீன்பதனிடல் செயற்பாட்டின் மூலம் விற்பனையை மேம்பாடு அடைய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இந்த வகையில் 2012 ஆம் ஆண்டு யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த 150 மீனவ குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கு மீன் பதனிடல் தொடர்பான பயிற்சி வழங்கப்பட்டதுடன் அவர்களுக்கு பிடிக்கப்பட்ட மீனை பதனிடல் செய்வதற்காக 150 தளபாடங்கள் வழங்கப்பட்டுள்ளன. இவ்வாறான பதனிடல் செயற்பாடுகளினால் சுத்தமான கருவாடுகளை எதிர்காலத்தில் கிடைக்கப் பெறச்செய்வதுடன் எதிர்காலத்தில் இதே பதனிடல் செயற்பாட்டை ஏனைய மீனவக் குடும்பங்களும் பின்பற்றக் கூடியதாக இருக்கும்.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சும், பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சு ஆகியன இணைந்து நடாத்தும் வாழ்வின் எழுச்சித் திட்

## இதுவரை கடந்து சென்றவை

டத்தின் மற்றொரு அங்கமாகிய நாடு முழுவதும் 62,800 குடிசைக்கைத்தொழில் மனைப்பொருளாதார அலகுகளை ஸ்தாபித்தல் என்ற திட்டத்தின் குடிசைக் கைத்தொழிலை மேம்படுத்துவதற்கான செயற்பாடு யாழ்ப்பாண மாவட்டத்தில் கடந்த வருடம் ஆரம்பிக்கப்பட்டது. குடிசைக் கைத்தொழில் நிகழ்ச்சித் திட்டத்தின் செயற்பாடுகள் 5 கட்டங்களாக வகைப்படுத்தப்பட்டுள்ளது.

அவையாவன குடிசைக் கைத்தொழில் கண்காட்சி, தேவைகளை மதிப்பீடு செய்தல், பயிற்சிகளை வழங்கல், மூலப்பொருள் உபகரணங்களை வழங்கல் மற்றும் மதிப்பீடு




என்பவற்றைக் கொண்டிருக்கும்.

குடிசைக் கைத்தொழில் திட்டத்தின் முதற்கட்டமாகிய குடிசைக் கைத்தொழில் கண்காட்சி கடந்த வருடம் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் அமைச்சர் பசில் ராஜபக்ஷவினால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இக்கண்காட்சியில் 6,000 இற்கும் மேற்பட்டோர் பங்கு பற்றியதுடன் இவ்வாறு பங்கு பற்றியவர்களில் 2,800 இற்கும் மேற்பட்டோர் குடிசைக் கைத்தொழிலில் ஈடுபடுவதற்கான தமது விருப்பத்தினை தெரிவித்துக் கொண்டனர். (தொடரும்...)

# பதிவிருக்கப் பெட்டகம்

பரஸ்பர மொழி அறிவும் தொடர்பாடலும் இணக்கமான சகவாழ்விற்கு மிக அவசியமானவை. அத்தகைய உறவும் புரிதலும் இருக்குமிடத்தில் இனவெறுப்பு மட்டுப்படும். இலங்கையில் சிங்களவர்களுக்கும் தமிழர்களுக்கும் இடையில் ஒரு சிறிய தீவில் ஏற்பட்டிருக்கவேண்டிய அளவு உறவு. இல்லை. இரு இனங்களிலும், மற்ற இனத்தவரை 'அன்னிய'ராக 'பிற'ராகக் கட்டமைக்க பல சக்திகள் முயன்றன. இதன் வழி ஆக வேண்டிய காரியங்களும் இருந்தன. வேறுபாடுகளைக் கட்டமைத்ததில் காலனி யாதிக்கத்தின் தாக்கத்திற்கும் கணிசமான பங்களிப்பு உண்டு. அவ்வாறு கட்டமைக்கப்பட்ட பின்னர் பிறரின் துன்பத்தை மனிதததன்மை இன்றி நிராகரித்துவிட முடிகிறது. தமிழ் மக்களை இராணுவம் படுகொலை செய்வதை, பெண்களை வன்பாலுறவு கொடுமைக்கு உட்படுத்துவதை சிங்கள மக்களால் கொண்டாட முடிகிறது. எதிர்வன்முறையாக ஒரு பொது இடத்தில் குண்டு வைத்து, சிங்கள பொதுமக்களை, பெண்களை, குழந்தைகளை புலிகள் படுகொலை செய்யும்போது அதை வெற்றியாகக் கண்டு மகிழ தமிழ் மக்களால் முடிகிறது. யுத்தச் சூழல் உருவாவதற்கு தொடர்பாடலின்மையும் ஒரு காரணமாக இருக்கக்கூடும். - காலச்சுவடு கண்ணன்

தேச எல்லையைக் காரணம்காட்டி கிராமங்களைப் பிரிப்பது எத்தனை அபத்தமானது என்பது மட்டுமல்ல, எத்தனை சோகமானது என்பதையும் உணர ஒருவர் சாதத் ஹஸன் மன்டோவின் 'டோபா டேக் சிங்' என்கிற சிறுகதையைப் படிக்க வேண்டும். (உருது மூலத்தின் ஆங்கில வடிவத்தை sadat hasan manto, toba tek singh என கூகிளில் தேடினால் அடையலாம்.) அந்தக் கதையில், இந்திய பாக் பிரிவினையின்போது பைத்தியக்கார ஆஸ்பத்திரியில் உள்ளவர்களையும் அவரவர் மத, இன அடிப்படையில் அவரவர் நாட்டுக்கு அனுப்புவது என்கிற ஒரு பைத்தியக்கார முடிவை அரசு எடுத்து அவ்வாறே அவரகள் பிரித்து அனுப்பப்படுவர். அப்போது அந்தப் பைத்தியங்கள் எழுப்பும் கேளவிகளும், அவர்கள் காட்டும் எதிர்ப்புகளும் யார் பைத்தியக்காரர்கள் என்கிற கேள்வியை நம்முன் எழுப்பும். - அ.மார்க்ஸ்

அரசு என்பது என்ன? திரும்பத்திரும்ப அது வரையறை மறுவரையறை செய்யப்படுகிறது. சம்பிரதாயமான வரையறை ஒரு சமூகம் தன்னைத்தானே நிர்வாகம் செய்துகொள்வதற்காக உருவாக்கிக் கொண்ட அமைப்பு என்பது. சம்பிரதாய மார்க்ஸிய வரையறை என்பது அது ஆளும் வர்க்கம் அடக்கப்பட்ட வர்க்கத்துக்கு மேல் அதிகாரம் செலுத்துவதற்காக உருவாக்கியிருக்கும் ஓர் அடக்குமுறை அமைப்பு என்பது. நவமார்க்ஸிய வரையறை என்பது அது வர்க்கங்களுக்கு நடுவே உருவாகும் ஒரு சமரசப்புள்ளி என்பது.

சமரசப்புள்ளியே அரசு என்பதே என் பார்வையில் பொருத்தமான வரையறை. வர்க்கங்களுக்கிடையே உள்ள சமரசம். பண்பாடுகளுக்கிடையே உள்ள சமரசம். பல்வேறு அதிகார இச்சைகளுக்கிடையே உள்ள சமரசம். தத்துவார்த்தமாகப் பார்த்தால் அரசு என்பது கடந்தகாலத்துக்கும் நிகழ்காலத்துக்கும் இடையேயான சமரசமும் கூட. ஆகவே தான் தராசின் முள் போல அரசு எப்போதும் ஆடிக்கொண்டே இருக்கிறது. வரலாறு முழுக்க பார்த்தால் நிலையான அரசு என்ற ஒன்றே இல்லை என்று காணலாம். பேரரசுகள் கூட தற்காலிகமானவையாகவே இருந்திருக்கின்றன. ஒவ்வொரு கணமும் தன்னை நிலை நிறுத்திக் கொள்வதற்கான போராட்டத்திலேயே இருந்திருக்கின்றன.

ஆகவே அரசு ஏன் இயங்குகிறது என்று கேட்டால் தன்னை நிலைநிறுத்திக் கொள்வதற்காக என்று மட்டுமே சொல்ல முடியும். அதன் மொத்த விசையும் அனைத்து ஆற்றலும் அதற்காகவே. அரசு என்பது ஒட்டுமொத்தமாக சில விதிகளும் சில நடைமுறைகளும் சில ஆசாரங்களும் சில நம்பிக்கைகளும் அடங்கிய ஒரு தொகை என்று சொல்லலாம். நிர்வாகம் என்பது அந்த அருவமான அமைப்பின் தூலமான வடிவம். ஆகவே அது ஓர் இயந்திரம். அந்த இயந்திரத்தின் ஒரே நோக்கம் அது இருப்பதும் செயல்படுவதும் மட்டுமே. - ஜெயமோகன்

ஒரு மனிதனின் மதிப்பு அவனது நல்ல தன்மைகள் குணாங்களினால் மட்டும் அல்லஆ அவன் எவ்வளவு தூரம் நமக்குப் பயன்படுவான் என்பதைப் பொறுத்தது என்று நம்பும் உலகத்தில் நாம் வாழ்ந்து வருகிறோம். - ஸ்ரீலால் சுக்ல

# அதிகரிக்கும் பாதீனியங்களால் வவுனியா விவசாயிகள் பாதிப்பு



(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் விவசாய நிலங்கள் உட்பட பல பிரதேசங்களையும் ஆட்கொண்டிருக்கும் பாதீனியம் களையின் காரணமாக பெரும் பாதிப்புக்குள்ளா கியுள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

விவசாய திணைக்களத்தினால் பாதீனியம் களையானது நெற்செய்கைக்கு பாதிப்பை ஏற்படுத்தும் என்பதனால் அதனை வயல் பிரதேசத்தில் கண்டவுடன் அழிக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் அது ஓர் நச்சுத் தன்மை கொண்டது என்றும் கூறப்பட்டதனால் தமது விவசாய நிலங்களில் இவ்வா றான களைகளை கண்டால் உடன் அழிக்கும் செயற்பாட்டில் ஈடுபட்டு வருவதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

எனினும் தொடர்ச்சியாக இந்தகளை வளர்வதனால் விவசாயிகள் பெரும் பாதிப்பை எதிர்கொண்டு வருவதாகவும் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் வவுனியா மாவட்ட விவசாய திணைக்களத்தின் விரிவாக்கற் பிரிவு பிரதிப் பணிப்பாளர் சகிலா பானுவிடம் கேட்டபோது,

இந்தக்களையானது எமது நாட்டில் உருவானதன்று. வேறு நாட்டில் இருந்து இங்கு கொண்டுவரப்பட்டுள்ளது. எனினும் எமது நாட்டில் இது வளர்வதற்கு ஏதுவான சூழல் காணப்படுவதனாலும் அதற்கு எதிரான சக்திகள் இன்மையாலும் அவை மிக வேகமாக வளர்ந்து வருகின்றன.

இப்பயிரானது செவ்வந்தி இன வர்க்கத்தை சேர்ந்ததாக காணப்படுவதுடன் இத்தாவரத்தின் விதையானது 10 முதல் 15 வருடங்கள் உறங்கு நிலையில் காணப்படும் என்பதனால் இன்று எமது சூழலில் காணப்படும் பாதீனியத்தை அழிப்பதற்கு 10 தொடக்கம் 15 வருடங்கள் உழைக்க வேண்டியுள்ளது.

அத்துடன் ஒரு பூவில் 15 ஆயிரம் விதைகள் உற்பத்தியாகும் என்பதனால் இவற்றை கட்டுப்படுத்துவதற்கு பெரும் பிரயத்தனம் எடுக்க வேண்டியிருக்கும். எனினும் இத் தாவரத்தை பயிரிட்டால் அல்லது அழிக்கத் தவறினால் ஒரு இலட்சம் ரூபா வரை தண்டப்பணமும் 6 மாத காலம் வரையிலான சிறைத் தண்டனையும் அனுபவிக்க வேண்டி வரும்" என்றார்.

# புனரமைக்கப்படாத நிலையில் உருத்திரபுரம் பொதுச்சந்தை



(கிளிநொச்சி)

கிளிநொச்சி மேற்கிலுள்ள கரைச்சிப் பிரதேச சபையின் ஆளுகைக்கு உட்பட்டிருக்கும் உருத்திரபுரம் பொதுச் சந்தை புனரமைக்கப்படாத நிலையில் காணப்படுவதால் தாம் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்வதாக பிரதேச மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். கூரைகள் அற்ற நிலையில் இக்கட்டடம் இயங்கி வருவதால் மழைகாலங்களில் வியாபாரிகளும் பொதுமக்களும் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

40 ஆண்டுகளுக்கு முற்பட்ட இந்தச் சந்தை 15 இற்கு மேற்பட்ட கடைத்தொகுதிகளையும் மீன், மரக்கறி, மாமிசம் உள்ளிட்ட சிறு வர்த்தகப் பிரிவுகளையும் உள்ளடக்கி காணப்படுகின்றது. இந்தச் சந்தையை புனரமைத்து தருமாறு தாம் பல்வேறு கோரிக்கைகளை விடுத்தபோதும் இதுவரை அதற்கான நடவடிக்கைகள் உரிய தரப்பினரால் எடுக்கப்படவில்லை என பிரதேச மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

# மறைத்து வைக்கப்பட்ட பத்து ஆமைகள் மீட்பு



(யாழ்ப்பாணம்)

யாழ். குருநகர் கடற்கரைப்பகுதி வீடொன்றில் மறைத்து வைக்கப்பட்ட நிலையில் 10 ஆமைகளை யாழ். பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். யாழ். பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் பிரகாரம் குருநகர் கடற்கரை 3ஆம் குறுக்கு வீதியில் சோதனையிட்ட போது, அப்பகுதி வீட்டில் இருந்து 10 ஆமைகள் மீட்கப்பட்டதாகவும் மீட்கப்பட்ட ஆமைகளை யாழ். நீதவானின் வாசஸ்தலத்திற்கு எடுத்துச்செல்லப்படும் என்றும் யாழ். பொலிஸார் கூறினர்.

ஆமைகளை வைத்திருந்த நபர் தலைமறைவாகியுள்ளதால் கைதுசெய்ய முடியவில்லை என்றும் அவர் கைது செய்யப்படுவாரெனவும் யாழ். பொலிஸார் மேலும் கூறினர். (25)

# பன்னைவேலைத்திட்ட பயிற்சிநெறி ஆரம்பம்

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் மீள் குடியேற்ற கிராமங்களில் பன்னை வேலைத் திட்டம் தொடர்பான பயிற்சி நெறியொன்று கடந்த செவ்வாய்க் கிழமை ஆரம்பிக்கப்பட்டது.

மன்னார் பனை அபிவிருத்திச்சங்கம் ஏற்பாடு செய்த இப் பயிற்சி நெறியானது, மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட அடம்பன் கிராமத்திலும் மடு உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட பண்டிவிரிச்சான் கிராமத்திலும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மீள்குடியேற்றக் கிராமமான அடம்பனில் 30 பேரும், பண்டிவிரிச்சான் வடக்கில் 25 பேரும், மேற்கில் 25 பேருமென மொத்தம் 80 பயிற்சியாளர்கள் இப் பயிற்சி நெறிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.



இந்த பயிற்சி நெறியானது ஒக்ஸ்பாம் மற்றும் ஐரோப்பிய யூனியனின் நிதி உதவியுடன் மன்னார் வர்த்தக சம்மேளனம் மற்றும் வர்த்தக தாய் சம்மேளனம் ஆகியவை இணைந்து அமுல்படுத்தியுள்ளன.

பனை பொருட்களை அடிப்படையாகக் கொண்டு பொருட்களை உற்பத்தி செய்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதே இப்பயிற்சி நெறியின் நோக்கமாக உள்ளது.

முதல் மூன்று மாதங்களுக்கு பனை அபிவிருத்திச்சபை அதிகாரிகளினால் அடிப்படை பயிற்சிகள் வழங்கப்படும்.

இதன்போது • உற்பத்திப் பொருட்களை ஏற்றுமதி செய்வதற்கான சகல நடவடிக்கைகளையும் வர்த்தக தாய் சம்மேளனம் மேற்கொள்ளும்.

இப்பயிற்சி நெறியின் ஆரம்ப நிகழ்வில் பனை, தென்னை அபிவிருத்திச்சங்கத்தின் தலைவர், பணிப்பாளர், வர்த்தக சம்மேளனத்தின் தலைவர், மேலதிக தேசிய முகாமையாளர் நந்தகுமார், ஒக்ஸ்பாம் திட்ட அலுவலகர், மன்னார் பனை அபிவிருத்தி சங்கத்தின் இணைப்பாளர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

குறித்த 6 மாத பயிற்சி நெறியில் கலந்து கொள்ளும் பயிற்சியாளர்கள் அனைவரும் பூரண பயனை அடைய வேண்டும் என்பதே தமது நோக்கமாக உள்ளதாக வர்த்தக தாய் சம்மேளனத்தின் மாவட்ட திட்ட இணைப்பாளர் எஸ்.ஏ.சியாம் சிங் செய்சா தெரிவித்தார்.

# புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி மாணவரிடம் பணம் அறவீடு

## — இலங்கை ஆசிரியர் சங்கம் குற்றச்சாட்டு —

ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்களை பிரபல பாடசாலைகளில் சேர்க்கும் நடவடிக்கைகளுக்காக பணம் அறவிடப்படுகின்றமை தொடர்பில் தகவல் கிடைத்துள்ளதாக இலங்கை ஆசிரியர் சங்கம் குற்றஞ்சாட்டியுள்ளது.

புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்களிடம் இவ்வாறு பணம் அறவிடுவது சட்டவிரோதமான செயல் என சங்கத்தின் பிரதம செயலாளர் ஜோசப் ஸ்டாலின் குறிப்பிட்டுள்ளார். இது குறித்து கருத்து வெளியிட்ட பிரதி கல்வி அமைச்சர் விஜித் விஜயமுனி சொய்சா, மாணவர்களை பாடசாலைகளுக்கு சேர்ப்பதற்கு வசதிகள் சேவைக கட்டணத்தை தவிர வேறெந்த கட்டணத்தையும் அறவிடுவது தடை செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார். அதிகளவான கட்டணம் அறவிடும் அதிபர்கள் தொடர்பில் அறியக்கிடைக்கும் பட்சத்தில் அது, தொடர்பில் முறைப்பாடு களை முன்வைக்குமாறு அவர் பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார். அவ்வாறான நபரகளுக்கு எதிராக கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# வடமாகாண கல்வித் திணைக்களத்தில் வலய அதிகாரிகளுக்கு செயலமர்வு

வட மாகாணத்தில் உள்ள 12 கல்வி வலயங்களிலும் கடமையாற்றும் ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப்பணிப்பாளர்கள், ஆசிரிய ஆலோசகர்களுக்கான செயலமர்வு எதிர்வரும் திங்கட் கிழமை காலை 8.30 மணி முதல் 4.30 மணிவரை யாழ்ப்பாணத்தில் உள்ள வட மாகாண கல்வித் திணைக்களத்தின் கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

இச் செயலமர்வில் 2013 ஆம் ஆண்டுக்கான ஆரம்ப கல்விப் பிரிவில் முன்னெடுக்க வேண்டிய பணிகள், ஊட்டப் பாடசாலைகளில் நிறைவேற்றப்படவேண்டிய பணிகள், சிறிய பாடசாலைகளின் கல்வி அபிவிருத்திப் பணிகள், பல்தர கற்பித்தல், மாகாண மட்ட ஆரம்பபிரிவுக்கான போட்டிகள் தொடர்பிலான கலந்துரையா டல்கள் இடம்பெறவுள்ளமையினால் அனைத்து ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் மற்றும் ஆசிரிய ஆலோசகர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு வட மாகாண கல்விப் பணிப்பாளர் வ. செல்வராஜா கேட்டுகொண்டுள்ளார். (160)

# அதிகளவு பனைமரங்கள் எழுவைதீவில் தறிப்பு



யாழ்.எழுவைதீவுப் பகுதியில் அதிகளவில் பனைமரங்கள் தறிக்கப்படுவதாக மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

மிகவும் சிறிய தீவாக இருக்கின்ற போதும் ஒரு இலட்சத்துக்கும் அதிகமான பனைகள் எழுவைதீவுப் பகுதியில் உள்ளன. 750 மக்களே உள்ள இந்தத் தீவில் அதிகளவாகக் காணப்படுவது பனை வளமே. இந்தப் பனை வளத்தை அண்மைக் காலத்தில் அதிகமாக அழிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக எழுவைதீவு மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். யுத்தத் தேவைகளுக்காக பிற இடங்களில் பனை, தென்னை மரங்கள் தறிக்கப்பட்டபோதும் எழுவைதீவு போன்ற தனித்த தீவுகளில் அவை பேணப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

**கருக்கமான விடை தருக.**

34) உணவு சமைக்கப் பயன்படும் பூக்கள் இரண்டு தருக.
1)........................ 2)........................

35) தாவர உண்ணிகள் இரண்டு தருக.
1)........................ 2)........................

36) தச்சுத் தொழிலாளி பயன்படுத்தும் இரண்டு உபகரணங்கள் தருக.
1)........................ 2)........................

37) தோற்கருவிகள் இரண்டு தருக.
1)........................ 2)........................

38) மாப்பொருள் உணவுகள் இரண்டு தருக.
1)........................ 2)........................

39) பூரணமான உணவுகள் இரண்டு தருக.
1)........................ 2)........................

40). இலங்கையின் தேசியக் கொடியின் நிறங்கள் இரண்டு தருக.
1)........................ 2)........................

**பின்வரும் வசனங்களுக்குரிய கருத்தினைத் தமிழில் எழுதுக.**

41) From where are you? :........................

42) Please give me a pencil? :........................

43) May I read this book? :........................

**ஒவ்வொரு தமிழ்ச் சொற்களுக்குப் பொருத்தமான ஆங்கிலச் சொல்லை (ஆங்கில எழுத்துக்களில்) எழுதுக.**

44) வீடு :........................ 45) சகோதரன் :........................

46) புதன்கிழமை :........................

**பின்வரும் தனி வாக்கியங்களைத் தொடர்வாக்கியமாக மாற்றி எழுதுக.**

47) கல்யாணி நன்றாக நடனம் ஆடுவாள் :........................

48) காஞ்சனா நன்றாக நடனம் ஆடுவாள். :........................

**வெற்றிடத்துக்குப் பொருத்தமான எழுத்துப் பிழையற்ற சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து எழுதுக.**

49) பாமதி........................ பட்டப்படிப்பைத் தொடர்ந்தாள்.
(பல்கனைக்கழகத்தில், பல்கலைக்களகத்தில், பல்கலைக்கழகத்தில், பழ்கலைக்கழகத்தில்)

50) முயற்சி உடையார்........................ அடையார்.
(இகழ்ச்சி, இகழ்ட்சி, இகள்ச்சி, இகல்ச்சி)



# தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2013

# கல்வி முரசு

பகுதி - II

1மணி 15 நிமிடம்

வெளியீடு 31



இலங்கையிலுள்ள ஐந்து ஆசிரிய நட்சத்திரங்களினால் தொகுக்கப்படும் விசேட வினாத்தாள்.

**கீழே தரப்பட்ட பந்தியை வாசித்துக் கேட்கப்பட்ட வினாக்களுக்கு விடை எழுதுக.**

பொறுமையின் சிகரமாம் பூமாதேவியை கௌவி மூடிக்கொண்டிருந்த காரிருளானது மெல்ல மெல்ல விலகிக் கொண்டிருக்கிறது. வானின் உச்சியிலே பளபளவென்று வைரங்களை வாரி இறைத்தது போல பிரகாசித்துக் கொண்டிருந்த சின்னஞ்சிறு விண்மீன்களின் வண்ண ஒளி படிப்படியாகக் குறையத் தொடங்குகிறது. கிழக்கு வானம் செக்கச் சிவந்து பிரகாசித்த வண்ணம் இருக்கிறது. ஆதவன் தனது பொன்மயமான அழகிய ஒளிக்கதிர்களைப் பூமாதேவியின் மீது மெல்ல மெல்லப் படரவிடுகின்றான். தொடர்ந்து கீழ் வானில் பஞ்சு போன்ற முகில் கூட்டங்களுக்கு மத்தியிலே தங்கத் தகட்டைப் போன்று கதிரவன் மேலே எழத் தொடங்குகின்றான். தாமரை மலர்கள் தம் தலைவனின் வருகை கண்டு தலைநிமிர்ந்து முகமலர்ந்து, மொட்டவிழ்ந்து உவகையுடன் வரவேற்கின்றன. அங்கும் இங்கும் மக்களின் நடமாட்டம் தென்படுகிறது. பறவைகளின் குதூகலமான இனிய நாதங்கள் வானில் பரவுகின்றன. ஆலயங்களில் மணியோசை மக்களை அகங்குளிரச் செய்கின்றன. வெள்ளைப் புறாக்களைப் போன்று பாடசாலைச் சிறார்கள். ஆகா!...........என்ன இனிய காட்சி.

01. **"வானம்"** என்பதற்கு ஒத்தசொல் தருக.
........................

02. **இருக்கிறது** என்பதை இறந்த காலத்தில் எழுதுக.
........................

03. பந்தியில் காணப்படும் அடுக்குமொழிச் சொல் ஒன்றினை எழுதுக.
........................

04. **மணியோசை** என்பதைப் பிரித்து எழுதுக.
........................

05. **"அங்கும் இங்கும் மக்களின் நடமாட்டம் தென்படுகிறது"** இவ் வாக்கியத்தின் எழுவாய் எது?
........................

06. உவகை என்பதற்கு எதிர்சொல் தருக.
........................

07. பின்வரும் சொற்களுக்கு ஒத்தகருத்துடைய சொல் தருக.
1) விண்மீன்: ........................ 2) ஆதவன் :........................

08. 1) பந்தியில் காணப்படும் இணைமொழிச் சொல் ஒன்றினை எழுதுக.
........................
2) அடுக்கிடுக்குத் தொடர்ச் சொல் ஒன்றை எழுதுக.
........................

09. பின்வரும் சொல்லை ஆங்கிலத்தில் எழுதுக.
1) மலர் :........................ 2) பாடசாலை :........................

10. மேலே உள்ள பந்தியில் இரட்டை மொழியினை எழுதுக.
........................

11) பின்வரும் தாவரங்களில் விதை மூலம் மட்டுமே விளைவது எது?
1. கொத்தமல்லி 2. அலரி 3. நொச்சி 4. பூவரசு

12) மீன்பிடித்துறையில் ஒரே முறையில் அதிக மீன்களைப் பிடிக்கக் கடினமான முறை.
1. டைனமற் மூலம் பிடித்தல் 2. வலை வீசுதல்
3. பொறிக்கூட்டில் பிடித்தல் 4. தூண்டில் போடுதல்

12) இலங்கையில் மிக நீண்ட நதி.
1. களனி 2. மகாவலி 3. வளவை 4. மல்வத்து ஓயா

14) இலங்கையில் இரு மதத்தவர் கொண்டாடும் ஒரு தினம்.
1. நத்தார் 2. எசலபெரஹரா 3. ரம்ழான் 4.சித்திரை வருடப் பிறப்பு

15) மின்சாரத்தினால் பாதிக்கப்பட்டவரை என்ன செய்யக் கூடாது?
1. நாம் அவரைக் கையால் பிடித்து இழுத்தல்
2. காய்ந்த மரத்துண்டுகளைப் பயன்படுத்தல்
3. பிரதான ஆளியை நிறுத்துதல்
4. இறப்பர் உறைகளை அணிந்து உதவுதல்

16) புராதன வரலாற்று எச்சங்களை ஆராய்ந்தும், பாதுகாத்தும் வருகின்ற திணைக்களம்.
1. சுற்றுலா கைத்தொழில் 2. தொல்பொருளியல்
3. கல்வித்திணைக்களம் 4. சுகாதாரத் திணைக்களம்

17) பின்வரும் உணவு வகைகளில் போசணை கூடியது.
1. பால் 2. சர்க்கரை 3. மீன் 4. கோதுமை மா

18) சந்தையில் பொருட்களை வாங்கும்போது கவனிக்க அவசியமற்றது ஒன்று.
1. விலை 2. நிறை 3. முடிவுத்திகதி 4. விளம்பர அலங்காரம்

19) சூரியனுக்கு மிக அண்மையிலிருப்பதால் மிக வெப்பமாயிருக்கும் கோள்.
1. வெள்ளி 2. புவி 3. செவ்வாய் 4. புதன்

20) தீ விபத்துக்குட்பட்டவர் செய்யக்கூடாதது.
1. மண்ணில் புரளுவது 2. ஓடுவது
3. சாக்கால் மூடுவது 4. நீரில் நனைத்த சேலையால் மூடுவது

21) வாகனங்கள் வீதியில் செல்லுமிடத்து அவற்றையும் பாதசாரிகளையும் குறிப்பிட்ட விதிப்படி நடத்துவது.
1. சாரணர் 2. தடுப்பு
3. சிவப்புமுன் விளக்கு 4. சமிக்ஞை விளக்கு

**பின்வரும் வாக்கியங்களை இணைத்து எழுதுக.**

22) மாலா பாடசாலைக்கு ஆயத்தமானாள்.
மாலா பஸ் வண்டியில் புறப்பட்டாள்.

..............................................................................................................

..............................................................................................................

23) மயூரன் மைதானத்தில் விளையாடினான்.
கண்ணன் மைதானத்தில் விளையாடினான்.

..............................................................................................................

..............................................................................................................



24) **14.50** கடிகாரத்தில் காணப்படும் நேரம் முற்பகலா? பிற்பகலா? என்பதை எழுதுக.

25) **வகுப்பு ஒன்றில் உள்ள மாணவர்கள் விரும்பும் சிற்றுண்டி வகைகள் தொடர்பான தகவல்கள் சலாகை வரைபில் கீழே காட்டப்பட்டுள்ளன. அதனை அவதானித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடை தருக.**




26. மிகக் கூடுதலானோர் விரும்பும் உணவு வகை யாது?

..............................................................................................................

27. மிகக் குறைந்தளவானோர் விரும்பும் உணவு வகை யாது?

..............................................................................................................

28. அதிகமானோர் விரும்பும் உணவுக்கும் மிகக் குறைந்தளவானோர் விருப்புக்கும் இடையிலான வித்தியாசம் யாது?

..............................................................................................................

29. ஒரு தென்னந்தோட்டத்தில் 1860 தேங்காய்கள் பறிக்கப்பட்டன. அவை 3 லொறிகளில் ஒரே அளவில் ஏற்றப்பட்டன. ஒரு லொறியில் ஏற்றப்பட்ட தேங்காய்களின் எண்ணிக்கை யாது?

..............................................................................................................

30. ஒரு புகை வண்டியில் 166 பிரயாணிகள் பயணம் செய்தனர். அடுத்த புகையிரத நிலையத்தில் அப்புகை வண்டியில் இருந்து 166 பிரயாணிகள் இறங்கினர். தற்போது புகை வண்டியில் பயணித்த பிரயாணிகள் எண்ணிக்கை யாது?

..............................................................................................................

31. வான் சாரதி ஒருவர் ஒரு கிலோமீற்றர் பயணம் செய்ய 300 ரூபா பணம் அறவிடுகிறார். குமார் என்பவர் 5 கிலோமீற்றர் தூரம் பயணத்தை மேற்கொள்ள எவ்வளவு பணம் செலுத்த வேண்டும்?

..............................................................................................................

**கீழே தரப்பட்ட பாடலில் உள்ள வெற்றிடங்களைப் பூரணப்படுத்தி எழுதுக.**

32) அருமைமிக்க ....................................................................... எழுதவே

33) ஆசையாக. ....................................................................... கொள்ளுவேன்.

# பாலியல் வல்லுறவுகளுக்கு வாழ்நாள் முழுவதும் சிறை

## — வல்லுநர் குழு பரிந்துரை




(டில்லி)

இந்தியாவில் பாலியல் வல்லுறவு காரணமாக ஒரு பெண் இறக்க நேர்ந்தால், அதில் ஈடுபட்ட குற்றவாளிகளுக்கு வாழ்நாள் முழுவதும் சிறையில் இருக்கும்படி தண்டனை வழங்கப்பட வேண்டும் என்று நீதிபதி வர்மா தலைமையிலான குழு பரிந்துரை செய்துள்ளது

தலைநகர் புதுடில்லியில், ஓடும் பேருந்தில் பலரால் பாலியல் வல்லுறவு மற்றும் தாக்குதலுக்கு ஆளாகி பின்னர் மருத்துவமனையில் சிகிச்சை பலனளிக்காமல் மருத் துவ மாணவி ஒருவர் மரணமடைந்ததை அடுத்து இந்தியாவில் இவ்வகையான குற்றங்களுக்கு கடுமையான தண்டனைகள் அளிக்கப்பட வேண்டும் என்று கோரிக்கைகள் எழுந்தன.

இதையடுத்து இந்தச் சம்பவம் குறித்து விசாரிக்கவும், இவ்வகையான குற்றங்களை தடுக்கவும், குற்றங்கள் இழைக்கப்படும் போது எப்படியான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது குறித்து அரசுக்கு ஆலோசனை அளிக்கவும் இந்திய உச்சநீதிமன்றத்தின் முன்னாள் தலைமை நீதிபதி ஜே எஸ் வர்மா தலைமையிலான குழுவை மத்திய அரசு அமைத்தது.

அந்தக் குழு நேற்றுமுன்தினம் தனது அறிக்கை மற்றும் பரிந்துரைகளை வெளியிட்டது.

பாலியல் குற்றங்களுக்கு அதிகப்படியாக வாழ்நாள் சிறை என்று பரிந்துரை செய்தாலும், அத்தகைய குற்றங்களுக்கு மரணதண்டனை அளிக்கப்பட வேண்டும் என்று எழுந்த கோரிக்கைகளை அந்த மூவர் குழு நிராகரித்தது.

மேலும் பாலியல் தாக்குதல் என்றால் என்ன என்பது குறித்த விளக்கத்தையும் விரிவாக்க வேண்டும் எனவும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.




# விஸ்வரூபத்தை வெளியிட இரண்டு வாரம் தடைவிதிப்பு



சட்டம் ஒழுங்கைக் காரணம் காட்டி தமிழக அரசு நடிகர் கமல்ஹாசனின் விஸ்வரூபம் திரைப்பட வெளியீட்டிற்கு இரு வாரத்தடை விதித்துள்ளது. திரைப்படம் இஸ்லாமியரை பயங்கரவாதிகளாக சித்தரிப்பதாகக் குறைகூறி பல்வேறு முஸ்லிம் அமைப்புக்கள் விஸ்வரூபத்திற்குத் தடை விதிக்கவேண்டுமெனக் கோரிவரும் வேளையில் இந்த இருவாரத்தடை ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

இன்றையதினம் விஸ்வரூபம் வெளியிடுவதாக கமல் ஹாசன் அறிவித்திருந்தார் இதேவேளை இன்று வெளிவரவிருந்த விஸ்வரூபம் திரைப்படம் தடை செய்யப்பட்டது தொடர்பாக நடிகர் கமல் நேற்று வெளியிட்டுள்ள கருத்தில் படத்தை தடை செய்தது தொடர்பாக சட்ட ரீதியாக சந்திக்கப் போவதாகவும், தனது படத்தை வெளியிடாமல் தடுக்க சிலர் சதி செய்வதாகவும், அரசியலுக்காக தன்னை பயன்படுத்துவதாகவும், வேதனை தெரிவித்துள்ளார்.

# எம்.ஜி.ஆர், ரஜினியுடன் நடித்த யானை "ரதி" மரணமடைந்தது



(சென்னை)

எம்.ஜி.ஆரின் நல்ல நேரம், ரஜினியின் அன்னை ஓர் ஆலயம் படங்களில் நடித்த யானை ரதி மரணமடைந்தது. கடந்த 1942ஆம் ஆண்டு முதுமலை வனப்பகுதியில் குழியில் தவறி விழுந்த குட்டி யானை மீட்கப்பட்டு முதுமலைக்கு கொண்டு வரப்பட்டு, அங்குள்ள தெப்பக்காடு வளர்ப்பு முகாமில் வளர்க்கப்பட்டது. பின்னர் அந்த யானைக்கு ரதி என்று பெயர் சூட்டினர்.

அமரர் எம்.ஜி.ஆர். நடித்த நல்லநேரம், ரஜினிகாந்த் நடித்த அன்னை ஓர் ஆலயம் மற்றும் கன்னடம், இந்தி, மலையாளம் உள்பட 10 இற்கும் மேற்பட்ட சினிமாப்படங்களிலும் நடித்துள்ளது. தற்போது இந்த யானைக்கு 81 வயது. இந்த யானை மொத்தம் 13 குட்டிகளை ஈன்றது.

இந்த ரதி யானைக்கு முதுமலையின் மூதாட்டி என்ற செல்லப் பெயரும் உண்டு. இந்த யானைக்கு சமீபத்தில் உடல் நலக்குறைவு ஏற்பட்டது.

இதனால் படுக்கையில் கிடந்த இந்த யானை சிகிச்சை பலன் அளிக்காமல் நேற்று முன்தினம் மரணமடைந்தது.

# குடியரசு தின நிகழ்வுகளை சீர்குலைப்பதற்குத் திட்டம்

## — உளவுத்துறை எச்சரிக்கை —

(புதுடில்லி)

மும்பை தாக்குதல் தீவிரவாதி அஜ்மல் கசாப் கடந்த நவம்பர் மாதம் 21ஆம் திகதி தூக்கிலிடப்பட்டார்.

இது பாகிஸ்தான் தீவிரவாதிகளுக்கு கடும் கோபத்தை ஏற்படுத்தியது. அஜ்மல் கசாப் மரணத்துக்கு பழிக்குப்பழி வாங்கப் போவதாக தீவிரவாதிகள் மிரட்டல் விடுத்துள்ளனர்.

டில்லி அல்லது மும்பையில் தீவிரவாதிகள் தொடர் குண்டு வெடிப்பில் ஈடுபடக் கூடும் என்று உளவுத்துறை மத்திய உள் துறையை உஷார்படுத்தியுள்ளது.

இந்த நிலையில் குடியரசு தின விழாக் கொண்டாட்டங்கள் நாடெங்கும் நாளைய தினம் கொண்டாடப்பட உள்ளது. இந்தக கொண்டாட்டத்தை சீர்குலைக்கும் வகையில் டில்லியில் குண்டு வெடிப்புகளை நடத்த பாகிஸ்தான் தீவிரவாத அமைப்பான லஷ்கர்-இ-தொய்பா திட்டமிட்டுள்ளது தெரியவந்துள்ளது.

இதையடுத்து டில்லியில் மக்கள் அதிகம் கூடும் இடங்களில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

சந்தேகப் படும்படி யாராவது வந்து செல்கிறார்களா? என்பதை சாதாரண உடையில் உள்ள பொலிஸார் கண்காணித்து வருகிறார்கள். வாகன சோதனையும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

# பனிமலையில் சிக்கிய 203 பேர் பத்திரமாக மீட்பு

காஷ்மீரில் பனி சூழ்ந்த மலைப்பகுதியில் சிக்கிக்கொண்ட 203 பேரை விமானப்படையினர் பத்திரமாக மீட்டனர். ஜம்மு-காஷ்மீர் மாநிலத்தில் தற்போது பனிப்பொழிவு காணப்படுகிறது. பெரும்பாலான மாவட்டங்களில் நிலவிவரும் உறைபனியால் மக்களின் இயல்புவாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

சாலை மற்றும் ரயில் போக்குவரத்தும் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் காஷ்மீரின் கீட்ஸ்வார் மாவட்டத்தின் மலைப்பகுதியில் சூழ்ந்துள்ள கடும் உறைபனியில் 203 பேர் சிக்கிக்கொண்டதாக மாவட்ட நிர்வாகத்திற்கு தகவல் கிடைத்தது.

இதையடுத்து விமானப்படையினர் வரவழைக்கப்பட்டனர். விமானப்படை ஹெலிகொப்டர் உதவியுடன் அவர்கள்அனைவரும் மீட்கப்பட்டனர்.

மீட்கப்பட்டவர்களில் குழந்தைகள் வயதானோர் அடங்குவர், சிலர் உறைபனி தாங்காமல் உடல் நலம் பாதிக்கப்பட்டிருந்தனர். அவர்கள் உடனடியாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டதாக இராணுவச் செய்தித் தொடர்பாளர் தெரிவித்தார்.

# செய்மதி தொலைபேசி வைத்திருந்த இலங்கைத் தமிழர் திருச்சியில் கைது

திருச்சியில் செய்மதி தொலைபேசி வைத்திருந்த இலங்கைத் தமிழரை க்யூ பிரிவு பொலிஸார் கைது செய்தனர்.

திருச்சி அடுத்த துவாக்குடி அருகே உள்ள தேனீர்பட்டியில் வசிப்பவர் ராமச்சந்திரன் (வயது 40). இலங்கைத் தமிழரான இவரது குடும்பத்தினர் மற்றும் உறவினர்கள் அவுஸ்ரேலியாவில் வசித்து வருகின்றனர்.

கடந்த சில ஆண்டுகளுக்கு முன்னர் உடல் நலம் பாதிக்கப்பட்டதன் காரணமாக கேரள வைத்தியத்திற்கு தமிழகம் வந்த ராமச்சந்திரன், தனது உறவினர்கள் சிலர் திருச்சியில் இருப்பதால் அங்கேயே வீடு கட்டி தங்கியுள்ளார்.

இந்நிலையில் இந்தியாவில் தடை செய்யப்பட்ட செய்மதி தொலைபேசியை ராமச்சந்திரன் பயன்படுத்தி வருவதாக க்யூ பிரிவு பொலிஸாருக்கு இரகசிய தகவல் வந்தது.

இதையடுத்து, கடந்த செவ்வாய்க்கிழமை தேனீர்பட்டி சென்ற க்யூ பிரிவு பொலிஸார், வீட்டில் நடத்திய சோதனையில் செய்மதி தொலைபேசிகள் கண்டுபிடிக்கப்பட்டது.

இதையடுத்து அவரை கைது செய்த பொலிஸார் திருச்சி நீதிமன்றில் ஆஜர்படுத்தி திருச்சி மத்திய சிறையில் அடைத்தனர்.

சிம்கார்ட் ஆய்வுக்காக பெங்களூரில் உள்ள இந்திய தொழில்நுட்பக் கழகத்துக்கு அனுப்பி



வைக்கப்பட்டது.

இது குறித்து ராமச்சந்திரனிடம் நடத்தப்பட்ட விசாரணையில் தேனீர்பட்டியில் அவர் வீடு அமைந்துள்ள பகுதியில் எந்த செல்போன் சிக்னலும் கிடைக்க வில்லை. அவுஸ்ரேலியாவில் உள்ள உறவினர்களிடம் அவசரத்திற்கு பேசுவதற்காக இந்த போனை வைத்திருந்ததாகத் தெரிவித்துள்ளார்.

## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் : ..............................

முகவரி : ..............................

பிறந்த ஆண்டு : ..............................

கூப்பன்கள் ஐந்தும், புகைப்படமும்

..............................

பெற்றோர் கையொப்பம்

உங்களது பத்து வயதுக்குட்பட்ட சிறார்களின் பிறந்த நாள் கொண்டாட்டங்களில் "தினமுரசு" தினப்பதிப்பும் இணைகின்றது. உங்களது சிறாரின் புகைப்படத்துடன் கீழ்வரும் கூப்பன்களில் ஐந்தினை நிரப்பி எமக்கு அனுப்பி வையுங்கள். தினமுரசு தினப்பதிப்பு உங்கள் அன்புச் செல்வத்தின் பிறந்த நாளன்று புகைப்படத்துடன் கூடிய பிறந்த நாள் செய்தியைப் பிரசுரிக்கும் என்பதை மனமகிழ்வுடன் தெரிவிக்கின்றோம்.

## ஐரோப்பிய ஒன்றியத்தில் தொடர்வதா? மக்கள் கருத்தறிய வாக்கெடுப்பு.



பிரிட்டனின் ஆளும் கன்சர்வேட்டிவ் கட்சி அடுத்த தேர்தலில் வெற்றி பெற்றால், பிரிட்டன் தொடர்ந்தும் ஐரோப்பிய ஒன்றியத்தில் இருப்பதா அல்லது இல்லையா என்பது குறித்து மக்கள் கருத்தறியும் வாக்கெடுப்பை நடத்தப் போவதாக பிரதமர் டேவிட் கமரூன் தெரிவித்துள்ளார்.

நெகிழ்வுத்தன்மையுடைய, பொருந்திப் போகக்கூடிய மேலும் வெளிப்படையான ஒரு உறவை உருவாக்கும் வகையில் பிரிட்டன் ஐரோப்பிய ஒன்றியத்துடன் சமரச பேச்சு வார்த்தைகளை நடத்தும் என்றும் அதன் முடிவுகள் 2018 இல் மக்கள் வாக்கெடுப்புக்கு விடப்படும் என்றும் கமரூன் தெரிவித்துள்ளார்.

ஐரோப்பிய ஒன்றியத்தில் பிரிட்டன் தொடர்ந்தும் இருக்கும் வகையிலான உறவையே தான் விரும்புவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஆனால், ஐரோப்பிய ஒன்றியத்துக்கும் அதன் குடிமக்களுக்கும் இடையே ஒரு இடைவெளி அதிகரித்துக் கொண்டு செல்வதாகவும், அதனை பிரிட்டனில் உணரக்கூடியதாக இருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

புதிய சிந்தனைகளை ஏற்க மறுப்பவர்களிடம் இருந்துதான் ஐரோப்பிய ஒன்றியம் மிகப் பெரிய ஆபத்தை எதிர்கொள்கிறது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்

# தென் அமெரிக்க நாடுகளில் வேகமாகப் பரவும் டெங்கு

## - பெருமளவான மக்கள் பாதிப்பு



தென் அமெரிக்க நாடுகளில் வேகமாகப் பரவிவரும் டெங்குக் காய்ச்சலினால் பல்லாயிரக கணக்கானோர் பாதிக்கப்பட்டு பலர் உயிரிழந்துள்ளதுடன் பலர வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டும் வருகின்றனர். இதனால் அந்த நாட்டு மக்களிடையே கடுமையான பீதி ஏற்பட்டுள்ளது.

பிரேசில், பராகுவே ஆகிய நாடுகளில் பல்லாயிரக் கணக்கானோர் டெங்கு காய்ச்சலால் பாதிக்கப்பட்டுள்ளனர். பிரேசிலில் உள்ள கேம்போ கிரைனைட் நகரில் மட்டும் 3 ஆயிரம்பேர் டெங்கு காய்ச்சலால் பாதிக்கப்பட்டு வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். 2 பேர் பலியாகி உள்ளனர்.

பராகுவே நாட்டில் 8500 பேர் டெங்கு காய்ச்சலால் பாதிக்கப்பட்டுள்ளனர். 8 பேர் பலியாகி உள்ளனர். பக்கத்து நாடான உருகுவே, சிலி, பெரு ஆகிய நாடுகளிலும் டெங்கு காய்ச்சல் வேகமாக பரவி வருகிறது.

காய்ச்சல் பரவுவது அதிகரித்துள்ளதால் இதை கட்டுப்படுத்த வெளிநாடுகளிலிருந்து மருந்துகளை இறக்குமதி செய்து வருகிறார்கள்

## சம ஆசனங்கள் கிடைத்ததால் இஸ்ரேலில் ஆட்சியமைப்பதில் சிக்கல்

இஸ்ரேலில் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் பெஞ்சமின் நெதன்யாகுவின் வலதுசாரி பிரிவு குறைந்த வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளது. இஸ்ரேல் நாடாளுமன்றத்துக்கு (நிஸ்செட்) சமீபத்தில் தேர்தல் நடைபெற்றது. வாக்கு எண்ணிக்கை 99.6 சதவீதம் முடிவடைந்த நிலையில் அந்த நாட்டு தேர்தல் திணைக்களம் முடிவுகளை அறிவித்தது. அதன்படி மொத்தம் உள்ள 120 நாடாளுமன்ற தொகுதிகளில் நெதன்யாகு சார்ந்த வலதுசாரி பிரிவு 60 இடங்களையும், அரபு கட்சிகளை உள்ளடக்கிய மத்திய இடதுசாரி பிரிவு 60 இடங்களையும் பிடித்துள்ளது.

தேர்தலுக்கு முந்தைய கருத்துக் கணிப்புகளில், இந்த தேர்தலிலும் நெதன்யாகு அமோக வெற்றிபெற்று 3 ஆவது முறையாக ஆட்சியமைப்பார் என்று கூறப்பட்டது. ஆனால், அந்த கருத்துக் கணிப்புகள் பொய்யாகும் வகையில் தேர்தல் முடிவுகள் அமைந்துள்ளன. அதிபர் சிமன் பெரெஸ், நெதன்யாகுவை புதிய அரசு அமைக்க அழைப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.

யேர் லாபிட் (49) என்பவர் தலைமையில் கடந்த ஆண்டு புதிதாக தோன்றிய யேஷ் அடிட் என்ற கட்சி அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தும் வகையில் 19 இடங்களில் வெற்றி பெற்றுள்ளது. நெதன்யாகு புதிய அரசை உருவாக்க வழக்கமான தோழமைக் கட்சிகளின் ஆதரவை நாடாமல், யேர் லாபிட்டின் ஆதரவை நாடியுள்ளார். அடுத்த அரசை உருவாக்க லாபிட் முக்கிய பங்காற்றுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.



**இஸ்ரேலின் ஜெருசலம் நகரிலுள்ள வாக்குச்சாவடியில் மனைவி சாராவுடன் வாக்களித்த பிரதமர் பெஞ்சமின் நெத்தன்யாகூ.**

# ஐ.நா. விதித்த தடையையும் மீறி அணு ஆயுத செயற்பாடு தொடரும்

## வடகொரியா அச்சுறுத்தல்



(நியூயோர்க்)

ஐ.நா. விதித்த தடையை மீறி அணு ஆயுத நடவடிக்கைகளை தொடரப்போவதாக வட கொரிய அச்சுறுத்தியுள்ளது.

வடகொரியா அண்மையில் விண்ணில் ரொக்கெட்டை ஏவியது. இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து ஐ.நா. பாதுகாப்புச் சபை வடகொரியாவிற்கு புதிய தடைகளை கொண்டு வந்துள்ளது. மேலும் அணு ஆயுதங்களை பயன்படுத்தி இது போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடக் கூடாது எனவும் ஐ.நா. எச்சரித்துள்ளது.

இதுகுறித்து ஐ.நா. பாதுகாப்புச் சபை தீர்மானத்தில் கூறியிருப்பதாவது,

வடகொரியா கண்டம் விட்டு கண்டம் சென்று தாக்கும் ஏவுகணைகள் மற்றும் அணு ஆயுத சோதனைகள் நடத்துவதற்கு ஐ.நா. பாதுகாப்பு சபை தடை விதித்துள்ளது. மேலும் அதற்கான பொருட்கள் மற்றும் தொழில்நுட்பங்களை வாங்கவும் தடை ஏற்படுத்தியிருந்தது.

இந்த தடைகளை மீறி அண்மையில் ரொக்கெட் செலுத்தியதை கண்டிக்கிறோம். வட கொரியாவின் இத்தகைய செயற்பாடு குறித்து ஆராய்ந்து வருகிறோம். மேலும் வட கொரியாவிற்கு எதிராக புதிய முக்கிய தடைகளையும் விதிக்கிறோம்.

• அதன்படி வடகொரிய கம்பனிகளோ அல்லது அரசு நிறுவனங்களோ அணு ஆயுதப் பொருட்களை இறக்குமதி செய்யக்கூடாது. மேலும் ரொக்கெட் ஏவுதலோ அல்லது அணு ஆயுத சோதனைகளோ தொடரு . மானால் வடகொரியாவிற்கு எதிராக கடுமையான நட வடிக்கை எடுக்கப்படும்.

வடகொரியாவுடன் நடக்கும் இதுபோன்ற நடவடிக்கைகளுக்கான பணப்பரிமாற்றத்தை தடுப்பது குறித்து கண்காணிக்க உறுப்பு நாடுகள் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கின்றன.

என ஐ.நா. தீர்மானத்தில் கூறப்பட்டுள்ளது. ஆனால், ஐ.நா. தடை பிறப்பித்த சில மணி நேரங்களிலேயே அணு ஆயுத சோதனைகள் தொடரும் என்று வடகொரியா பதிலடி கொடுத்துள்ளது. மேலும் கொரியன் தீபகற்பத்தை அணு ஆயுதமில்லாப் பகுதியாக்க வேண்டும் என்கிற பேச்சுக்கே இடமில்லை என்றும் வட கொரியா எச்சரிக்கை விடுத்துள்ளது.

## கின்னஸ் சாதனையில் இஞ்சி இடுப்பழகி



(நியூயோர்க்)

உலகின் சிக்கன இடையழகி என்ற பட்டத்தையும் கின்னஸ் உலக சாதனையையும் தொடர்ந்து தக்க வைத்துக்கொண்டுள்ளார் கேத்தே ஜங் (வயது - 75). இவரது இடையின் சுற்றளவு வெறும் 15 அங்குலம் மட்டுமே. இவரது உயரம் 5 அடி 8 அங்குலம். தற்போது 39" - 15" - 39" என்ற உடலமைப்பில் உள்ள இவருக்கு 1959 ஆம் ஆண்டு திருமணமான போது இடையின் அளவு 26 அங்குலமாக இருந்தது.

கடுமையான உடற்பயிற்சி மற்றும் உணவுக் கட்டுப்பாட்டின் மூலம் படிப்படியாக 22 அங்குலமாக குறைத்த இடையை மேலும் இழைத்து 15 அங்குலமாக இவர் தக்க வைத்துக் கொண்டுள்ளார். இதற்காக நூற்றுக் கணக்கான இடுப்பு பட்டைகளை வைத்துள்ள இந்த இஞ்சி இடுப்பழகி, அமெரிக்காவில் உள்ள கனெக்டிகட் மாகாணத்தில் வாழ்ந்து வருகிறார்.

# மரணதண்டனையை நிறைவேற்ற உள்ளூரில் நஞ்சு தயாரிப்பு



(வியட்நாம்)

வியட்நாமில் நாட்டில் மரண தண்டனை விதிக்கப்பட்டவர்களுக்கு தண்டனையை நிறைவேற்றத் தேவைப்படும் நஞ்சை உள்நாட்டிலேயே தயாரிக்க முடிவெடுக்கப்பட்டுள்ளது.

வெளிநாட்டுத் தயாரிப்பாளர்கள், மரண தண்டனை விதிக்கப்பட்ட கைதிகளுக்கு விஷ ஊசி மூலம் நஞ்சை செலுத்த தேவைப்படும் மருந்தை வியட் நாமுக்கு ஏற்றுமதி செய்ய மறுத்துள்ள சூழலில் உள்நாட்டிலேயே இந்த மருந்தை தயாரிப்பது எனும் முடிவு வந்துள்ளது.

அந்நாட்டில் 2011 ஆம் ஆண்டுக்கு பிறகு யாரையும் சுட்டு மரண த்ண்டனையை நிறைவேற்றும் வழக்கத்தை அரசு நிறுத்திய பிறகு, அங்கு இன்னும் சுமார் 500 பேர் மரண தண்டனையை எதிர்நோக்கியுள்ளனர்.

அங்கு வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட நஞ்சின் மூலம் மரண தண்டனை நிறைவேற்றும் புதிய சட்டத்தை அடுத்து, ஐரோப்பிய ஒன்றியம் வியட்நாமுக்கு இவ்வகையான நஞ்சை ஏற்றுமதி செய்ய மறுத்து விட்டது.

இதையடுத்து உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட நஞ்சைக் கொண்டு மரண தண்டனையை நிறைவேற்றும் வகையில் சட்டத்தில் திருத்தங்கள் கொண்டுவரப்படும் என வியட்நாம் பொதுப் பாதுகாப்பு அமைச்சர் தெரிவித்துள்ளார்.

எனினும் உள்நாட்டில் தயாரிக்கப்படும் புதிய மருந்து எவ்வகையானது என்பது குறித்து அவர் எந்தவிதமன தகவலையும் வெளியிடவில்லை.

# இந்திய வீட்டுத்திட்டத்தில் பாரபட்சம்

# செட்டிகுளத்தில் மக்கள் திரண்டு ஆட்சேபம்

(வவுனியா)

செட்டிகுளம் பிரதேசத்தில் மீள்குடியேறியோருக்கான வீட்டுத்திட்டத்தில் பாரபட்சம் காட்டப்படுவதாகத் தெரிவித்து செடடிகுளம் பிரதேச செயலருக்கு கடந்த புதன்கிழமை செட்டிகுளம் பிரதேச மீளக்குடியமர்ந்தோர் நலன் பேணும் அமைப்பினூடாக மகஜர் கையளிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் அவர்கள் கொடுத்துள்ள மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

செட்டிகுளம் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பல கிராமங்களில் யுத்தம் காரணமாக மக்கள் இடம்பெயர்ந்து வீடு மற்றும சொத்துக்களை இழந்தது மட்டுமன்றி உயிரிழப்பு, காயம் மற்றும் காணாமல் போதல் போன்ற பாதிப்புக்களையும் எதிர்கொண்டு தமது சொந்த இடங்களில் மீள் குடியமர்ந்து வசித்து வருகின்றனர். இடம்பெயர்ந்த இம் மக்களில் சிலர் வேறு மாவட்டங்களில் இருந்தும் சிலர் இந்தியாவில் இருந்தும் சிலர் முள்ளிவாய்க்கால் வரை சென்று நிவாரணக் கிராமங்களில் இருந்து விடுவிக்கப்பட்டும் மீளக்குடியமர்ந்து உள்ளனர். இம் மக்களில் பலர் மண் குடிசைகளில் வெயில், மழை காலங்களில் பாரிய துன்பங்களைச் சந்தித்து வீட்டுத்திட்ட உதவி வரும் என்ற நம்பிக்கையில் வாழ்ந்து வருகின்றனர். இந்திய அரசின் உதவியுடனான 50000 வீட்டுத்திட்டத்தில் நாமும் உள்வாங்கப்படுவோம் என்று எமக்கு இருந்த நம்பிக்கையானது தங்களது பாரபட்சமான வீடடுத்திட்ட பயனாளிகள் தெரிவு செய்யப்படும் முறைமையால் இல்லாதொழிக்கப்பட்டுள்ளது.

எமது பிரதேச செயலகப் பிரிவில் இந்திய உதவியுடனான வீட்டுத்திட்டம் குறிப்பிட்ட இனத்தைச் சார்ந்த மக்களுக்கு மட்டும் உரித்தானதா? என்ற கேளவியை எமக்கு தோற்றுவித்துள்ளது. ஏனெனில் முற்றாக பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்து மீளக் குடியமர்ந்த மக்களை கொண்ட கிராமங்கள் தங்களால் தெரிவு செயயப்படவில்லை.

இந்திய அரசின் உதவியுடனான 1 ஆம், 2 ஆம் கட்ட கிராம மற்றும் பயனாளிகள் தெரிவில் முஸ்லிம் குடும்பங்கள் பெருமளவு எண்ணிக்கையில் உள்வாங்கப்பட்டுள்ள அதேவேளை தமிழ் கிராமங்களும் தெரிவு செய்யப்படுகின்றன என்பதை காட்டிக்கொள்ள குறைந்த எண்ணிக்கையிலான பயனாளிகளை கொண்ட ஒன்றிரண்டு தமிழ் கிராமங்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளதையும் இங்கு சுட்டிக் காட்ட விரும்புகின்றோம். இதிலும் அங்கு இடம்பெயராத குடும்பங்கள் மற்றும் வெளிமாவட்டங்களில் நிரந்தரமாக வசித்து வரும் குடும்பங்கள் ஏற்கனவே கல்வீடுகளை கொண்ட குடும்பங்கள் என்ற வகையில் தகுதியற்ற பயனாளிகளுக்கு வீடு வழங்கும் நிகழ்வு நடைபெற்று வருகின்றது. இவ்வாறு முறையற்றதும் பாரபட்சமானதுமான முறையில் வீட்டுத்திட்ட உதவி வழங்குவதன் மூலம் இந்திய அரசின் உதவியுடன் செட்டிகுளம் பிரதேச செயலக பிரிவிற்கு குறித்தொதுக்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை முடிவுற்ற பின்னர் உண்மையில் பாதிக்கப்பட்ட எமக்கு மிஞ்சப்போவது தான் என்ன? தொடர்ந்தம் எமக்கு மண் குடிசைதான் தஞ்சமா?

எனவே வீட்டுத்திட்ட பயனாளிகள் தெரிவில் முழுமையாக பாதிக்கப்பட்டு மிளக்குடியமர்ந்த மக்களை கொண்ட கிராமங்களைத் தெரிவு செய்யுமாறு இன, மத வேறுபாடின்றி பாரபடசம் காட்டாது செயற்படுமாறு தங்களை தயவுடன் வேண்டி நிற்கின்றோம் என குறிப்பிடப்பட்டுள்ளதுடன் இதற்கான பதில ஆக்கபூர்வமாக கிடைக்காவிடின் மாவட்ட ரீதியில் சாத்வீக போராட்டம் நடத்தவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இக்கடிதத்தின் பிரதிகள் வவுனியா நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் வவுனியா அரசாங்க அதிபர் உட்பட பலருக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

# மருத்துவ விடுதியில் "லிப்ற்"

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலையின் ஐந்து மாடிகளைக் கொண்ட மருத்துவ விடுதிக் கடடடத் தொகுதிக்கு மற்றுமொரு லிப்ற் பொருத்துவதற்கான வேலைகள் தற்சமயம் முன்னெடுக்கப்பட்டு வருவதாக வைத்தியசாலையின் பதில் பணிப்பாளர் சிறிபவானந்தராசா தெரிவிததுள்ளார்.

ஏற்கனவே இந்த மாடிக்கட்டடத்திற்கான லிப்ற் வசதி இல்லாததன் காரணமாக நோயாளர்களும் வைத்தியசாலைப் பணியாளர்களும் மிகுந்த சிரமங்களை எதிர்நோக்கியிருந்தனர். இந்த நிலையில் இந்த மாடிக் கட்டத் தொகுதிக்கு கடந்த வருட இறுதியில் இலங்கை மின்சார சபையினால் ஒரு லிப்ற் பொருத்தப்பட்டிருந்தது. இருந்தும் இந்த ஒரு லிப்ற் போதுமானதாக் இல்லாத காரணமாக நோயாளர்கள் அதில் பயணிக்க முடியாத நிலை காணப்பட்டது. (பா)

## ஐ.நா. உணவு...

132 நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் உணவு மறறும் விவசாய அமைப்பின் அமர்வுகளில் பங்கேற்றனர். இந்த அமைப்பின் ஆசிய பிராந்திய வலயத்திற்கான உப தலைவர் பதவியும் ஹசிதவிற்கு வழங்கப்பட்டுள்ளது. அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளின பொருளாதார சமூக நிலைமைகளை மேம்படுத்தும் நோக்கில் 1964 ஆம் ஆண்டு 75 உறுப்பு நாடுகளுடன் இந்த அமைப்பு ஆரம்பிக்கப்பட்டது.

## முன்னாள்...

வங்கிக் கடன் வசதி, ஐ.ஓ.எம். உள்ளிட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவிகள் என்பன வழங்கப்படுகின்றன. இதன்மூலம் பலர் தமது வாழ்வாதாரத்தை மேம்படுத்தி கஷ்டமின்றி வாழ்ந்து வரும் நிலையில் பலருக்கு இத்தகைய உதவிகள் கிடைப்பதில்லை எனவும் அவர்கள் இதனால் பொருளாதார ரீதியில் பாதிக்கபபடுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இந்த நிலையில் இவர்களின் வாழ்வாதாரத்தையும் கருத்தில் கொண்டு உதவிகள் கிடைக்காதவர்களுக்கும் உதவிகள் கிடைக்க உரியவர்கள் பாரபட்சமற்ற வகையில் செயற்பட வேண்டும் என பாதிக்கப்பட்டவர்கள் கேட்டுகொள்கின்றனர். (77)

## இலங்கை...

அன்டனி தெரிவித்துள்ளார். இந்தியாவின் பல பாகங்களிலும் இராணுவப் பயிற்சி முகாம்கள் காணப்படுவதாகத் தெரிவித்துள்ளார். தமிழகத்தில் பயிற்சி வழங்குவதில் சிக்கல்கள் ஏற்பட்டால் வேறு பிரதேசங்களில் பயிற்சிகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். தமிழக அரசியல்வாதிகள் மற்றும் மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிக்கும் அதே வேளை, அண்டை நாடான இலங்கையுடனான உறவுகள் குறித்தும் கவனம் செலுத்தப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

தென் இந்திய மாநிலங்களில் இராணுவப் பயிற்சிகள் வழங்குவதனை தவிர்க்க நடவடிக்கை எடுக்குமாறு இராணுவ உயரதிகாரிகளுக்கு, பாதுகாப்பு அமைச்சர் ஏ.கே. அன்டனி பணிப்புரை விடுத்துள்ளார்.

## பிரித்தானிய...

என்பது குறிப்பிடத்தக்கது. இந்த விஜயம் தொடர்பில் பர்ட், இலங்கை உயர்ஸ்தானிகருடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

2013 ஆம் ஆண்டு பொதுநலவாய நாடுகள் தலைவர்கள் மாநாட்டை நடாத்தும் நாடு என்ற ரீதியில் இலங்கை பொதுநலவாய நாடுகள் கோட்பாடுகளுக்கு மதிப்பளிக்கும் என நம்புவதாகக் குறிப்பிட்டுள்ளார்ர். எதிர்வரும் பெப்ரவரி மாதம் முதலாம் திகதி லக்ஷ்மன் கதிர்காமர் நிலையத்தில் நடைபெறும் விசேட கருத்தரங்கொன்றில் பிரித்தானிய வெளிவிவகார அமைச்சர் அலிஸ்டர் பர்ட் உரையாற்றவுள்ளார். இதேவேளை, பிரித்தானியா, பொதுநல வாய நாடுகள் தலைவர்கள் அமர்வுகளில் பங்கேற்பதா இல்லையா என்பதனை தற்போதைக்கு தெரிவிக்க முடியாது என அந்நாட்டு நாடாளுமன்றில், அலிஸ்டர் பர்ட தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## வடக்கில்...

தெற்கில் இராணுவ முகாம்கள் இருப்பதைப் போன்றே வடக்கிலும் அவசர தேவைகளுக்காக முகாம்களை அமைத்து இராணுவத்தினர் நிலைகொண்டுள்ளனர் இது அவசிய தேவை என்று பாதுகாப்புச் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷ மேலும் தெரிவித்தார்.

பாதுகாப்பு அமைச்சில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறிய தாவது,

இலங்கை இராணுவம் இலங்கையில் நிலைகொள்ளாமல் வெளிநாடுகளில் சென்று முகாம்களை அமைத்து நிலைகொள்ள முடியாது. தெற்கில் போன்றே வடக்கிலும் அவர்கள் தங்கியுள்ளனர். வடக்கில் பொலிஸாரே சட்டத்தையும் ஒழுங்கையும் பேணி வருகின்றனர். அங்கு எவ்வாறான பிரச்சினைகள் ஏற்படினும் பொலிஸாரே முன்னின்று தீர்த்து வைக்கின்றனர். இந்நிலையில், அவசர தேவைகளின் பொருட்டே இராணுவத்தினர் செயற்படுவர்.

யுத்தம் காரண்மாக வடக்கில் முடக்கப்பட்டிருந்த அபிவிருத்தி மற்றும் பொருளாதார முன்னேற்ற நடவடிக்கைகள் ஸ்தம்பிதமடைந்திருந்தன. இருப்பினும், யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டதை அடுத்து அங்கு நிலைமை மாறியுள்ளது.

மக்கள் தங்களது தொழில்களை சுதந்திரமாக செய்கின்றனர். அவர்களின் வாழ்க்கைத்தரம் அதிகரித்து வருகின்றது. யுத்தம் இடம்பெற்ற நாடொன்று இதுவரை செய்யாத சாதனையை இலங்கை இந்த குறுகிய காலப்பகுதியில் ஈட்டியுள்ளது. இது குறித்து நாம் பெருமையடைய வேண்டும் என்றார்.

## பயங்கரவாதம்...

பின் னர் நேற்று பாதுகாப்பு செயலரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இராணுவம் நேற்று சமர்ப்பித்த அறிக்கையில் உள்நாட்டுப் போர்களை எதிர்கொள்வதற்கு தனியான சொந்தச் சட்டத்தை அரசாங்கம் அறிமுகப்படுத்த வேண்டும் என்று இராணுவம் கோரியுள்ளது. இத்தகவலை ஏ.பி செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது. நடைமுறையில் உள்ள மனிதாபிமானச் சட்டங்கள் நாடுகளுக்குப் பொருத்தமானதே தவிர, தீவிரவாத அமைப்புகளுக்கு பொருத்தமுடையது அல்ல என்றும் அறிக்கையில் இராணுவம் தெரிவித்துள்ளது. விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரில் இலங்கைப் படையினர் இழைத்த போர்க்குற்றங்களுக்கு எதிராக அனைத்துலக மனிதாபிமானச் சட்டங்களின் கீழ் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுவரும் நிலையிலேயே இலங்கை இராணுவம் இவ்வாறு கோரியுள்ளது.

அத்துடன் எதிர்காலத்திலும் இப்படியான இராணுவ நடவடிக்கைகளில் பொதுமக்கள் இழப்பை தவிர்க்கும் நோக்கில் புதிய யுக்திகள் கையாளப்பட வேண்டும் என்றும் அந்த அறிக்கை கூறியுள்ளது. தற்போதுள்ள சர்வதேச மனிதநேய சட்ட அடிப்படைகள், உள்நாட்டு போர் நடவடிக்கைகளுக்கு பொருத்தமற்றது என்றும் அந்த அறிக்கை கூறியுள்ளது.

இந்தச் சட்டங்கள் தேசிய அரசாங்கங்களை மாத்திரமே கட்டுப்படுத்தும் என்பதால், அவை மிகவும் சிக்கலான பல விடயங்களை கையாளப் பொருத்தமற்றவை என்றும் அந்த அறிக்கை கூறியுள்ளது. அத்துடன் உள்நாட்டுப் போர்களின் போது சர்வதேச மனிதநேய உதவி நிறுவனங்களுக்கென ஒரு குறிப்பிடத்தக்க விதிகள், நியமங்கள் ஆகியன எதுவும் கிடையாது என்றும் அந்த அறிக்கை கூறுகின்றது.

ஆகவே உள்நாட்டுப் போர் நிலைமைகளை கையாளும் வகையில் புதிய உள்ளூர் விதிகள் உருவாக்கப்பட வேண்டும் என்றும் அந்த அறிக்கை பரிந்துரைத்துள்ளது. கடந்த 30 வருட காலப் போரில் தமிழ் மற்றும் ஆங்கில மொழி புலமையின்மை என்பது இராணுவத்தினருக்கு ஒரு பாதகமான அம்சமாக இருந்ததாகத் தெரிவித்துள்ள அந்த அறிக்கை அவர்களுக்கு மும்மொழி பயிற்சிகள் வழங்கப்பட வேண்டும் என்றும் கூறியுள்ளது. போரில் உயிரிழந்த இராணுவச் சிப்பாய்களின் குடும்பத்தினர் மற்றும் காயமடைந்த சிப்பாய்கள் ஆகியோரின் நலனைக் கவனிக்கவென இராணுவ தலைமையகத்தில் பிறிதான செயலகம் ஒன்று உருவாக்கப்பட வேண்டும் என்றும் அது கூறியுள்ளது.

இலங்கை நிலைமைகளை கருத்தில்கொண்டு அங்குள்ள பொலிஸ் பிரிவு தொடர்ந்தும் பாதுகாப்பு அமைச்சின் கீழ் இயங்கலாம் என்றும் அது பரிந்துரைத்துள்ளது. வடக்கு, கிழக்கில் இராணுவ பிரசன்னம் குறித்து கருத்துக் கூறியுள்ள அந்த அறிக்கை, நாட்டின் எந்தப் பகுதியிலும் இராணுவத்தினரை வைத்திருக்கும் உரிமை அரசாங்கத்துக்கு இருக்கிறது என்றும் குறிப்பிட்டுள்ளது.

அதேவேளை இந்த அறிக்கை பற்றி பல தரப்பினரிடம் இருந்து மாறுபட்ட கருத்துக்கள் வந்திருக்கின்றன. எதிர்வரும் மார்ச் மாதத்தில் நடக்கவிருக்கும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் ஜெனிவா மாநாட்டை மனதில் வைத்து இந்த அறிக்கை வந்திருப்பதாகக் கூறியுள்ள இலங்கையின் மூத்த செய்தியாளரான அனந்த் பாலகிட்ணர், இந்த அறிக்கையை மாத்திரம் வைத்து போரில் ஏற்பட்ட முழுமையான அழிவுகள் குறித்த ஒரு முடிவுக்கு வரமுடியாது என்று கூறியுள்ளார். அதேவேளை படையினருக்கு மூன்று மொழிகளையும் கற்பிப்பதற்கான பரிந்துரையை அவர் வரவேற்றுள்ளார்.

## பொதுநலவாய...

அமைச்சர்கள் மாநாட்டில் இலங்கை நிலைமைகள் குறித்து கேள்வி எழுப்பப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கை நிலைமைகள் குறித்து தொடர்ந்தும் கனடா உன்னிப்பாக அவதானிக்கும் என குறிப்பிட்டுள்ளார். மனித உரிமைகள், அரசியல் நல்லிணக்கம், குற்றச் செயல்களுக்கு தண்டனை விதித்தல், ஜனநாயகம் போன்ற துறைகளில் மேம்பாடு ஏற்படுத்தப்பட வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

இதேவேளை, 30 ஆண்டுகளாக நீடித்த யுத்தத்தின் பின்னரான நல்லிணக்க முயற்சிகளை குறுந்தூர ஓட்டப் பந்தயத்தைப் போன்று முடிவுறுத்த முடியாது எனவும், அது ஓர் மரதன் போட்டியெனவும் இலங்கை உயர்ஸ்தானிகர் வாகீஸ்வரா தெரிவித்துள்ளார். அனைத்து நாடுகளும் பொதுநலவாய நாடுகள் தலைவர்கள் மாநாட்டில் கலந்துகொள்ளும் என அவர் குறிப்பிட்டுள்ளார். கனடா மட்டுமே மாநாட்டைப் புறக்கணிக்கப் போவதாக எச்சரிக்கை விடுத்து வருவதாகத் தெரிவித்துள்ளார். அரசாங்கம் நல்லிணக்கத்தை ஏற்படுத்த மேற்கொண்டுவரும் முயற்சிகளை சில நாடுகள் சரியாகப் புரிந்துகொள்ளவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# யாழ். போதனா மருத்துவமனையில் தொடரும் ஊழியர் பற்றாக்குறை

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா 'வைத்தியசாலைக்கு தாதியர்கள், சிற்றூழியர்கள் மற்றும் விடுதிகளின் பற்றாக்குறை தொடர்ந்து இருந்து வருவதாக வைத்தியசாலையின் பதில் பணிப்பாளர் சிறிபவானந்தராசா தெரிவித்துள்ளார்.

இவ்வைத்தியசாலைக்கு 1500 தாதியர்கள் தேவையாகவுள்ள இடத்து 395 தாதியர்களே சேவையாற்றி வருவதாகவும் குறிப்பிட்ட அவர், இதற்கான வெற்றிடங்கள் நிரப்பப்பட வேணடிய தேவை ஏற்பட்டிருப்பதாகவும் குறிப்பிட்டார்.

அத்துடன் 300 வரையான சிற்றூழியர் வெற்றிடங்களும் காணப்படுவதாகவும் தெரிவித்த அவர் தொண்டர் அடிப்படையில் சிற்றூழியர்கள் பணிக்கமர்த்தப்பட்டிருக்கின்ற போதும் அவர்களிடத்தில் இருந்து தேவையான அளவு வினைத்திறனைப் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளதாகவும் அதற்கு அவர்களுக்கு வழங்கப்படும் வேதனம் குறைவு, வேலைநேரமும் குறைவு எனவும் தெரிவித்தார்.

எனவே சிற்றூழியர் வெற்றிடங்களும் நிரப்பப்பட வேண்டியுள்ளதாகவும் தெரிவித்தார்.

இதேவேளை தாதியர் மற்றும் வைத்தியர்களுக்கான விடுதி வசதிகள் தேவையாகவுள்ளது. இந்த விடுதிகளின் தேவைக்கு விடுதிகளை நிர்மாணிக்க காணி இனங்காணப்பட்டிருந்தபோதும் அதில் விரைவாக விடுதி நிர்மாணித்து முடிக்கப்படவேண்டியுள்ளது.

இந்த விடயங்கள் குறித்து சுகாதார அமைச்சிற்கு தெரியப்படுத்தியிருப்பதாகவும் குறிப்பிட்ட வைத்தியசாலைப் பணிப்பாளர், ஜப்பானின் நிதியுதவியின் கீழ் நிர்மாணிக்கப்பட்டிருக்கும் புதிய 4 மாடிக் கட்டட வேலைகள் அனைத்தும் பூர்த்தியடைந்திருக்கின்ற போதும் அதனைத் திறந்து வைப்பதற்கு சுகாதார அமைச்சு அனுமதியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (பா)

# வடக்கில் மலேசிய முதலீடு தூதுக்குழுவுடன் விசேட சந்திப்பு



(கொழும்பு)

வடக்கு, கிழக்குப் பகுதிகளில் மலேசியா முதலீட்டாளர்கள் ஊடாக முதலீடுகளை மேற்கொண்டு அதனூடாக மக்களது வாழ்வாதாரத்தை மேம்படுத்துவது தொடர்பிலான கலந்துரையாடல் நேற்றைய தினம் இடம் பெற்றுள்ளது. கொழும்பில் அமைந்துள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் வாசஸ்தலத்தில் மேற்படி விடயம் தொடர்பிலான கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளது.

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட வடக்கு கிழக்குப் பகுதிகளின் அபிவிருத்தியைக் கருத்தில் கொண்டு அங்கு முதலீடுகளை மேற்கொண்டு அபிவிருத்தியை மேம்படுத்துவது தொடர்பாக இக்கலந்துரையாடல் இடம் பெற்றது. இதன்போது முதலீடுகளின் முக்கியத்துவம் தொடர்பாகவும் எந்தத் துறைகளில் முதலீடுகளை மேற்கொள்ளலாம் என்பது தொடர்பிலும் அவற்றை செம்மையாக நடைமுறைப் படுத்துவது தொடர்பாகவும் விரிவாக கலந்துரையாடப்பட்டது.

அத்துடன் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சினால் நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டு வரும் அபிவிருத்தி செயற்திட்டங்கள் தொடர்பாகவும் மலேசிய தூதுக்குழுவிற்கு விரிவாக எடுத்துரைக்கப்பட்டது.

இதனிடையே தற்போதைய அரசியல் நிலைவரம் தொடர்பாகவும் மலேசியா தூதுக்குழுவினர் கலந்துரையாடியிருந்தனர். மேற்படி கலந்துரையாடலில் கலந்துகொண்ட மலேசிய தூதுக்குழுவினருக்கு ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும், அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தனது வாழ்த்துக்களைப் பரிமாறிக் கொண்டார்.

இதன்போது மலேசியன் தூதுக்குழுவின் தலைவர் குலசேகரன் சபாரத்தினம் தலைமையிலான மலேசியன் குழுவினருடன் ஈ.பி.டி.பியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் தவராசா, பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் சிவஞானசோதி, அமைச்சரின் ஆலோசகர் திருமதி. வீ.ஜெகராஜசிங்கம், அமைச்சரின் பிரத்தியேகச் செயலாளர் தயானந்தா, அமைச்சரின் இணைப்பாளர் ராஜ்குமார், அமைச்சின் பணிப்பாளர் அஜித் ஏக்கநாயக்க ஆகியோருடன் துறைசார்ந்த பலரும் கலந்து கொண்டனர்.

# இடதுகால் கட்டியை அகற்ற வலது காலில் அறுவைச்சிகிச்சை



(யாழ்ப்பாணம்)

இடது காலிலுள்ள கட்டியொன்றை அகற்றுவதற்காக சத்திர சிகிச்சை மேற்கொள்ளச் சென்ற 9 வயது பாடசாலை மாணவன் ஒருவருக்கு வலது காலில் அறுவைச் சிகிச்சை செய்துள்ளார் யாழ். போதனா வைத்தியசாலையின் வைத்தியரொருவர். இச்சம்பவம் யாழ். போதனா வைத்தியசாலையில் கடந்த 15 ஆம் திகதி இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் கோப்பாய் வடக்கு இலகடியைச் சேர்ந்த கூலித்தொழிலாளியான இராசதுரை திருவானந்தத்தின் மூன்றாவது மகனான கயலகஷன் என்ற பாடசாலை சிறுவனுக்கே ஏற்பட்டள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

குறித்த சிறுவனுக்கு காலில் ஒரு கட்டி வளர்ந்துள்ளது. இதனை அவதானித்த தாயார் கோப்பாய் பிரதேச வைத்தியசாலைக்கு மகனைக் கொண்டு சென்று சிகிச்சைக்கு அனுமதித்துள்ளார்.

இதன்போது உடனடியாகவே பிள்ளையை யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லுமாறு வைத்தியர் ஆலோசனை வழங்கியுள்ளார். யாழ். போதனா வைத்திய சாலைக்கு சென்ற பிள்ளைக்கு அன்றே சத்திரசிகிச்சை மேற்கொள்ளப் பட்டுள்ளது. சத்திர சிகிச்சை முடிந்ததும் சத்திர சிகிச்சைக் கூடத்திலிருந்து வெளியே வந்த பிள்ளையைக் கண்ட தாயார் அதிர்ச்சியடைந்துள்ளார்.

பிள்ளைக்கு இடது காலில் செய்யப்பட வேண்டிய சத்திர சிகிச்சைக்கு பதிலாக வலது காலில் சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டு மருந்தும் கட்டப் பட்டிருந்தது. இதனை அவதானித்த தாயார் சத்தமிடவே சுதாகரித்துக் கொண்ட தாதியர்கள் விடயத்தை அறிந்து பொறுப்பு வைத்தியரிடம் விடயத்தை தெளிவுபடுத்தியுள்ளனர். சம்பவ இடத்திற்கு குறித்த வைத்தியர் வந்ததும் தனது உதவியாளனின் செயலால் மனமுடைந்து மிகவும் வேகமாக செய்ய வேண்டிய இடது கால் சத்திரசிகிச்சையை மீண்டும் செய்து உடனடியாகவே. வைத்தியசாலையிலிருந்து அவசர அவசரமாக வீட்டிற்கு சிறுவனை அனுப்பி வைத்துள்ளனர்.

# ஊடக அமைப்புக்கள் திரண்டு போராட்டம்

நாட்டின் ஏழு முன்னணி ஊடக அமைப்புக்கள் போராட்டமொன்றை நடாத்தத் திட்டமிட்டுள்ளன. ஊடகவியலாளர்கள் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் உரிய விசாரணை நடத்தப்படாமைக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் நோக்கில் இந்தப் போராட்டம் நடத்தப்படவுள்ளது. எதிர்வரும் 29 ஆம் திகதி லிப்டன் சுற்று வட்டத்திற்கு அருகாமையில் இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்படவுள்ளது.

ஊடகவியலாளர்கள் படுகொலை செய்யப்பட்டமை மற்றும் ஊடக நிறுவனங்கள் மீதான அச்சுறுத்தல்கள் தொடர்பில் அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுக்கத் தவறியுள்ளதாக குறித்த ஊடக அமைப்புக்கள் குற்றம் சுமத்தியுள்ளன.போராட்டத்தின் பின்னர் தேசிய நூலக வளாகத்தில் நாட்டின் சட்டம், ஒழுங்கு நிலைமை குறித்து கலந்துரையாடல் நடைபெறவுள்ளது.

ஊடகவியலாளர்கள், சட்டத்தரணிகள், பல்கலைக்கழக பேராசிரியர்கள், தொழிற்சங்க உறுப்பினர்கள் உள்ளிட்ட பலரும் இந்த நிகழ்வில் பங்கேற்பார்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை உழைக்கும் பத்திரிகையாளர் சங்கம், ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரம், இலங்கை தமிழ் ஊடகவியலாளர் அமைப்பு, தென் ஆசிய சுதந்திர ஊடக அமைப்பு, சுதந்திர ஊடக அமைப்பு உள்ளிட்ட ஏழு ஊடக நிறுவனங்கள் கூட்டாக இணைந்து இந்தப் போராட்டத்தை நடத்தவுள்ளன.

# இலங்கையிலும் தடை

விஷ்வரூபம் திரைப்படத்திற்கு இலங்கையிலும் தற்காலிகத் தடை விதிக்கப்பட்டுள்ளது. உலக நாயகன் கமலஹாசனின் தயாரிப்பு மற்றும் இயக்கத்தில் உருவான இந்தத் திரைப்படத்திற்கு இலங்கை அரசாங்கம் தடை விதித்துள்ளது. இந்தத் திரைப்படம் மதவாதத்தை தூண்டக்கூடிய சாத்தியங்கள் காணப்படுவதாக ஊடக அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

இந்தத் திரைப்படம் முஸ்லிம் மக்களின் உணர்வுகளை இழிவுபடுத்தும் வகையில் அமைந்துள்ளதாக இலங்கை முஸ்லிம்கள் ஏற்கனவே எதிர்ப்பை வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# வதிரி கொலைச்சம்பவம்; சந்தேகநபருக்குப் பிணை

வதிரி கொலை வழக்கில் கைதுசெய்யப்பட்டு பருத்தித்துறை நீதவான் நீதிமன்றினால் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த இரண்டாம் சந்தேகநபரான வேலாயுதம் சுதாகரன் (வயது - 27) யாழ். மேல்நீதிமன்றினால் கடந்த திங்கட்கிழமை பிணையில் விடுவிக்கப்பட்டார்.

வதிரியில் கடந்த வருடம் மார்ச் மாதம் 24 ஆம் திகதி பகல் 1.00 மணியளவில் சிவஞானம் சிவரூபன் என்பவர் கொலைசெய்யப்பட்டார். இக்கொலை தொடர்பாக நெல்லியடிப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டவர்களில் இரண்டாம் சந்தேகநபராக வேலாயுதம் சுதாகரன் பெயர் குறிப்பிடப்பட்டிருந்தார். பருத்தித்துறை நீதிமன்றில் இவர் ஆஜர்படுத்தப்பட்டபோது இவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டிருந்தார்.

இவர் மீதான பிணைமனு யாழ். மேல்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது. கடந்த திங்கட்கிழமை பிணைமனு மீதான விசாரணை இடம்பெற்றபோது சந்தேகநபரை பிணையில் செல்ல அனுமதிக்குமாறு அவர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி ஆதாரங்களைச் சமர்ப்பித்தார். விசாரணையை மேற்கொண்ட நீதிபதி ஜே.விஸ்வநாதன் சந்தேகநபரை பிணையில் செல்வதற்கு அனுமதித்தார்.

2 இலட்சம் பெறுமதியான இரண்டு ஆட்பிணையில் செல்லுமாறும் மாதத்தில் வரும் கடைசி ஞாயிற்றுக்கிழமைகளில் நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் காலை 9.00 மணிக்கும் நண்பகல் 12.00 மணிக்குமிடையே ஆஜராகி கையெழுத்திடவேண்டும் எனவும் உத்தரவிட்டார்.

சந்தேகநபர் சார்பில் சட்டத்தரணி ரி.கணாதீபனும், அரச தரப்பில் அரச சட்டவாதி செல்வி நளினி கந்தசாமியும் ஆஜரானார்கள். (137)

INFORMATION TECHNOLOGY PARK
Jaffna, Sri Lanka.
Under the purview of the
Ministry of Telecommunication & Information Technology
MPCS Building,
127, K.K.S.Road, Jaffna, SriLanka.
Office : 021 222 3641
Fax No : 021 222 3643
அரச நிறுவனமான தகவல் தொழில்நுட்பப் பூங்காவில் கீழ்வரும் கற்கைநெறிகளுக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.
January Batch - Specially for O/L Students
Dip.in PC Application & Office Management
Dip.in Desktop Publishing
Internet & e-mail (Workshop)
விண்ணப்பப் படிவங்களை யாழ்.பிரதம தபாலகத்திற்கு முன்னால் உள்ள எமது நிறுவனத்தில் இன்று முதல் பெற்றுக் கொள்ளலாம்.
வார நாள் வகுப்புக்கள் ஆரம்பம - 01-02-13
வார இறுதி நாள் வகுப்புக்கள் ஆரம்பம் - 02-02-13
CENTRE FOR INFORMATION TECHNOLOGY
-Executive Officer-
(C/2299)

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2013 ஜனவரி 25 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.